DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan
Joy H Selvanayagam
Homelife/Future Reality Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25 வது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்
சிந்திக்கும் தமிழ் உலகின் உலகில்
$1.00
416-752-1524
416-752-6703
உதயம் 1294 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 22, 2021



# அமெரிக்க அதிபர் பைடனின் கவனம் அரசியலில் அல்ல: நாட்டு மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் தான்


அமெரிக்காவை ஒன்றிணைக்க வேண்டுமென்றால் அமெரிக்கா எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்பது தான் பைடனின் பார்வை. அதிபர் பைடனின் கவனம் அரசியலில் இல்லை. என்பதை அமெரிக்கவர்கள் நன்கு உணரவேண்டும். அவர் அமெரிக்க மக்கள் அனைவருக்குமான ஜனாதிபதி என்றே உறுதியளித்துள்ளார்.அமெரிக்க மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதிலும் வேலையில் இறங்குவதிலும் தான் அவர் கவனம் இருக்கிறது என வெள்ளை மாளிகையின் ஊடகச் செயலாளர்ஜென் சாகி குறிப்பிட்டா. .அமெரிக்க அதிபராகப் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள ஜோ பைடன் நிர்வாகத்தில் வெள்ளை மாளிகையில் நடந்த முதல் பத்திரிகையாளர் சந்திப்பில் கேட்கப்பட்ட முதல் கேள்க்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (உள்ளே விபரமான செய்திகள் 5ம் பக்கத்தில்)

# கனடிய பிரதமர் தலைமையிலான லிபரல் பாராளுமன்ற உறுப்பினர்களின் ‘தமிழ் மரபுத் திங்கள்’ இணைவழி வைபவம்

(ஸ்காபுறோவிலிருந்து லோகன் லோகேந்திரலிங்கம்)







எமது பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அவர்களின் ஏற்பாட்டில் நேற்று விழாக்கிழமை மாலை தமிழர் மரபுரிமை நாள் கொண்டாட்டங்கள் சிறப்பாக நடைபெற்றன. இணையவழி ஊடாக நடைபெற்ற இந்த வைபவத்தில் கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள் இணையவழி ஊடாக தனது முகம் காட்டி புன்னகை பூத்த முகத்துடன் உரையாற்றினார்.

பிரதமர் தனது உரையில் நேற்று மாலை பல விடயங்களைச் சுட்டிக்காட்டினார். குறிப்பாக கனடாவில் மத்திய அரசாங்கத்தின் மட்டத்தில் தமிழர் மரபுரிமை நாள் ஆண்டுதோறும் சிறப்பாக தமது பாராளுமன்ற உறுப்பினர்களால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதை மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்டிய பிரதமர் கடந்த வருடம் மார்க்கம் நகரில் தமிழ் மக்கள் கூடிக் கழித்திருக்க கொண்டாடிய நாளை ஞாபகப்படுத்தினார். மேலும் தமிழர் மரபுரிமை நாள் தொடர்பான விடயங்களை சிரத்தையுடன் எடுத்து வந்து அதில் வெற்றிகண்ட எமது பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அவர்களைப் பாராட்டினார்.

”ஜனவரியை தமிழர் மரபுரிமை மாதமாக அங்கீகரிக்க பாடுபட்டவர் ஹரி நீங்கள் தான்” என்று வெளிப்படையாகவே பாராட்டினார். அமெரிக்காவில் நேற்று முன்தினம் துணை ஜனாதிபதியாக பதவியேற்ற கமலா ஹரிஸ் பற்றிய தனது மகிழ்ச்சியைத் தெரிவித்து, அவர் தமிழ் மொழி பேசும் பாரம்பரியத்தைக் கொண்டவர் என்பதை மகிழ்ச்சியுடன் பாராட்டினார்.

அத்துடன் கனடாவில் பல மாகாணங்களிலும் முன்வரிசைப் பணியாளராக சேவையாற்றும் தமிழ் பேசும் சகோதர சகோதரிகளை மனமுவந்து பாராட்டினார்.

மேலும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி யின் பாதிப்பை கவலையுடன் குறிப்பிட்டு அதற்கு தனது கண்டனத்தையும் தெரிவித்தார். அத்துடன் இலங்கை அரசு போர்க்குற்றங்கள் தொடர்பான தனது பொறுப்புக் கூறலுக்கு அவர்களே முன்வந்து பொறுப்புக்களை ஏற்க வேண்டும் என்றும் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையின் முன்பாக இலங்கை அரசின் குற்றங்களை தொடர்ச்சியாக கொண்டு செல்ல அனைத்து நாடுகளோடும் கனடா கரங்கோர்த்து நிற்கும் என்றும் உறுதியளித்தார். மேற்படி வைபவத்தில் கனடிய அரசின் சிரேஸ்ட அமைச்சரும் தமிழ் நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான திருமதி அனிற்றா ஆனந்த் அவர்களும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்த சங்கரி அவர்களும் உரையாற்றினார்கள். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. பிரதமரும் பாராளுமன்ற உறுப்பினரும் தங்கள் தங்கள் வீடுகள் மற்றும் அலுவலகங்களிலிருந்து தீப விளக்கேற்றி தமது ஆதரவையும் வாழ்த்துக்களையும் தமிழ் மக்களுக்குத் தெரிவித்தனர்.

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8
416.568.4301 , 905.471.4050

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404

THE GUARDIAN HOME REALTY INC.

BROKERAGE, Independently Owned and Operated

# Where life begins...



வீடு வாங்க விற்க அல்லது
அது தொடர்பான விடயங்களை அறியவும்,
இலவச ஆலோசனைகளை
பெற்றுக்கொள்ளவும்

THE GUARDIAN
HOME REALTY INC.

Real Estate
முகவராக விரும்பும்
அன்பர்களே

*We recruit* and train personnels who want to become a real estate agent as a career.

*We provide* tthem an opportunity as an agent in our company.

## Contact us

F119 - 80 Nashdene Road
Scarborough ON M1V 5E4

Phone: (416) 989 - 6565 web: www.theguardianhomes.com

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## ஸ்காபுரோவில் வேலை வாய்ப்பு

**WAREHOUSE ORDER PICKER/PACKER / GENERAL HELP (PART TIME/FULL TIME)**
(For a Food distribution company)

**Job Description:**

- Order picking and packing as well as stocking up of shelves.
- Contribute to daily inbound or outbound warehouse operations.
- Palletize and wrap skids, organize warehouse space, Pick and load orders quickly and accurately and other duties as required.
- Arranging Cartons and Bags in racks and also inside the Freezer

**Requirements:**

- 1 position, Preferred Experience - 2-3 yrs. in food wholesale/distribution warehouse. Students/New Immigrants Welcome.
- Capable of lifting up to 50lbs
- Able to speak English
- Full time Shift- 11am to 7pm on weekdays. Part time also available.
- Hourly Rate - Order Picker - $17 to $19 , Packer/Helper-$16 to $18 depending upon experience.

Please send your resumes by email at siva@srimi.com or by fax at +1 647-351-7157 or
Call Ram at +1 647-831-9149 (Morning) or Siva at +1 416-666-8525 (Evening).

உதயன் கதிரோட்டம்

# அகழ்வாராச்சி என்ற பெயரில் இலங்கையில் இடம்பெறும் இனம் மற்றும் மதம் சார்ந்த அழிப்பு

அகழ்வாராச்சி என்ற பெயரில் இலங்கையில் இடம்பெறும் இனம் மற்றும் மதம் சார்ந்த அழிப்பு நடவடிக்கைகள் அரசின் நிர்வாகம் சார்ந்த செயற்பாடுகள் என்பது வெளிப்படையாக காட்ட முனைந்தாலும், அவை அரச பயங்கரவாதத்தின் செயற்பாடுகளாகவே அமைகின்றன என்பது தற்போது காட்சியளிக்கின்றன.

எந்தளவிற்கு அரசாங்கமும் இதை ஒரு அரசின் நியாயமான செயற்பாடாக காட்ட முனைந்தாலும், மறைமுகமாக இந்த அகழ்வாராய்ச்சி என்னும் பெயரோடு மேற்கொள்ளப்படுகின்ற திட்டங்கள் அனைத்தும், இராணுவத்தின் துணையோடு நடத்தப்படுகின்ற திட்டமிட்டட அரச-இராணுவ பயங்கரவாத செயற்பாடு என்றே நாம் பார்க்க வேண்டியுள்ளது.

அண்மைக்காலமாக இலங்கையில் தமிழ்ப் பிரதேசம் என்ற பார்வையிலும் சைவ சமயத்தின் குறியீடுகளாகவும் வழிபாட்டு தலங்களாகவும் விளங்கும் இடங்களை குறிவைத்து அங்கு பௌத்த மதம் சார்ந்த ஸ்தலங்களையோ அன்றி குடியேற்றங்களையோ ஏற்படுத்த முனைவது வெளிச்சமாகவே தெரிகின்றது

முல்லைத்தீவு குருந்தூர் ஐயனார் ஆலய அழிப்பு பற்றி அவர்மேலும் தெரிவிக்கையில்…

அண்மைக்காலமாக எமது வழிபாட்டுத் தலங்கள் பலவற்றை நாம் இழந்து கொண்டிருக்கின்றோம்.

அதனுடைய தொடராக பல வருடங்களாக முல்லைத்தீவு மாவட்டம் குமுளமுனை தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையில் தமிழ் மக்கள் வழிபட்டுவந்த கிராமிய வழிபாட்டோடு ஒன்றிய ஆதி ஐயனார் ஆலய சூலம் உடைத்து எறியப்பட்டு புத்தர் சிலை கொண்டுவரப்பட்டு பௌத்த வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டுளது. இது அனைத்து தமிழ் மக்கள் மத்தியிலும் மிக வேதனையான செயலாக பார்க்கப்படுகிறது.

தொடர்பே இல்லாத இடங்களில் புதிது புதிதாக இவ்வாறான செயல்களை செய்வது திட்டமிட்ட செயலாகவே எண்ணத்தோன்றுகின்றது. தற்போது ஏதோ குருந்தாசேவ பௌத்த விகாரையின் சிதைவுகள் உள்ளதாக இராணுவத்தின் ஆதரவோடு தொல்லியல் திணைக்களம் ஆய்வுகளை ஆரம்பித்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார் அவர்.

இந்த நிலையில் படிப்படியாக தமிழர் பிரதேசத்தில் முன்னரை விட மோசமான நிலையில் மொத்தமான தமிழர் வழிபாட்டு நிலங்கள் பறிபோய்க்கொண்டே இருக்கின்றது. எமது வழிபாட்டுச் சின்னங்கள் அழிக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றது. இதை அனைத்தினையும் கண்டும் காணாதது போல் கடந்து செல்கின்றனர். அரசியல் வாதிகளும் ஆன்மீகவாதிகள் அல்லது ஆன்மீக அமைப்புகளும். அவர்கள் பெயரளவிலேயே மட்டுமே அமைப்புகளாக இருக்கின்றன அன்றி இனமத நலன்களை கருத்தில் கொள்வதாக தெரியவில்லை. இந்த நிலை மாறவேண்டும் என்பதே அனைவரதும் குரலாக உள்ளது.




# பதவியேற்ற முதல் நாளே ஜோ பைடன் அதிரடியாக எடுத்த முடிவுகளை உலகத் தலைவர்கள் பாராட்டியுள்ளார்கள்



உலகின் எசமான் என்று உலக நாடுகளால் அழைக்கப்பட்டு வந்த அமெரிக்காவின் ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவு செய்யப்பட்ட கடந்த 4வருடத்தில் அதிக வீழ்ச்சியை கண்டு கொண்டது. அமெரிக்கர்களில் பலரும் பெரும்பாலான நாடுகளும் விரும்பாத பல கொள்கைப் பிரகடனங்களையும் சட்டங்களையும் உத்தரவுகளையும் பிறப்பித்து எதிர்ப்புக்களைத் தேடிக்கொண்டவர் டொனால்ட் ட்ரம்ப.'இவரது ஆட்சியில் அதிகளவிலான சர்ச்சைகளை எதிர்கொண்ட நிலையில், மக்களுக்கான தலைவராக அறியப்படும் ஜோ பைடன் அமெரிக்காவில் 46வது ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார். ட்ரம்ப் ஆட்சியில் அமெரிக்க அரசின் பல முடிவுகளால் பல்வேறு பாதிப்புகளை உலக நாடுகள் எதிர்கொண்டதை மறுக்க முடியாது. குறிப்பாக இந்தியாவுடனும் சீனாவுடனும் சர்ச்சைகள் நிலவின.

சீனா மீதான வர்த்தகப் போர் உலக நாடுகளின் வர்த்தகச் சூழ்நிலையைப் பெரிய அளவில் பாதித்தது.

இந்நிலையில் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியான ஜோ பைடன் ஆட்சியில் உலக நாடுகளுடனான அமெரிக்காவின் கொள்கை முடிவுகள், உலக நாடுகளுடனான நட்புறவு குறிப்பாகச் சீனாவுடனான நட்புறவு, வளரும் நாடுகளுக்கான கொள்கை வரைவு, பாதுகாப்புத் துறைக்கு ஒதுக்கப்படும் பட்ஜெட், பொருளாதாரத்தை மேம்படுத்த புதிய திட்ட அறிவிப்புகள் போன்றவை உலக நாடுகள் மற்றும் நிறுவனங்கள் மத்தியில் முக்கிய ஈர்ப்பாக மாறியுள்ளன.

ஜோ பைடன் பதவியேற்று விழாவில் "யுஅநசஉைய ளை டியஉம" என்ற முழக்கத்துடன், கொரோனா வைரஸ் தொற்று மற்றும் நாடு முழுவதற்குமான முடக்கம் என்ற அறிவிப்பால் அமெரிக்கப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பாதிப்பைச் சரி செய்யும் 1.9டில்லியன் டாலர் மதிப்பிலான பொருளாதார ஊக்குவிப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவது மிகவும் முக்கியமாதென்று கூறினார்.

அமெரிக்காவின் 46வது ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ள ஜோ பைடன் ஆட்சியில் துணை ஜனாதிபதியாக இந்திய அமெரிக்கரான கமலா ஹாரிஸ் உள்ளார். அத்துடன் பிடன் நிர்வாகக் குழுவில் 20க்கும் மேற்பட்ட இந்தியர்கள் இடம்பெற்றுள்ளனர். இதுவே அமெரிக்கா - இந்தியா இடையிலான நட்புறவு பெரிய அளவில் மேம்படும் என்பதற்கான சமிக்கையாக விளங்குகிறது.

அமெரிக்கா - இந்தியா இடையிலான வர்த்தகம் தடைகள் நீங்கி மேம்படும் என்ற நம்பிக்கை எழுந்துள்ளது. ஜோ பைடன் ஆட்சியில் தற்போதைய நிலவரத்தின்படி அமெரிக்கா -சீனா இடையில் இருக்கும் நெருக்கடிகள், தடைகளில் எவ்விதமான மாற்றமும் இல்லாமல் தொடரும் என்ற நம்பிக்கை நிலவுகிறது. இதேவேளையில் அமெரிக்கா இந்தியா உடனான நட்புறவும், வர்த்தக நிலையும் பெரிய அளவில் மேம்படும் எனத் தெரிகிறது. இதேபோல் அமெரிக்காவுடன் ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய இதர பசிபிக் நாடுகளுடனும் நட்புறவு மேம்படும். வெளிநாட்டு ஊழியர்கள் அமெரிக்காவிற்கு வரும் வாய்ப்புகளில் ஏற்பட்டுள்ள தடைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் பெரிய அளவிலான மாற்றங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்க ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்ற முதல் நாளிலேயே மெக்ஸிகோ சுவர், பருவ நிலை, சுகாதாரம், முஸ்லிம்கள் குறித்த ட்ரம்ப்பின் கொள்கைகள் ஆகியவற்றை திரும்பப் பெற்றுள்ளார். "மாற்றுவோம் எல்லாவற்றையும் மாற்றுவோம்" என்று கூறி பதவியேற்ற பைடன், அமெரிக்க ஜனாதிபதியான உடனேயே 15முக்கிய மாற்றங்களுக்கு கையெழுத்திட்டுள்ளார். இதன் மூலம் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் விடாப்பிடியாக பிடித்து தொடங்கி கொண்டிருந்த அத்தனை கொள்கைகளில் இருந்தும் அமெரிக்கா மாறுபட்ட நிலைப்பாட்டை எடுத்துள்ளது. இது மிகப் பெரிய சீர்திருத்தம் ஆகும்.

அமெரிக்காவின் 46வது ஜனாதிபதியாக ஜோ பைடன் நேற்றுமுன்தினம் மதியம் பதவிஏற்றார். அவர் பதவியேற்ற சிறிது நேரத்திலேயே 15முக்கிய கொள்கை ரீதியான நடவடிக்கைகளில் கையெழுத்திட்டுள்ளார். இதன் மூலம் குடியரசுக் கட்சியின் ஜனாதிபதியான டொனால்ட் ட்ரம்ப் முன்வைத்த கொள்கைகளை அப்படியே தூக்கி குப்பையில் போட்டுள்ளார். குறிப்பாக கொரோனா தொற்று மற்றும் காலநிலை மாற்ற விவாகரத்தில் அமெரிக்காவின் நிலைப்பாடு மாறி உள்ளது.

இது தொடர்பாக அவர் கூறுகையில் "நான் இன்று கையெழுத்திடும் சில நிர்வாக நடவடிக்கைகள் கொரோனா நெருக்கடியின் போக்கை மாற்ற உதவப் போகின்றன, நாங்கள் இதுவரை செய்யாத வகையில் காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடப் போகிறோம், மேலும் இனரீதியான ஒற்றுமையை நோக்கி முன்னேறுவோம். இவை அனைத்தும் ஆரம்பம்தான் " என்றார்.

மெக்ஸிகோ சுவர் குடியேற்றத்தை தடுக்கும் ட்ரம்பின் அவசர அறிவிப்பை உடனடியாக இரத்து செய்தாரஜோ பைடன் அவர்கள்.. மெக்ஸிகோவில் எல்லைச் சுவரைக் கட்டுவதற்கு நிதியளிக்க உதவுவது மற்றும் சில பெரும்பான்மை-முஸ்லிம் நாடுகளுக்கான பயணத் தடை போன்றவையும் பைடன் பதவியேற்ற முதல் நாள் அதிரடியால் முடிவுக்கு வந்துள்ளதை உலகத் தலைவர்கள் பலர் பாராட்டியுள்ளார்கள்.

# இலங்கை கடற்படையால் "நடுக்கடலில் நால்வர் படுகொலை" தமிழக மீனவர்கள் கொந்தளிப்பு

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)

இலங்கைக் கடற்படையால் மூழ்கடிக்கப்பட்ட படகிலிருந்த நான்கு தமிழக மீனவர்களில் இருவரது சடலங்கள் புதன்கிழமை (20 ஜனவரி) மாலை மீட்கப்பட்டுள்ளன. மேலும் இருவரது சடலங்களைத் தேடும் பணி தொடருகி-றது என இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

இலங்கைக் கடற்படையின் இந்தத் தாக்குதல் தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பையும் கோபாவேசத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

"இது நடுக்கடலில் நடத்தப்பட்ட படுகொலை" என்கிறார் ராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் சங்கத் தலைவர் ஜேசுராஜா. தொடர்ச்சியாக இப்படி நடைபெறும் தாக்குதல்கள் கண்டிக்கத்தக்கது இது இருநாட்டு உறவுகளை பாதிக்கும் எனவும் அவர் கூறுகிறார்.



தமிழகத்தின் ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடம் பகுதியிலிருந்து கடந்த திங்கட்கிழமை இரவு சென்ற படகுகளில் ஒரு தொகுதியினர் இலங்கையின் நெடுந்தீவுக்கு அருகில் தமது வலைகளை வீசிக் கொண்டிருந்த போது அவர்கள் மீது இலங்கை கடற்படை தமது படகுகளை மோதி தாக்குதலை நடத்தியது.

அந்தத் தாக்குதலில் "சின்னையா" என்ற அந்த மீன்பிடிப் படகு அதிலிருந்த நால்வருடன் மூழ்கியது. அந்த நால்வரில் மண்டபம் அகதிகள் முகாமிலிருந்து ஈழத் தமிழர் சாம் நேசபெருமாளும் அடங்குவார்.

கடந்த திங்கட்கிழமை இரவு மூழ்கடிக்கப்பட்ட படகையும் அதிலிருந்த இருவரின் உடல்களையும் புதன்கிழமை மாலை தாங்கள் மீட்டுள்ளதாகவும், சடலங்கள் யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெலப்பட்டதாகவும்



கடற்படை பேச்சாளர் கூறுகிறார்.

இந்தத் தாக்குதலின் போது தமது அதிவேக டோவ்ரா வகைப் ரோந்துப் படகு சேதமானதாக இலங்கைக் கடற்படையின் இணையதளத்தில் வெளியாகியுள்ள புகைப் படங்கள் குறித்தும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

"40 அடி நீளமும் 150 குதிரை சக்தி வலுவுள்ள ஒரு மரப்படகு எப்படி எ.ஃ.கினால் செய்யப்பட்ட சக்தி வாய்ந்த படகைச் சேதப்படுத்த முடியும்? இலங்கைக் கடற்படை தொடர்ந்து எமது உயிருக்கும் உடைமைகளுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது" என்கிறார் ஜேசுராஜா.

அச்சம் காரணமாகத் தனது பெயரை வெளியிட விரும்பாத மற்றொரு மீனவர் மூழ்கடிக்கப்பட்ட படகிலிருந்து தங்களைக் காப்பாற்றும்படி தமக்கு வாக்கி - டாக்கி செய்தியொன்று வந்ததை அடுத்து அங்கு சென்ற போது தாங்கள் இலங்கைக் கடற்படையால் அச்சுறுத்தி விரட்டியடிக்கப்பட்டதாகக் கூறுகிறார்.

இந்தியப் பதிவு இலக்கம் INDTN10MM 0646 கொண்ட "சின்னையா" என்ற படகில் தங்கச்சிமடம் பகுதியைச் சேர்ந்த மெசியா அந்தோனி ராஜ், உச்சிப்புளியைச் சேர்ந்த நாகராஜ் வெள்ளைச்சாமி மற்றும் செந்தில்குமார் செல்வம் மற்றும் மண்டபம் அகதிகள் முகாமிலிருந்த சாம் நேசபெருமாள் ஆகியோர் இருந்தனர்.

மூழ்கடிக்கப்பட்ட படகிலிருந்தோரைத் தேடி ராமேஸ்வரத்திலிருந்து 12 மீனவர்கள் நான்கு படகுகளில் விரைந்துள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழக காவல்துறை மற்றும் மீன்வளத்துறை ஆகியோரிடம் இலங்கைக் கடற்படை நடத்திய தாக்குதல் குறித்து புகாரளிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை மஹர சிறைச்சாலை படுகொலையின் சாட்சிகளை சித்திரவதை செய்வதாக குற்றச்சாட்டு

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)

**11 பேர்** சுட்டுக் கொல்லப்பட்ட மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற படுகொலைகளை நேரில் கண்ட சாட்சிகளை சித்திரவதை செய்வதாகவும், அவர்களை சிறைக்குள் வலுக்கட்டாயமாக தடுத்து வைத்துள்ளதாகவும் சிறை நிர்வாகம் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.



இந்த சம்பவத்திற்கு சாட்சியாக இருந்த கைதிகளை விடுவிப்பதைத் தடுப்பதன் மூலம் மஹர படுகொலைக்கான சாட்சிகளை மறைக்க அதிகா-ரிகள் முயற்சிப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நீதிமன்றம் மற்றும் குற்றப்புலனாய்வு பிரிவு விசார-ணைகளின் போதும் கைதி-களை அச்சுறுத்துவதன் மூலமும் சித்திரவதை செய்வதன் மூலமும் கட்டாய வாக்குமூலங்களைப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக கைதிகளின் உரிமைகளை பாதுகாப்பதற்கான அமைப்பு ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளது.

நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்ட போதிலும் தனது புதல்வன் இரண்டு மாதங்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக, "கைதிகளை உடனடியாக சித்திரவதை செய்வதை நிறுத்துங்கள்" என்ற தலைப்பில் கம்பஹா மாவட்ட நீதிமன்றத்திற்கு முன்னால் இடம்பெற்ற அமைதிப் போராட்டத்தில் பங்கேற்ற தந்தை ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

"இப்போது இரண்டு மாதங்கள் ஆகின்றன. இன்னமும் வெளியி-ல் விடவில்லை. சந்தேகத்தின் அடிப்படையில் அவ்வப்போது தாக்குதல் நடத்துகின்றார்கள்" என அந்தனி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

சிறை அதிகாரிகளால் தனது புதல்வர் வலுக்கட்டாயமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டிய தந்தை அந்தனி சில்வா, கைதிகளுக்கு குறைந்தபட்ச அடிப்படை சுகாதார வசதிகளை கூட சிறை அதிகாரிகள் வழங்குவதில்லை எனவும் கூறியுள்ளார்.

"அவர்களுக்கு உணவு வழங்கப்படுவதில்லை. அவர்கள் கழிப்பறைக்கு செல்ல அனுமதி வழங்கப்படுவதில்லை. ஐந்து பேருக்கு கழிப்பறைக்குச் செல்ல பொலிதீன் பையை வழங்குகின்றார்கள். குடிக்க தண்ணீர் கொடுப்பதில்லை. ஒவ்வொரு முறையும் நினைவுவரும்போதும், சிறை அதி-காரிகள் ஒவ்வொருவராக வந்து அவர்களை வெளியே அழைத்து தாக்குதல் நடத்துகின்றார்கள். பின்னர் சிறையில் அடைக்கின்றார்கள்".

தொற்றுநோய்களின் போது கைதிகளுக்கு போசாக்கான உணவு தேவைப்படும்போது சரியான உணவு கிடைப்பதில்லை என சுட்டிக்காட்டிய தந்தை அந்தனி சில்வா, பிள்ளைகளின் உயிருக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால் சிறை அதிகாரிகள் பொறுப்பேற்க வேண்டும் என வலியுறுத்தினார்.

கைகால்கள் உடைக்கப்பட்ட கைதிகள் தொடர்பில் விசாரணைகள் எதுவும் முன்னெடுக்கப்படாமல் அந்த விடயங்கள் புறந்தள்ளப்பட்டுள்ளதாக அந்தனி சில்வா ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்ட போதிலும் விடுதலை செய்யப்படாத பல கைதிகளின் உறவினர்கள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

மஹர சிறைச்சாலையில் நடந்த மனிதாபிமானமற்ற கொலைகளை நியாயப்படுத்த பிணை வழங்கப்பட்ட கைதிகள் மீது வழக்குத் தாக்கல் செய்ய சிறை அதிகா-ரிகள் ஒரு திட்டத்தை முன்னெடுத்துள்ளதாக, சிறைச்சாலைகளின் உரி-மைகளைப் பாதுகாக்கும் குழுவின் பொதுச் செயலா-ளர் சுதேஷ் நந்திமல் சில்வா தெரிவிக்கின்றார்.



"கொலையாளிகளைப் பாதுகாப்பதற்காக இவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்படுமோ என்ற வலுவான சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது. ஏனெனில் கைதிகள் இப்போது விடுவிக்கப்படாமல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்பது இது ஆதாரங்களை அழிக்கும் முயற்சி என்பதைக் காட்டுகிறது."

சிறை அதிகாரிகளின் நடவடிக்கைகள் சட்டவிரோதமானது எனவும் இது கைதிகளின் உரிமை மீறல் எனவும் சிறைக் கைதிகளின் உரிமை-களை பாதுகாக்கும் குழுவின் சார்பில் சுதேஷ் நந்திமல் மற்றும் சட்டத்தரணி சேனக பெரேரா ஆகியோர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

இதனைத் தடுப்பதற் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், கைதிகளின் உறவினர்களின் கையெழுத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மஹர சிறைச்சாலை படுகொலையில் 11 பேர் கொல்லப்பட்டதோடு, 100ற்கும் மேற்பட்டோர் காயமடைந்ததோடு, அனைவரும் சுட்டுக்கொல்லப்பட்டதாக நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவின் துணை ஜனாதிபதியாகும் முதல் பெண்மணி கமலா ஹாரிஸ் பதவிப்பிரமாணம்


அமெரிக்காவின் 49-வது துணை ஜனாதிபதியாக கமலா ஹாரிசுக்கு அமெரிக்காவின் உயர் நீதிமன்ற நீதிபதி சோனியா சோட்டாமேயர் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். கமலா ஹாரிஸ் தனது நெருங்கிய குடும்ப நண்பரான ரெஜினா ஷெல்டன் மற்றும் அமெரிக்க சுப்ரீம் கோர்ட்டின் முதல் ஆப்பிரிக்க வம்சாவளி நீதிபதி துர்கூட் மார்ஷல் ஆகியோருக்கு சொந்தமான 2 பைபிள்களின்பேரில் பதவிப்பிரமாணம் எடுத்துக்கொண்டார்.



51 வயதான இவர்தான் இந்தப் பதவிக்கு வரும் முதல் பெண்மணி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவரது நியமனத்துக்கு ஆதரவாக 84 செனட் உறுப்பினர்களும் எதிராக 10 உறுப்பினர்களும் வாக்களித்தனர். உளவுத் தகவல்கள் எவ்வளவு கடினமானவையாக இருந்தாலும் அசௌகரியமான தகவல்களாக இருந்தாலும் அவற்றைத் தருவதே தமது பதவி என்று பார்ப்பதாக அவர் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

ஏற்கெனவே ஒபாமா நிர்வாகத்தில் தேசியப் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார் இவர். ஆனால் இவரது அரசுப் பணிகளை விட அதற்கு முந்திய இவரது வாழ்க்கை சுவாரஸ்யமானது. சட்டக் கல்லூ ரியில் படிப்பதற்கு முன்பு ஜப்பானில் ஜூடோ கற்று அதில் மண் நிறத்தில் பட்டி வாங்கியவர் இவர். ஒரு பழைய விமானத்தை மீளக் கட்டமைத்து அதை மீண்டும் சிதைத்தவர். சிக்காகோ பல்கலைக்கழகத்தில் கோட்பாட்டு இயற்பியல் படித்தவர். மெக்கானிக் ஷாப்பில் கார் எஞ்சின்களை ரிப்பேர் செய்தவர். தனியாக ஒரு காபி கடை நடத்தியவர். ர். இவ்வாறாக பல துறைகளை சவால்களுடன் தாண் வந்தவர்கள் கமலா ஹரிஸ் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



# அமெரிக்காவின் 46வது ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவி ஏற்றார்

உலகின் எசமானக் கருதப்படும் அமெரிக்காவின் 46-வது ஜனாதிபதியாக ஜோ பைடனுக்கு அமெரிக்காவின் உயர் நீதி மன்ற தலைமை நீதிபதி ஜான் ராபர்ட்ஸ் புதன்கிழமைநண்பகல் 12 மணிக்கு (இலங்கை இந்திய நேரப்படி இரவு 10.30 மணி) பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். ஜோ பைடன் 127 ஆண்டு கால பாரம்பரியம் கொண்ட குடும்ப பைபிளை அவரது மனைவி ஜில் பைடன் கையில் பிடித்திருக்க அதன் பேரில் பதவி ஏற்றுக்கொண்டா உலகளவில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் கடந்த நவம்பர் 3-ந் தேதி நடைபெற்றது. அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசு கட்சியின் டொனால்டு டிரம்பை வீழ்த்தி ஜனநாயக கட்சி வேட்பாளர் ஜோ பைடன் (வயது 78) அமோக வெற்றி பெற்றார். இவரது முழுப்பெயர் ஜோசப் ராபினெட் பைடன் ஆகும்.

துணை ஜனாதிபதியாக ஜனநாயக கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் தமிழகத்தை பூர்வீகமாக கொண்டவருமான பெண் தலைவர் கமலா ஹாரிஸ் (56) தேர்ந்தெடுக்கப்பட்டார். அமெரிக்காவில் புதிய ஜனாதிபதி துணை ஜனாதிபதி பதவி ஏற்பு விழா ஜனவரி 20-ந் தேதி நடைபெறுவது மரபாக உள்ளது.

அந்த மரபுப்படி தலைநகர் வாஷிங்டனில் அமைந்துள்ள நாடாளுமன்ற கட்டிடத்தின் மேற்கு பகுதியில் புதிய ஜனாதிபதி துணை ஜனாதிபதி பதவி ஏற்பு விழா நேற்று அமெரிக்க நேரப்படி காலை சுமார் 11 மணிக்கு (இலங்கை இந்திய நேரப்படி நேற்றிரவு 9.30 மணி) கோலாகலமாக தொடங்கியது. கொரோனா வைரஸ் பெருந்தொற்று காலம் என்பதால் அதற்கான கட்டுப்பாடுகள் கடைபிடிக்கப்பட்டன. அனைவரும் முக கவசம் அணிந்திருந்தது குறிப்பிடத்தக்கது. பதவி ஏற்பு விழா ஜோ பைடன் குடும்பத்தினருக்கு நெருக்கமான ஏசு சபை போதகர் லியோ ஜெரேமியா ஓ டொனோவன் பிரார்த்தனையுடன் தொடங்கியது.

அமெரிக்காவின் 49-வது துணை ஜனாதிபதியாக கமலா ஹாரிசுக்கு அந்த நாட்டின் சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி சோனியா சோட்டாமேயர் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். கமலா ஹாரிஸ் தனது நெருங்கிய குடும்ப நண்பரான ரெஜினா ஷெல்டன் மற்றும் அமெரிக்க சுப்ரீம் கோர்ட்டின் முதல் ஆப்பிரிக்க வம்சாவளி நீதிபதி துர்கூட் மார்ஷல் ஆகியோருக்கு சொந்தமான 2 பைபிள்களின்பேரில் பதவிப்பிரமாணம் எடுத்துக்கொண்டார்.



இந்த பதவி ஏற்பு விழா முன் எப்போதும் இல்லாத வகையில் 25 ஆயிரம் தேசிய பாதுகாப்பு படையினரின் பாதுகாப்பில் நடைபெற்றது.

• பங்கேற்ற பிரபலங்கள்

விழாவில் முன்னாள் ஜனாதிபதிகள் ஒபாமா ஜார்ஜ் புஷ் பில் கிளிண்டன் அவர்களது மனைவிமார் மிச்செல்லி ஒபாமா லாரா புஷ் ஹிலாரி கிளிண்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

• டிரம்ப் கலந்து கொள்ளவில்லை.

இந்த பதவி ஏற்பு விழாவில் விடைபெற்றுச்சென்ற ஜனாதிபதியான டிரம்ப் கலந்து கொள்ளவில்லை. இருப்பினும் அவர் நாங்கள் எங்கள் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறோம். அவர்களுக்கு அதிர்ஷ்டம் வாய்க்கவேண்டும். இது முக்கியமான வார்த்தை என கூறி வாழ்த்து தெரிவித்தார். அவர் அத்துடன் வாஷிங்டனில் இருந்து புளோரிடாவுக்கு புறப்பட்டு சென்றார். அதே நேரத்தில் விடைபெற்றுச்சென்ற துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் விழாவில் கலந்து கொண்டார். பொதுமக்களுக்கு பதிலாக அமெரிக்க தேசிய கொடிகள் இடம் பெற்றிருந்தன. விழாவில் பிரபல பாடகி லேடி காகா என்று அழைக்கப்படுகிற ஸ்டெபானி ஜோன் ஏஞ்சலினா ஜெர்மனோட்டா தேசிய கீதம் பாடினார். பதவி ஏற்பு விழா முடிந்ததும் ஜனாதிபதி ஜோ பைடன் நாட்டு மக்களுக்கு உரை ஆற்றினார்.

• ஜோபைடன் தனது கன்னிப்பேச்சில் கூறியதாவது:

அமெரிக்காவில் ஆட்சிமாற்றம் அமைதியாக நடந்து முடிந்துள்ளது. அமெரிக்க மக்கள் தங்களின் கடமை அறிந்து செயல்பட வேண்டும். நமக்கும் நமது குழந்தைகளுக்குமான சிறந்த உலகத்தை உருவாக்குவோம். பல அழுத்தங்களை கடந்து மக்களாட்சி மலர்ந்துள்ளது. ஒட்டுமொத்த மக்களுக்கான ஜனாதிபதியாக நான் இருப்பேன்.

கொரோனாவை வென்று மீள்வோம். அமெரிக்காவையும் அமெரிக்க ராணுவத்தைவும் கடவுள் காக்கட்டும். பயங்கரவாதம் முடிவுக்கு வர வேண்டும். பெருந்தொற்று வறுமை ஒழிய அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று ஜோபைடன் பேசினார்.

# அதிபர் பைடனின் கவனம் அரசியலில் அல்ல நாட்டு மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் தான்

அமெரிக்காவை ஒன்றிணைக்க வேண்டுமென்றால் அமெரிக்கா எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்பது தான் பைடனின் பார்வை. அதிபர் பைடனின் கவனம் அரசியலில் இல்லை. அமெரிக்க மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதிலும் வேலையில் இறங்குவதிலும் தான் அவர் கவனம் இருக்கிறது என வெள்ளை மாளிகையின் ஊடகச் செயலாளர்ஜென் சாகி குறிப்பிட்டா.

அமெரிக்க அதிபராகப் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள ஜோ பைடன் நிர்வாகத்தில் வெள்ளை மாளிகையில் நடந்த முதல் பத்திரிகையாளர் சந்திப்பில் கேட்கப்பட்ட முதல் கேள்க்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். புதிய நிர்வாகத்தின் ஊடகச் செயலராக ஜென் சாகி என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர்தான் இந்த முதல் செய்தியாளர் சந்திப்பை நடத்தினார். சுமார் 50 நிமிடங்கள் இந்த சந்திப்பு நீடித்தது.

அமெரிக்க மக்களின் நம்பிக்கையை வளர்த்தெடுப்பதுதான் பைடன் நிர்வாகத்தின் முக்கிய நோக்கமாக இருக்கும் என்றார் ஜென் சாகி. என்னை இந்தப் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு அதிபர் பைடன் என்னிடம் கேட்ட போது பத்திரிகையாளர்கள் சந்திப்பில் உண்மையையும் வெளிப்படைத்தன்மையையும் கொண்டு வருவது எவ்வளவு முக்கியமானது என விவாதித்தோம் என்றார் ஜென் சாகி. அவர் பேசி முடித்த பிறகு பத்திரிகையாளர்களுக்கான கேள்வி நேரம் தொடங்கியது.

துல்லியமான உண்மைகளை கொண்டு செல்லும் கடமை

- நீங்கள் எதற்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள்? அதிபர் ஜோ பைடன் மதிப்பை உயர்த்துவதற்கா? அல்லது வெளிப்படையாக உண்மையை பகிர்வதற்கா? என அசோசியேட்டட் பிரஸ் செய்தி முகமை சார்பில் முதல் கேள்வி கேட்கப்பட்டது.

அதற்கு பதில் அளித்த ஜென் சாகி

சுதந்திரமான பத்திரிகைகளின் பங்களிப்பு மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. நாம் இருவரும் முரண்படும் நேரங்கள் வரலாம் ஆனால் நம் இருதரப்புக்கும் அமெரிக்க மக்களிடம் துல்லியமான உண்மையைக் கொண்டு செல்லவேண்டும் என்கிற ஒரு பொது நோக்கம் இருக்கிறது என்றார்?

அரசின் செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மையையும் உண்மையையும் கொண்டு வர தானும் அதிபர் பைடனுடன் பணியாற்றப்போவதாக குறிப்பிட்டார் ஜென். பொதுவாக அமெரிக்க ஊடக செயலர்கள் பத்திரிகையாளர்களுடன் நல்லுறவில் இருந்ததில்லை.

டிரம்பின் பதவியேற்புக்குதான் வரலாறு காணாத அளவில் அதிக அளவில் பார்வையாளர்கள் கலந்து கொண்டார்கள் என டிரம்ப் ஆட்சியின் முதல் வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் சியன் ஸ்பைசர் கூறி சர்ச்சையானது நினைவுகூரத்தக்கது. மெக்ஸிகோ நகர கொள்கை மற்றும் ஹைட் சட்டத் திருத்தம் ஆகிய கருக்கலைப்பு நிதி ஆதரவு குறித்த இரு முக்கிய சட்டங்களைப் பற்றிக் கேள்வி எழுப்பினார் ஒரு பத்திரிகையாளர்.




கருக்கலைப்புக்கு அமெரிக்க மத்திய அரசின் நிதியை வழங்காமல் தடுக்கும் சட்டம் தான் இந்த ஹைட் சட்டத்திருத்தம். இந்த சட்டத் திருத்தத்தை பைடன் முன்பு ஆதரித்து வந்தார். இந்த 2020 அமெரிக்க அதிபர் தேர்தல் பிரசாரத்தின் போது அவர் தன் நிலையை மாற்றிக் கொண்டார். அனைத்து மருத்துவம் சார்ந்த வி'யங்களும் ஒருவரின் உரிமை என்று தான் நம்புவதாகக் கூறினார் பைடன். இது குறித்து கேள்வி எழுப்பிய போது அதிபர் பைடன் தேவாலயத்துக்கு தொடர்ந்து செல்லும் ஒரு கத்தோலிக்க கிறிஸ்துவர். இதற்கு மேல் இது குறித்துக் கூற என்னிடம் எதுவும் இல்லை என்றார் ஜென்.

- ஒற்றுமை என்கிறீர்களே டிரம்ப் கண்டன தீர்மானம் என்ன ஆகும்?

ஜோ பைடன் ஒற்றுமை எனக் கூறுவது உண்மை என்றால் முந்தைய அதிபர் டிரம்பின் மீது நிறைவேற்றப்பட்டிருக்கும் கண்டனத் தீர்மானத்தை கைவிட்டிருக்க வேண்டுமே? எனக் கேள்வி எழுப்பப்பட்டது.

அமெரிக்க மக்களைப் போலவே அமெரிக்க செனட் சபையும் பல வேலைகளை ஒரே நேரத்தில் செய்யும். செனட் அமெரிக்க மக்கள் தொடர்பான பணிகளைச் செய்யும் அதே நேரத்தில் தன்னுடைய அரசியலமைப்புப் பணிகளையும் செய்யும் எனக் கூறினார் ஜென் சாகி.

அமெரிக்காவை ஒன்றிணைக்க வேண்டுமென்றால் அமெரிக்கா எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்பது தான் பைடனின் பார்வை. அதிபர் பைடனின் கவனம் அரசியலில் இல்லை. அமெரிக்க மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதிலும் வேலையில் இறங்குவதிலும் தான் அவர் கவனம் இருக்கிறது எனக் குறிப்பிட்டார் அவர்.

ஏற்கனவே ஒரு வாரத்துக்கு முன் பிரதிநிதிகள் அவை டிரம்புக்கு எதிரான கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டது. இன்னும் செனட் அவை தன் விசாரணையைத் தொடங்கவில்லை. ஓர் அமெரிக்க அதிபர் தன் பதவிக் காலத்துக்குப் பிறகும் கண்டனத் தீர்மானத்தை எதிர்கொள்வது இதுவே முதல் முறை எனவும் கூறப்படுகிறது.

# அமெரிக்க அதிபர் ஜோ பைடன் பதவியேற்றவுடன் கையெழுத்திட்ட உத்தரவுகள் இவைதான்



கடந்த புதன்கிழமை உலக மக்கள் அனைவராலும் ஆவலுடன எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அமெரிக்க அதிபராக புதிதாகப் பதவியேற்றுள்ள ஜனநாயக கட்சியின் ஜோ பைடன் முதல் நாளிலேயே மின்னல் வேகத்தில் பல உத்தரவுகளில் கையெழுத்திட்டார்.

இதற்குமுன் எந்த அமெரிக்க அதிபரும் பதவியேற்ற முதல் நாளில் கையெழுத்திட்ட ஆணைகளின் எண்ணிக்கையைவிட பைடன் கையெழுத்திட்ட ஆணைகளின் எண்ணிக்கை அதிகம்.

பதவியேற்ற முதல் நாளில் பைடன் கையெழுத்திட்ட நிர்வாக ஆணைகள் 15. அதிபரின் குறிப்புகள் என்று பொருள்படும் பிரசிடென்ஷியல் மெமோக்கள் -2.

பதவியேற்ற முதல் நாளில் டிரம்ப் 8 உத்தரவுகளில் கையெழுத்திட்டார். ஒபாமா 9 உத்தரவுகளில் கையெழுத்திட்டார். ஜார்ஜ் டபிள்யூ புஷ் 2 உத்தரவுகளிலும் கிளிண்டன் 3 உத்தரவுகளிலும் கையெழுத்திட்டனர்.

அவர் கையெழுத்திட்ட முதல் உத்தரவுகளில் முக்கியமானவை என்ன?

• பாரீஸ் பருவநிலை ஒப்பந்தம் - முக கவசம்

பாரீஸ் பருவ நிலை ஒப்பந்தத்தில் மீண்டும் அமெரிக்காவை சேர்ப்பதற்கான நடைமுறையைத் தொடக்குவதற்கான ஒரு நிர்வாக உத்தரவைப் பிறப்பித்தார் பைடன். பருவநிலை மாற்றம் புதிய அமெரிக்க நிர்வாகத்தின் முன்னுரிமைகளில் ஒன்று என்று கூறப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய கீஸ்டோன் எக்ஸ் எல் குழாய் அமைப்புத் திட்டத்துக்கு அளிக்கப்பட்ட அதிபர் ஒப்புதலை பைடன் திரும்பப் பெற்றார். இந்த திட்டத்துக்கு எதிராக சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் பூர்வகுடி அமெரிக்கர்களும் 10 ஆண்டுகளாகப் போராடி வருகிறார்கள். வெள்ளிக்கிழமை கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுடன் பைடன் தொலைபேசியில் பேசும்போது இந்த விவகாரத்தை விவாதிப்பார் என்று வெள்ளை மாளிகையின் புதிய ஊடகச் செயலாளர் ஜென் சாகி தெரிவித்தார்.

அமெரிக்க மக்கள் கொரோனா பரவலைத் தடுப்பதற்காக முகக் கவசம் அணிவது அவசியம் என்பது தொடர்பாகவும் அவர் உத்தரவு பிறப்பித்தார்.

• முஸ்லிம்கள் மெக்சிகோ இனப் பாகுபாடு

சில முஸ்லிம் நாடுகள் மீது டிரம்ப் விதித்த பயணத் தடைகளை பைடன் ரத்து செய்து உத்தரவிட்டார்.

மெக்சிகோ - அமெரிக்கா இடையே தடுப்புச் சுவர் கட்டும் பணிக்கு நிதி அளிக்கும் வகையில் டிரம்ப் பிறப்பித்த அவசரகால உத்தரவை பைடன் திரும்பப் பெற்றார்.

இனப்பாகுபாடு பாலின சமத்துவம் தொடர்பான வேறு சில உத்தரவுகளையும் பைடன் பிறப்பித்தார்.

• உலக சுகாதார நிறுவனம்

உலக சுகாதார நிறுவனத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறும் என்று கூறிய டொனால்டு டிரம்ப் அதற்கான நடைமுறைகளையும் தொடங்கியது. இப்போது அந்த நடைமுறைகள் நிறுத்திவைக்கப்படும். இதனை ஐ.நா. தலைமைச் செயலாளர் அன்டோனியா குட்டரஸ் வரவேற்றுள்ளார்.

கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க ஒரு அலுவலகம் அமைக்கப்படும்.

டிரம்ப் காலத்தின் கொள்கைகளில் மாற்றங்கள் கொண்டுவரும் விஷயத்தில் தாம் தாமதம் காட்டப் போவதில்லை என்பதும் கொரோனா உலகத் தொற்று காரணமாக அமெரிக்கா வரலாற்றுச் சிக்கலில் இருக்கும் நிலையில் வேகமாக முடிவெடுக்கவேண்டியதாக புதிய அதிபர் பதவி இருக்கும் என்பதும் இந்த அதிவேக உத்தரவுகள் சொல்லும் சேதிகள்.

அமெரிக்க அரசில் நிர்வாக உத்தரவுகள் எனப்படும் எக்சிகியூட்டிவ் ஆர்டர்கள் என்பதன் பொருள் என்ன?

நிர்வாக உத்தரவுகளை ஒரு அதிபர் பிறப்பிக்க முடியும். அவற்றுக்கு நாடாளுமன்ற ஒப்புதல் பெறவேண்டியதில்லை. ஆனால் ஒரு அதிபர் இப்படி பிறப்பித்த உத்தரவு ஒன்றினை நாடாளுமன்றம் விவாதித்து நிராகரிக்க வழி உண்டு.

நாடாளுமன்ற நிராகரிப்பை தமது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அதிபர் ரத்து செய்யவும் முடியும். ம இதே வேளை மந்திரி சபைட் உறுப்பினர்களாக பைடன் நிர்வாகம் பரிந்துரைத்த பெயர்களில் ஒருவரை செனட் உறுதி செய்துள்ளது.

ஏவ்ரில் ஹெய்ன்ஸ் தேசிய உளவு நிறுவனத்தின் இயக்குநராக நியமிக்கப்பட்டதை செனட் உறுதி செய்துள்ளது.

மந்திரிசபைக்கு பரிந்துரைக்கப்பட்ட பிறர் பெயர்களுக்கும் செனட் விரைவாக ஒப்புதல் தரவேண்டும் என்று பைடன் நிர்வாகம் விரும்புகிறது. ஆனால் முதல் நாளில் அதற்கான ஒப்புதல் வருவதற்கு வாய்ப்பில்லை எனவும் கூறப்படுகின்றது



# வடக்கு இலங்கையில் போர் வடுக்கள் இன்னும் காட்சிகளாக உள்ளன

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)



இலங்கையின் வடக்குப் பகுதியில் அன்றாட வாழ்க்கை போரின் எச்சங்களில் காட்சிகளாக ஆழமாக மூழ்கியுள்ளது. நீதியும் நியாயமும் எட்டாக்கனியாகவுள்ள நிலையில், இந்தச் சிதிலங்கள் இலங்கையில் விரிசல்களிக்கிடையே சமாதானம் என்பது காணல் நீர் என்பதைக் காட்டுகின்றன.

இடிபாடுகளுக்கு மத்தியில் வாழ்பவர்கள் போர் இன்னும் ஏதோ ஒரு வகையில் நீடிக்கிறது என்று வலியுறுத்துகிறார்கள். அதிலும் உயிர் பிழைத்தவர்கள் தொடர்ச்சியாக எதிர்கொண்ட துன்புறுத்தல்கள் அந்த நிலப்பரப்பில் பொறிக்கப்படாத கல்வெட்டுக்களாகக் காட்சியளிக்கின்றன. இலங்கை அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் போர் முடிந்த பத்தாண்டுகளுக்கும் மேலாகின்றன. சுதந்திரமான தமிழர் தாயகத்துக்கான விடுதலைக்காக முப்பது ஆண்டுகள் நடைபெற்ற ஆயுதப்போராட்டமும் அதன் தடயங்களும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. "வடக்கின் வசந்தம்", "கிழக்கின் உதயம்" என்றெல்லாம் கடன்கள் மூலம் முன்னெடுக்கப்பட்டும் இராணுவமயப்படுத்தப்பட்ட "அபிவிருத்தி" ஆகியவை மேல் பூச்சுக்களாகவே காணப்படுகின்றன. தமது அபிலாஷகளை நிறைவு செய்து கொள்ள விழையும் அரசு அதை வன்முறைகளின் இடிபாடுகள் மீதே கட்டியெழுப்பட்டன. அவ்வகையில் அந்தத் தீவில் "சமாதானம்" என்பது குற்றமிழைத்தவர்களுக்கு சொந்தமாகியது. "மரங்கள்கூட இங்கு புதிதாகவுள்ளன" என்கிறார் நீண்ட காலமாக பேச்சு வார்த்தைகளில் அனுசரணையாளராக இருந்த ஜூட். அவரது நாற்பதாண்டுக்கால வாழ்வு வடக்கே யாழ்குடாநாட்டில், போருக்கு மத்தியிலேயே கழிந்தது.



ஷெல்லடி காரணமாக முறிந்தும் எரிந்தும் போன பனை மரங்களின் கருகிய அடிப்பகுதிகளும், கைவிடப்பட்ட வீடுகளின் கூரைகளும் இன்றும் போரின் எச்சத்தின் சாட்சியங்களாக உள்ளன. நீல மலர்கள் பூத்த புதர்களே அங்கு காட்சியளிக்கின்றன.


இங்கு அமைதி என ஒன்று இருந்தால், அதை நாங்கள் இன்னும் காணவில்லை, அதை இன்னும் உணரவில்லை. வடக்கு இலங்கையில் நிலப்பரப்பு இன்று வெற்றி பெற்று ஆக்கிரமித்துள்ளோரின் குறியீடுகளால் நிரம்பியுள்ளது. வெற்றி பெற்ற அரசின் மொழியின் அதன் கலாச்சாரமும் அங்கு முன்னெடுக்கப்பட்டு அந்தப் பகுதி மாற்றியமைக்கப்படுகிறது. புதிய சாலைகள் மற்றும் புதிய சரித்திரங்கள் அரசின் மொழியில் திணிக்கப்படுகின்றன.



அதேவேளை ஆங்காங்கே சிறிதும் பெரியதுமாக இப்போது சில எதிர்ப்புகள் எழுந்துள்ளன. அவை நினைவுகூர்தல், மீட்டெடுத்தல், உறுதிப்பாட்டைக் காட்டுதல் மற்றும் முன்னேறுதல் ஆகியவற்றில் வெளிப்படுகிறது.

போரின் தாக்கங்கள் அதற்கு பிறகான காலத்தில் எதிர்பாராத விதமாக அங்கு படிமங்களாகப் பொதிந்துள்ளன. அங்கு காட்சிப் பொருட்களாகத் தெரியும் மனிதாபிமான உதவிகள் மற்றும் வளர்ச்சி ஆகியவை ஒற்றுமை மற்றும் தோல்விகள் ஆகியவை ஏதோ முதலாம் உலக நாடுகளின் பெருந்தன்மையைக் காட்டுவது போல் இருந்தாலும், அது அரசின் திறமையின்மை மற்றும் புறக்கணிப்பையே காட்டுகிறது.

பன்னாட்டு அமைப்புகளின் சின்னங்கள் பெரிய வெள்ளை எழுத்துக்களில் சிறிய கான்கிரீட் வீடுகளின் கூரைகள், டின்கள் ஆகியவற்றில் காண முடிகிறது. ஆனால் அவை வான்வெளித் தாக்குதல்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும், அளிக்கப்பட்ட பணம் சிறப்பாகச் செலவிடப்பட்டுள்ளது என்பதைக் காட்டுவதாகவும் உள்ளன. மேலும் அவை அற்பத்தனமாக உலகமயமாதலையும் காட்டுகின்றன. சாலை சமிஞ்கைகள், தண்ணீர் தொட்டிகள், பாடசாலை பைகள், தண்ணீர் போத்தல்கள், குடைகள் மற்றும் பிரம்புப் பாய்கள் ஆகிய அனைத்திலும் காணப்படும் அந்தச் சின்னங்கள் போரினால் பாதிக்கப்பட்டு தமது வாழ்வை மீண்டும் கட்டமைக்கமுயல்பவர்களுக்குச் சொந்தமான இடங்களில் துண்டுகளாக வீசப்பட்டுள்ளன.



போருக்குப் பின்னரான காலப் பகுதி உண்மை மற்றும் நீதிக்காக பொதுமக்களின் போராட்டம், இராணுவமயமாதல், நில அபகரிப்பு ஆகியவை நிரம்பியவையாக இருக்கின்றன. காணாமல் போனவர்களின் குடும்பங்கள் நடத்திய போராட்டங்கள் இதில் முக்கியமானது. கடந்த 1970கள் தொடக்கம் வலிந்து காணாமல் ஆக்கப்படுவது அரச பயங்கரவாதத்தின் ஒரு கொடுங்க்கோல் நடவடிக்கையாக இருந்துள்ளது. போர்க் காலத்தில் "சந்தேக நபர்கள்" மற்றும் ஹஅரசுக்கு எதிரானவர்களின்ஹ கைதுகளும் கடத்தல்கள் காரணமாக ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். இதில் 2009ல் போர் முடிந்த நிலையில் இராணுவத்திடம் சரணடைந்தவர்களும் அடங்குவர்.




கடந்த 2017 பிப்ரவரி மாதம் தொடக்கம், இன்று வரை 1400 நாட்களைக் கடந்து, தமது சொந்தங்களின் இருப்பிடத்தை அறிந்து கொல்லும் போராட்டத்தை அவர்களின் உறவினர்கள் முன்னெடுத்து வருகின்றனர். அவர்கள் அதற்கான பதில்களைக் கோரிய போது அது அரசால் உதாசீனப்படுத்தப்பட்டது அல்லது குடிசன மதிப்பீடு எனும் காத்திரமில்லாத அரச நிர்வாக வழிமுறைகள் மற்றும் சாட்சியங்கள் போன்ற காரணங்களால் புறந்தள்ளப்பட்டது. அதேவேளைக் குற்றச்சாட்டுக்கு ஆளானவர்களை நீதியின் முன் நிறுத்தும் வழிமுறைகள் தோல்வியடைந்துள்ளதையும் அவை தீவிரமாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தும் போராட்டங்கள் தொடருகின்றன. அட்டைகளில் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதப்பட்ட பதாதைகளுடன் போராடும் உறவினர்கள் அதற்கு பலம் சேர்க்கும் விதமாக காணாமல் போரோனின் புகைப்படங்களை அவர்கள் பிராதனமாக தமது போராட்டத்தில் காட்சிப்படுத்தி வருகின்றனர். அந்தப் போராட்டக்காரர்கள் உறுதியான வகையில் பறிக்கப்பட்ட தமது உறவுகளின் வாழ்க்கைக்கு நீதி கோரி நடமாடும் நினைவுகளாக அந்தப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.



போர் முடிந்து பல ஆண்டுகளானாலும், போரின் உயிரிழந்த தமிழர்கள் சமூகமாக ஒன்று கூடி நினைவு கூர்வது அரசால் தடுக்கப்பட்டது. தேசத்திற்காக உயிரிழந்தவர்களையும் அவர்கள் செய்த தியாகங்களும் அரசியலாக்கப்படுவதும் அத்துடன் நெருக்கமாக இணைந்துள்ள காணொளி கலாச்சாரமும், வட இலங்கையின் பொது வெளிகள், வீடுகள், கடைகள் என்று எங்கும் வியாபித்துள்ளன. அந்தப் போராட்டம் பல தசாப்தங்களாக நிலவும் ஒரு இனம் - தேசியம் சார்ந்த போராட்டத்தின் ஒருங்கிணை வடிவமாகவுள்ளது. போரின் வடுக்களிலிருந்து மக்கள் மீள்வதற்கு முயலும் நிலையில் தொடர்ச்சியாக அவர்கள் இரகசியமாகவோ அல்லது வெளிப்படையாகவோ தீவிரமாகக் கண்காணிக்கப்படுவது, அச்சுறுத்தப்படுவது போன்றவை தொடருகின்றன. எதிர்வரும் மே மாதம் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட மோசமான படுகொலையின் வருடாந்திர நினைவு நாள் மீண்டும் வருகிறது. மணற்பாங்கான அந்த இடத்தில் இன்னும் முள்ளிவாய்க்காலின் இறுதி யுத்தத்தின் போது அரச பயங்கரவாதத்தின் காரணமாக உயிரிழந்தவர்களின் உடுப்புகள், சமையல் பாத்திரங்கள், குடும்ப புகைப்படத் தொகுப்பு, வானொலிகள், பகுதியளவில் எரிந்த பாடசாலைப் பைகள் மணலில் புதையுண்டு வன்முறைகளின் சாட்சியங்களாக இருக்கின்றன. அந்த வன்முறைச் சுவடுகள் இப்போது முற்றாக மணலில் புதைக்கப்பட்டுள்ளன.



காட்சிப் பொருட்களாக, காணொளிகளாக, புகைப்படங்களாக, சாட்சியங்களாக, தடயவியல் மற்றும் வரைபடங்கள் போன்று மறுக்க முடியாத வகையில் ஏராளமான ஆதாரங்கள் இருந்தும் இலங்கை அரசு தாங்கள் முன்னெடுத்த "மனிதாபிமான நடவடிக்கையில்-பொதுமக்கள் யாரும் உயிரிழக்கவில்லை" என்று தொடர்ந்து கூறி வருகிறது. ஆனால் ஆண்டு தோறும் அந்த இடத்தில் அடக்குமுறைகளையும் மீறி உறுதியுடன் கூடும் உறவுகள் தெரிவிக்கும் செய்தி இதற்கு மாறுபட்டுள்ளது.

மன்னார் வளைகுடாவிலுள்ள இரணைதீவில் ஐந்து சிறிய தேவாலயங்கள் உள்ளன. கடந்த 1992 ஆம் ஆண்டில் இலங்கை கடற்படைக்கு, கடற்புலிகளுக்கும் இடையே நடைபெற்ற கடுமையான மோதலில் அங்கிருந்த தமிழ் மீனவர் சமூகம் இரணைமாதா நகருக்கு ஓடும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். அங்கேயே அவர்கள் இரண்டு தசாபத்தங்களுகு இடம்பெயர்ந்து வாழும் நிலைக்கு ஆளானார்கள். எனினும் ஏப்ரல் 2018ல் மிகவும் துணிச்சலான ஒரு நடவடிக்கையில், இரணைதீவுப் பகுதியைச் சேர்ந்த பெண்கள் தலைமையிலான குழுவொன்று தாங்கள் முன்னர் வாழ்ந்த இடங்களை மீட்டது. அந்த தீவு சண்டையால் பாதிக்கப்படவில்லை என்றாலும், இலங்கை கடற்படை அந்தத் தீவை ஆக்கிரமித்து பொதுமக்களின் நிலங்களில் முகாம் அமைத்துள்ளது. தொடர்ச்சியாக நடைபெற்ற போராட்டங்கள் அரசால் புறக்கணிக்கப்பட்ட நிலையில் பெண்கள் வளர்ச்சி சமூகத்தின் சார்பில் இரகசியமாக முன்னெடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கையில் அந்தச் சமூக உறுப்பினர்கள் இயந்திரப் படகுகளில் வெள்ளைக் கொடிகளை ஏற்றியபடி அந்தத் தீவுக்குச் சென்றனர்.





அங்குள்ள இரணைமாதா தேவாலயம் நீண்ட காலமாக கைவிடப்பட்ட தமது வீடுகளுக்குத் திரும்பி மீண்டும் வாழத் தொடங்கியவர்களுக்கு அடைக்கலம் தரும் தலமாக மாறியது. பலவிதமான தட்டுப்பாடுகள் இடையூறுகள் சிரமங்கள் ஆகியவற்றின் மத்தியில் அவர்கள் தாங்கள் வாழ்ந்த இடத்துக்கு திரும்பினர். அப்படி திரும்பியவர்களில் ஒருவரான டி.மரியசீலி, "நாங்கள் இதற்காக 26 ஆண்டுகள் காத்திருந்தோம். எம்மிடம் ஒன்றுமில்லாத நிலையில், மீண்டும் கட்டியெழுப்புவது சிரமமானது ஆனாலும் நாங்கள் துவண்டுவிட மாட்டோம் நாங்கள் இங்கே வாழ்வதற்கு வந்துள்ளோம், அதற்கான இரணைமாதா (இரணைதீவின் தாய், அதன் காக்கும் தெய்வம் கன்னி மேரி) எங்கள் வீடுகளைப் பாதுகாப்பாக வைத்துள்ளது என்கிறார்". ஆனாலும் போருக்குப் பின்னரான எச்சங்கள் ஆங்காங்கே அடக்க முடியாத சில நம்பிக்கைகளை அளிக்கவே செய்கிறது.



# ஐநாவை நோக்கி ஒரு பொது ஆவணம்?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு யாழ் திருமறைக் கலாமன்றத்தில் தமிழ் சிவில் சமூக அமையத்தால் ஒரு சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டது. இச்சந்திப்பின்போது மாற்று அணிகளைச் சேர்ந்த கட்சிகள் ஐக்கியப்பட்டால் வாக்குச் சிதறலை தடுக்கலாம் என்று பொதுவாகக் கருத்து தெரிவிக்கப்பட்டது. எனினும் அப்படி ஒரு இணைப்பு அப்போதைக்கு சாத்தியமில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. சந்திப்பின் முடிவில் யாழ். பல்கலைக்கழக புலமை சாரா ஊழியர் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் பின்வருமாறு சொன்னார். "இவர்களை இப்போதைக்கு ஒற்றுமைப்படுத்த முடியாது. ஒற்றுமைப்படுத்த வெளிக்கிட்டால் அவர்கள் எங்களைத்தான் விரோதமாகப் பார்ப்பார்கள். எனவே அவர்களை அவர்களின் போக்கில் விடுவோம். அவர்கள் சிதறிப்போய் தேர்தலை எதிர்கொள்ளட்டும்.அதில் வெல்பவர் வெல்லட்டும் தோற்பவர் நோற்கட்டும். அதற்குப் பின்அவர்கள் ஏதோ ஒரு வழிக்கு வருவார்கள். அப்பொழுது அவர்களை ஐக்கியப்படுத்தலாம்" என்று.

அவர் அவ்வாறு கூறி இரண்டு ஆண்டுகளின் பின்னரே ஒரு தற்காலிக ஐக்கியத்தை ஏற்படுத்த முடிந்திருக்கிறது. கடந்த 2ஆண்டு காலப்பகுதிக்குள் மூன்று தேர்தல்கள் நடந்துவிட்டன. இதில் கடைசியாக நடந்த பொதுத் தேர்தலின் போது தமிழ் வாக்குகள் முன்னெப்பொழுதையும்விட அதிகரித்த அளவில் சிதறின. இதன் விளைவாக கூட்டமைப்பு அதன் ஏகபோகத்தை இழந்தது. ஆனால் கூட்டமைப்பு இழந்த 6 ஆசனங்களையும் மாற்று அணி பெறவில்லை. மாற்று அணி 3 ஆசனங்களையே பெற்றது. இவ்வாறு கடந்த பொதுத் தேர்தலின்போது வாக்களிப்புக் கோலம் மாறியதன் விளைவாக உருவாக்கிய ஒரு புதிய சூழலே கடந்த வாரம் தமிழ்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட மூன்று கட்சிகளுக்கிடையில் ஒரு விவகார மையக் கூட்டை உருவாக்கக்கூடிய நிலைகளை தோற்றுவித்தது.

கொள்கைக்கூட்டு உடனடிக்கு சாத்தியம் இல்லை. அப்படி ஒரு கொள்கை கூட்டு உருவாகும் வரையிலும் தமிழ் தேசியக் கட்சிகள் சிதறிக் கிடந்தால் அது தென்னிலங்கை மையகட்சிகளுக்கும் அவற்றின் சேவகர்களுக்குமே வாய்ப்பாகி விடும். எனவே ஒரு கொள்கை கூட்டு ஏற்படும் வரையிலும் காத்துக் கொண்டிருக்காமல் தற்காலிகமாக சமயோசிதமாக கட்சிகளை பிரச்சினைகளை மையமாகக் கொண்டு உருவாக்கப்படும் தற்காலிக கூட்டுக்குள் கட்டிப்போட வேண்டும். இதன் மூலம் தனியோட்டம் ஓடக்கூடிய கட்சிகளையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கட்டுப்படுத்த வேண்டிய ஒரு தேவை உண்டு.

இந்த அடிப்படையில்தான் கடந்த மூன்று வாரங்களுக்கு மேலாக மூன்று கட்சிகளையும் ஜெனிவாவை நோக்கி ஒருங்கிணைக்கும் நோக்கத்தோடு மூன்று சந்திப்புகள் ஒழுங்குசெய்யப்பட்டன. தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இச்சந்திப்புகளில் முதலாவது கிளிநொச்சியில் நடந்தது. திருமலை ஆயரும் மத குருக்களும் உட்பட குடிமக்கள் சமூகப்பிரதிநிதிகள் கலந்துகொண்ட இச்சந்திப்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கலந்துகொள்ளவில்லை. விக்னேஸ்வரனின் பிரதிநிதியாக அருந்தவபாலன் பங்குபற்றினார். கூட்டமைப்பின் சார்பாக சுமந்திரன் வந்திருந்தார். சிவாஜிலிங்கமும் ஆனந்தியும் வந்திருந்தார்கள்.

இக்கூட்டத்தில் பேசிய சுமந்திரன் பெருமளவுக்கு ஜெனிவாவோடு அதாவது ஐநா மனித உரிமைகள் பேரவையோடு ஏதோ ஒரு விகிதத்திலாவது எங்கேஜ் பண்ணவேண்டும் என்ற தொனிப்பட பேசினார். ஜெனிவாவுக்கு வெளியே போவதில் இருக்கக்கூடிய சவால்களையும் சுட்டிக்காட்டி கதைத்தார். சந்திப்பில் கலந்துகொண்ட சிவாஜிலிங்கம் தாம் அங்கம் வகிக்கும் விக்னேஸ்வரனின் கூட்டணி ஜெனிவாவுக்கு அனுப்புவதற்கு என்று தயாரித்து வைத்திருக்கும் ஓர் ஆவணத்தை முன்வைத்துப் பேசினார். அதில் அவர் ஜெனிவாவை முழுவதுமாக கைவிடாமல் அதில் ஏதோ ஒரு விகிதமளவுக்கு எங்கேஜ் பண்ணிக்கொண்டு ஜெனிவாவை கடந்துபோக வேண்டும் என்று சொன்னார். அவருடைய வார்த்தைகளில் சொன்னால் யாரையாவது உதைவது என்றால் ஒரு காலை நிலத்தில் ஊன்ற வேண்டும்.

சிவாஜிலிங்கமும் சுமந்திரனும் சில இடங்களில் பொருந்திப் போவது போல் இருந்தது. எனவே இரண்டு கட்சிகளும் தங்களுக்கிடையில் ஒரு பொது முடிவுக்கு வந்தால் என்ன என்ற தொனிப்பட சுமந்திரன் கேட்டார். ஆனால் அதற்கு அங்கு கூடியிருந்த குடிமக்கள் சமூகப் பிரதிநிதிகள் உடன்படவில்லை. அது ஒரு பொதுத்தீர்மானத்துக்கு வருவதற்குரிய பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் நோக்கிலான சந்திப்பின் தொடக்கமே தவிர அங்கே உடனடியாக ஒரு பொது தீர்மானத்துக்கு வரவேண்டிய தேவை இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது.அருந்தவபாலன் அதை வலியுறுத்தினார். கடந்த ஆறாண்டுகால நிலைமாறுகால நீதிப் பயில்வின் தோல்விகளின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் உச்சமான கோரிக்கைகளை ஐநாவில் முன்வைக்க வேண்டும் என்று குடிமக்கள் சமூகங்களும் மதகுருக்களும் கேட்டுக்கொண்டார்கள். ஐநாவில் என்ன கிடைக்கும் என்று சிந்திக்காமல் பாதிக்கப்பட்ட மக்கள் எதை கேட்கிறார்கள் என்பதனை கூர்மையாக வெளிப்படுத்தும் விதத்தில் ஐநாவுக்கான கோரிக்கை அமைய வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

சந்திப்பின் முடிவில் ஒரு குழு உருவாக்கப்பட்டது. அடுத்த சந்திப்பு வவுனியாவில் என்று தீர்மானிக்கப்பட்டது.

வவுனியா சந்திப்புக்கு கஜேந்திரகுமார் வந்திருந்தார். அங்கே அவர் ஜெனிவாவை குறித்து விமர்சன பூர்வமாக உரையாற்றினார். குறிப்பாக பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இச்சந்திப்பில் பேசிய சுமந்திரனும் ஜெனிவாவை கையாள்வதில் அதாவது கடந்த 6 ஆண்டுகளாக மனித உரிமைகள் பேரவையோடு தமது கட்சி முன்னெடுத்த நிலைமாறுகால நீதிச் செயற்பாடுகள் என்ற பரிசோதனை முயற்சி வெற்றிபெறவில்லை என்பதனை ஏற்றுக் கொண்டார். எனவே ஜெனிவாவை கடந்து போவது என்பதில் மூன்று தரப்புக்கும் இடையில் ஒரு பொது நிலைப்பாடு காணப்பட்டது.

அவ்வாறு ஜெனிவாவை கடந்துபோவது வரையிலும் ஜெனிவாவில் அதாவது மனித உரிமைகள் பேரவையில் எவ்வளவு விகிதத்துக்கு என்கேஜ் பண்ணுவது என்பதில் மூன்று கட்சிகளுக்கும் இடையில் விகித வேறுபாடுகள் இருந்தன. குறிப்பாக ட்ரிபிள்ஜ எம் என்றழைக்கப்பட்ட ஒரு பொறிமுறையை சிவாஜிலிங்கம் தொடர்ந்து வலியுறுத்தினார். ஆனால் கஜேந்திரகுமார் அதை ஆவணத்தில் இணைப்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தப் பொறிமுறை மியான்மருக்குரியது. ஒரு நாட்டுக்கென்று விசேடமாக உருவாக்கப்பட்டது. அப்படி ஒரு பொறிமுறையை கேட்டால் அந்தப் பொறிமுறையை உருவாக்குவதோடு ஐ.நா. நின்றுவிடும் என்றும் அவர் சொன்னார்.

ட்ரிபிள்ஜ எம் எனப்படுவது பர்மாவுக்காக உருவாக்கப்பட்ட ஒரு பொறிமுறை. நீதிவிசாரணை ஒன்றுக்கான அடிப்படைத் தகவல்களை திரட்டும் ஒரு பொறிமுறை.இந்த பொறிமுறையை நாங்கள் கேட்டால் ஐநா அதையொத்த ஏதோ ஒரு பொறிமுறையை அறிமுகப்படுத்திவிட்டு பிரச்சினைக்கு தீர்வாக அறிக்கைகளையே வெளியிடுக்கொண்டிருக்கும். மாறாக, அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்கு போக வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைப்போம். என்று அவர் கேட்டுக்கொண்டார். அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் ஒரு நீதிவிசாரணையை முன்னெடுத்தால் அதற்கென்று சாட்சிகளையும் ஆதாரங்களையும் திரட்டும் ஒரு பொறிமுறையை அந்த நீதிமன்றமே உருவாக்கும். எனவே அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்குப் போக வேண்டும் என்ற கோரிக்கைக்குள் ட்ரிபிள்ஜஎம் போன்ற ஒரு பொறிமுறைக்கான கோரிக்கையும் உள்ளடக்கப்பட்டிருக்கிறது என்று கஜேந்திரகுமார் வாதிட்டார். அதோடு அண்மைய ஆண்டுகளில் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்ட வழக்குகளை சுட்டிக்காட்டி புதிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. என்றும் அவர் கூறினார் இவை அரசற்ற தரப்புக்களுக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் சாதகமானவை என்றும் அவர் கூறினார்.

இதனிடையே, இச்சந்திப்பிற்கு சில நாட்கள் கழித்து அதாவது 6ஆம் திகதி கொழும்பில் ஒரு சந்திப்பு நடந்தது.மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் தலைவர் பாக்கியசோதி சரவணமுத்துவால் ஏற்கனவே ஒழுங்குசெய்யப்பட்ட அச்சந்திப்பில் மூன்று கட்சிகளின் தலைவர்களும் பங்குபற்றினார்கள். அதில் மூவரும் ஒன்றாக இணைந்து ஒரு பொது அணுகுமுறைக்கு வருவது என்று முடிவெடுக்கப்பட்டது. ஆறாம் திகதி நடந்த சந்திப்பின் விளைவாக எழாம் திகதியும் ஒரு சந்திப்பு கொழும்பில் ஒழுங்கு செய்யப்பட்டது. எனினும் அது வெற்றி பெறவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் தமிழ்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட சந்திப்புகளின் தொடர்ச்சியாக மூன்றாவது சந்திப்பு கிளிநொச்சியில் ஒழுங்கு செய்யப்பட்டது. சந்திப்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் சிறீகாந்தா போன்றோரும் பங்குபற்றினர். பலத்த வாதப்பிரதிவாதங்களின் முடிவில் ஒரு பொது ஆவணத்தை தயாரிப்பது என்று மூன்று கட்சிகளும் ஒத்துக்கொண்டன. மூன்று மணித்தியாலங்களுக்கு மேலான சந்திப்பில் கட்சிகள் தங்களுக்கிடையே பலமான வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டன. அச்சந்திப்பில் பங்குபற்றிய திருமலை ஆயர் இரண்டு தடவைகள் கண்டிப்பான குரலில் இடையீடு செய்யவேண்டியிருந்தது.

விக்னேஸ்வரனின் கூட்டணி சர்வஜன வாக்கெடுப்பு என்ற கோரிக்கையை குறிப்பிட்ட ஆவணத்தில் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையை தற்காலிகமாக தளர்த்தியது. அதேசமயம் கூட்டமைப்பு நடந்தது இனப்படுகொலை என்பதனை ஏற்றுக் கொண்டது.எனவே இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதியை கேட்டு அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்கு செல்வது என்ற ஒரு முடிவுக்கு மூன்று கட்சிகளும் ஒன்றாக வந்தன. விக்னேஸ்வரனின் கூட்டு வலியுறுத்திய ட்ரிப்பில்.ஐ.எம் என்ற பொறிமுறையை கஜேந்திரகுமார் காலவரையறையோடு ஏற்றுக்கொள்வது என்று சம்மதித்தார். இதன் பின்னர் ஒரு பொது ஆவணத்தை இறுதியாக்குவது என்று முடிவெடுக்கப்பட்டது. இப்படித்தான் மூன்று கட்சிகளும் ஒரு பொது இணக்கத்துக்கு வந்தன.


கடந்த நாடாளுமன்ற தேர்தலில் கூட்டமைப்பின் ஏகபோகம் உடைந்தமை மாற்று அணிக்கு 3 ஆசனங்கள் கிடைத்தமை புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் தலையீடு கஜேந்திரகுமாரின் கட்சிக்குள் ஏற்பட்ட உடைவு போன்ற பல்வேறு காரணிகளின் விளைவாகவே இப்படி ஒரு தேவை கருதிய கூட்டை உருவாக்கவேண்டிய நிலைமைகள் கனிந்தன. கடந்த ஆறாண்டு காலமாக ஜெனிவாவை உத்தியோகபூர்வமாக கூட்டமைப்பு கையாண்டு வந்தது இதுவிடயத்தில் சுமந்திரன் தொடக்கத்தில் தனியோட்டம் ஓட முயற்சித்தார். என்று ஒரு குற்றச்சாட்டு உண்டு. எனினும் டயஸ்போரா அமைப்புகளின் முன்முயற்சி காரணமாகவும் உள்நாட்டில் குடிமக்கள் சமூகங்களின் தலையீடு காரணமாகவும் ஒரு பொது அணுகுமுறைக்குப் போக வேண்டிய தேவை ஏற்பட்டது.

ஆனால் இந்த உடன்படிக்கை ஒரு கொள்கைக் கூட்டு அல்ல.நடந்தது இனப்படுகொலை என்பதனை கூட்டமைப்பு ஏற்றுக்கொண்டிருப்பதும் அதற்குரிய பரிகார நீதியைக் கேட்பது என்பதில் அது ஏனைய கட்சிகளுடன் உடன்பட்டமையும் ஒரு திருப்பகரமான மாற்றம். கூட்டமைப்பு பொதுத் தேர்தலில் பெற்ற தோல்விகளில் இருந்து பாடம் கற்கத் தயாராகிவிட்டது. எனவே அது புதிய நிலைமைகளுக்கு ஏற்ப தன்னை சுதாகரித்துக் கொள்கிறது. ஆனால் நிச்சயமாக இது ஒரு கொள்கைக் கூட்டு அல்ல. இது ஒரு சமயோசிதக் கூட்டு. தேவை கருதிய விவகாரமையக் கூட்டு. இனிமேலும் உடனடிக்கு இதுபோன்ற கூட்டுக்களே சாத்தியப்படும். இவ்வாறான கூட்டுகளின் திரட்டப்பட்ட விளைவாக சிலசமயம் எதிர்காலத்தில் ஏதும் கொள்கை கூட்டு ஏற்படலாம்.

ஆனால் இங்கு முக்கியமாகச் சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒரு மாற்றம் உண்டு. 2013 ஆம் ஆண்டு முன்னாள் மன்னார் மறை மாவட்ட ஆயரின் தலைமையில் ஒரு சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டது. இச்சந்திப்பில் மன்னார் ஆயர் உட்பட கூட்டமைப்பின் மீது அதிருப்தி கொண்ட தமிழ் அரசியல்வாதிகளும் குடிமக்கள் சமூகப் பிரதிநிதிகளும் சம்பந்தரின் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்கள். இச்சந்திப்பில்தான் ஒரு தமிழ்த் தேசிய பேரவையை உருவாக்குவது என்றும் யோசிக்கப்பட்டது. சந்திப்பின் முடிவில் சம்பந்தர் ஆயரைப் பார்த்து பின்வரும் தொனிப்பட சொன்னார்.... "பிஷப் நீங்கள் சொல்லுங்கோ ஆனால் இறுதி முடிவை நான்தான் எடுப்பேன்" என்று. ஆனால் 8 ஆண்டுகளின் பின் கிளிநொச்சி சென்ற். திரேசாள் மண்டபத்தில் நடந்த சந்திப்பில் திருமலை ஆயர் கண்டிப்பான சன்னமான குரலில் இடையீடு செய்தபொழுது எந்த ஒரு கட்சித் தலைவரும் அவரைப் பார்த்து சம்பந்தர் சொன்னதைப்போல சொல்லத் துணியவில்லை. தமிழ்த்தரப்பு இறந்த காலத்திலிருந்து பெற்ற படிப்பினைகளின் விளைவா இது? குறிப்பாக தமிழ் அரசியலின் மீது தமிழ் குடிமக்கள் சமூகங்கள் செல்வாக்கு செலுத்தலாம் என்ற ஒரு நம்பிக்கையை இது அதிகப்படுத்தியுள்ளதா?

# இலங்கையின் சிவில் நிர்வாகம் இராணுவ மயமாக்கப்படுகிறது: ஐடிஜேபி சாடல்

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)



JDS

SRI LANKA: MILITARY APPOINTMENTS
(January 2021)

| | Job | Name | Unit |
|---|---|---|---|
| | COVID[A] | | GR=Gajaba Regiment |
| 1 | National Operations Centre for Prevention of COVID (NOCPCO); also National Sports Council[1] | General Shavendra Silva, Army Commander | Army - GR |
| 2 | COVID19 Healthcare & Social Security Fund | Major General (retired) K.B. Egodawela Chief of Staff to President | Army |
| 3 | Secretary, Ministry of Healthcare and Indigenous Medical Services | Major General Sanjeewa Herman Munasinghe[2] | Army |
| 4 | Additional Secretary of the Disaster Management Division of State Ministry of Internal Security, Home Affairs and Disaster Management & Director of the National Disaster Relief Services Centre[3]. DG, Disaster Management Centre[4]. | Major General (retired) Sudantha Ranasinghe | Army |
| | SECURITY[B] | | |
| 5 | Defence Secretary | Major General (retired) Kamal Gunaratne | Army - GR |
| 6 | Minister of Public Security; State Minister of Provincial Councils and Local Government Affairs. | Rear Admiral (retired) Sarath Weerasekera | Navy |
| 7 | Secretary to Ministry of Public Security. | Major General (retired) Jagath Alwis[5]; 2020 was Chief of National Intelligence. | Army - GR |
| 8 | Rehabilitation Commissioner General | Major General Darshana Hettiarachchi | Army |
| 9 | Contractor for Prisons[5]. | Major (retired commando) Yapa Hetti Pathirannehelage Nissanka Yapa | Army |

இலங்கையின் சிவில் நிவாக சேவைகளின் முக்கியப் பொறுப்புகளில் ஏராளமான சிவில் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளது பெரும் அதிர்ச்சியளிக்கிறது என்று உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்திட்டத்தின் (ஐடிஜேபி) செயல் இயக்குநர் யாஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலான விரிவான பட்டியலை ஐடிஜேபி மற்றும் இலங்கையில் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள் (ஜேடிஎஸ்) ஆகியவை இணைந்து பிரிவு வாரியாக வெளியிட்டுள்ளன.

அதிலும் குறிப்பாக 39 இராணுவ அதிகாரிகள் முன்னாள் இராணுவ அதிகாரியான ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆட்சியில் முக்கியப் பொறுப்பில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

"இந்த நடவடிக்கை மெல்ல மெல்ல நிர்வாகத்தைக் கையிலெடுப்பதாகும்" என்று யாஸ்மின் சூக்கா ஜேடிஎஸ்ஸுடன் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். இதற்கு அப்பாற்பட்டு ஜனாதிபதியிடம் அதிகாரக் குவிப்பு, குடும்பத்தாருக்குப் பதவிகள், துதிபாடுபவர்களுக்குச் சலுகைகள் மட்டுமின்றி அதிர்ச்சியளிக்கும் வகையில் நீதிமன்றத்தில் வழக்குகளை எதிர்கொண்டுள்ள ஏராளமான நபர்களுக்கு அரச பதவிகள் அளிக்கப்பட்டுள்ளடுள்ள என்கிறார் சூக்கா.

மேலும் "இது கள்ளத்தனமாக சதிப் புரட்சி செய்யும் செயல், ஜனநாயகம் தொடர்ச்சியாக அரிக்கப்படுகிறது" எனவும் ஐடிஜேபியின் செயல் இயக்குநர் கூறுகிறார்.

கோவிட் தொற்றைக் கட்டுப்படுத்துதல், பொலிஸ், புலனாய்வுத் துறை, சிறைச்சாலைகள் திணைக்களம், வெளிநாட்டுக் கொள்கை, விமான நிலையம், துறைமுகம், சுங்கம், பயன்பாடுகள், விவசாயம், மீன்பிடி, நில வளர்ச்சி, வனஜீவராசிகள் பாதுகாப்பு இவை எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டு ஊழல் கண்காணிப்பு ஆணையத்திலும் அரசுக்கு விசுவாசமான இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

"அரச கட்டமைப்பு இதுவரை இல்லாத வகையில் இராணுவ மயமாக்கப்படுகிறது. ஓய்வு பெற்ற மற்றும் பணியிலுள்ள அதிகாரிகள் நிர்வாகப் பதவிகள், கட்சிப் பதவிகள் மற்றும் அமைச்சுப் பதவிகளில் கோலோச்சுகின்றனர் - இது உறுதியான வகையில் அரசின் சிவிலியன் தன்மையை முடிவுக்கு கொண்டுவருவதன் துவக்கமாக உறுதியாகத் தெரிகிறது" என்கிறார் ஜேடிஎஸ் அமைப்பின் பாஷண அபேயவர்தன.

"இராணுவம் சொல்லொணா வகையில் நாட்டின் பொதுமக்களுக்கு எதிரான குற்றங்களை முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகச் செய்துள்ளது. எனவே அவர்கள் கையில் அதிகாரத்தை குவித்து நிர்வாகத்தை தமது பிடியில் வைத்துக் கொள்ள அனுமதிப்பது மாற்ற முடியாத ஒரு நிலைக்கு இட்டுச் செல்லும்" என்கிறார் பாஷண அபேயவர்தன.





# தப்பியது ஜனாதிபதி பதவி-டொனால்டு டிரம்ப் வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறினார்

கடந்த நான்கு ஆண்டுகளாக தனது மனம் போ-னபடி அமெரிக்காவின் ஜனாதிபதியாக காலத்தைக் கடத்தியது டரம்ப் வெள்ளை மாளிகையை விட்டுவெளியேறினார். உற்சாகமான ஒரு மனி-தராக இருந்தாலும் தனது பொறுப்புக்களை நன்றாக உணர்ந்து கொள்ளாமல் இஸ்லாமியர்களுக்கு எதிரான பயணத்தடைகளை ஏற்படுத்தியது போன்ற பல பாரதூரமான சடடங்களைக் கொண்டு வந்தது முதல் தனது இறுதி வாரத்தில் அமெரிக்காவின் அதிகாரங்கள் கொண்ட மக்கள் அவையின் மீது தனது ஆதரவாளர்கள் என்ற பெயரில் "காடையர்களை" ஏவி அங்கு தாக்குதல்களை மேற்கொண்டது வரையும் உலக மக்கள் தொடக்கம் அமெரிக்கர்கள் வரை அனைவராலும் விமர்சிக்கப்பெற்ற டொனால்ட். ட்ரம்ப் தமது மனைவி மெலானியா டிரம்ப் உடன் அவர் மரைன் ஒன் ஹெலிகாப்டரில் கிளம்பிச் சென்றார்.
டொனால்டு டிரம்ப் மற்றும் மெலானியா ஆகிய இருவரும் மேரிலாந்து மாகாணத்தில் உள்ள ஜாயின்ட் ஆண்ட்ரூஸ் எனும் ராணுவத் தளத்துக்கு சென்றார்கள்.

மரைன் ஒன் ஹெலிகாப்டரில் ஏறும் முன் அங்கு இருந்த செய்தியாளர்களிடம் மிகவும் குறுகிய நேரம் பேசினார் டிரம்ப்.

வெள்ளை மாளிகை உலகின் மிகச்சிறந்த வீடு என்று அவர் அப்போது கூறினார்.

தனது மனைவி அருகில் இருந்த போது செய்தியாளர்களிடம் பேசிய அவர் எங்களுக்கு மிகச்சிறந்த நான்காண்டுகள் இங்கு இருந்தன் இதன்போது பலவற்றையும் சாதித்தோம். நாங்கள் அமெரிக்க மக்களை நேசிக்கிறோம். இது மிகவும் சிறப்பானது என்று கூறினார்.

அங்கு டிரம்புக்கு இறுதியாக பிரியாவிடை நிகழ்ச்சி நடைபெற்றது. அதன் பின்பு அமெரிக்க அதிபரின் ஏர் போர்ஸ் ஒன் விமானம் மூலம் டிரம்ப் ஃபுளோரிடா கிளம்பினார்.

ஃபுளோரிடாவில் அமைந்துள்ள பாம் பீச் பகுதியில் இருக்கும் மாரா-லாகோ எனும் ரிசார்ட்டில் அவர் அதிபர் பதவிக்கு பிந்தைய காலத்தை கழிக்க உள்ளார்.

டிரம்ப் மெலானியா ஆகியோர் ஃபுளோரிடா சென்ற பின்பு அமெரிக்க அதிபர் பயணிப்பதற்கு என்றே பிரத்தேயேகமான ஏர் ஃபோர்ஸ் ஒன் விமானம் மீண்டும் மேரிலாந்து திரும்பும்.

ஆண்ட்ரூஸ் ராணுவ தளத்தில் தமது ஆதரவாளர்களுக்கு மத்தியில் தமது பிரியாவிடை உரையாற்றிய டிரம்ப் தமது குடும்பத்தினர் மற்றும் அணியினருக்கு நன்றி கூறினார்.

தமது ஆட்சிக் காலத்தின் போது நிகழ்த்தப்பட்ட சாதனைகள் என்று சிலவற்றை அவர் பட்டியலிட்டார்.

கடைசி சில நாட்களாக அவர் நல்ல மனநிலையில் இல்லை எரிச்சலாக உள்ளார் என்பதுபோல சில அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வந்தன. ஆனால் இன்று டிரம்ப் ஆற்றிய உரை அதற்கு முரணாக இருந்தது. இன்றைய உரையின் போது அவர் மிகவும் உற்சாகத்துடன் காணப்பட்டார். அவரது ஆதரவாளர்களுக்கும் உற்சாக மூட்ட அவர் முயற்சித்தார்.

அவரது பிரியாவிடை உரை ஒரு கொண்டாட்ட நிகழ்ச்சி போலவே இருந்தது. அது சோகமானதாக இல்லை.

ஏதாவது ஒரு வகையில் நாம் மீண்டு வருவோம் என்று தனது உரை-யில் இறுதியில் குறிப்பிட்ட அவர் ஹேவ் எ க்ரேட் லைஃப் வி வில் சீ யூ சூன் என்று முடித்தார்.

இந்நிலையில், ஜோ பைடன் கமலா ஹாரிஸ் பதவியேற்றனர்: டொனால்டு டிரம்ப் கலந்துகொள்ளவில்லை அமெரிக்காவின் முதல் பெண் ஆசிய வம்சாவளி ஆப்பிரிக்க வம்சாவளி துணை அதிபராக பதவியேற்றார் கமலா ஹாரிஸ்.

கமலா ஹாரிசுக்கு முதல் லத்தீன் உச்சநீதிமன்ற நீதிபதியான சோ-னியா சோடோமாயர் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். அதைத் தொடர்ந்து அமெரிக்காவின் 46வது அதிபராக ஜனநாயகக் கட்சியின் ஜோ பைடன் பதவியேற்றார்.

அதிபர் ஜோ பைடனுக்கு பாரம்பரிய வழக்கப்படி உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஜான் ராபர்ட்ஸ் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

வாஷிங்டனில் உள்ள நாடாளுமன்ற வளாகமாக கேப்பிட்டால் வளாகத்தில் இந்த பதவியேற்பு நிகழ்வு நடக்கிறது. இரு வாரங்களுக்கு முன்னர் டிரம்ப் ஆதரவாளர்களால் இங்குதான் வன்முறை நடத்தப்பட்டது.

டொனால்டு டிரம்ப் புறக்கணிப்பு

வழக்கமாக புதிய அதிபரை முன் வாசல் வழியாக பதவியை இழக்கும் அதிபர் வரவேற்பார். ஆனால் இந்நிகழ்வில் டொனால்டு டிரம்ப் கலந்து கொள்ளவில்லை. 1869க்கு பின் தமக்கு பின் பதவியேற்பவரின் நிகழ்வில் கலந்துகொள்ளாத முதல் அதிபர் டிரம்ப் ஆவார்.

கொரோனா வைரஸ் பரவல் மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களின் காரணமாக முன்னெப்போதுமில்லாத அளவுக்கு பல்லாயிரக்கணக்கான பாதுகாப்புப்படை வீரர்கள் களமிறக்கப்பட்டு வாஷிங்டன் டி.சி முழுவதும் பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

விழாவுக்கு வருகை தந்த அனைவருக்கும் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சமூக இடைவெளி விதிமுறைகளும் அமலில் இருந்தன. பதவியேற்பு விழாவை நேரடியாக பார்க்க அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமெரிக்க அதிபர்கள் பராக் ஒபாமா பில் கிளின்டன் மற்றும் ஜார்ஜ் டபுள்யூ புஷ் ஆகியோர் பைடனின் பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்றார்கள்.

கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களுக்காக ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறும் நிகழ்வில் பங்கேற்றவர்களை ஜோ பைடன் கேட்டுக் கொண்டார். இந்த நிகழ்வில் அமெரிக்க தேசிய கீதத்தை பாடகி லேடி காகா பாடினார்.

கறுப்பினத்தைச் சேர்ந்த இளம் பெண் கவிஞர் அமண்டா கார்மன் இந்த நிகழ்வில் உரையாற்றினார். 22 வயதாகும் இவர்தான் அதிபர் பதவியேற்பு விழா ஒன்றில் உரையாற்றியவர்களிலேயே இளம் வயது நபர் ஆவர்.

அதிபரான பின் ஜோ பைடன் முதல் உரையில் பேசியது என்ன?

இது அமெரிக்காவின் நாள். ஜனநாயகத்தின் நாள். வரலாறு மற்றும் நம்பிக்கைக்கான நாள் என்று அதிபராக பதவியேற்றுள்ள ஜோ பைடன் பதவியேற்ற பின்பான தன் முதல் உரையில் தெரிவித்தார்.

பல சோதனைகளை சந்தித்துள்ள அமெரிக்கா சவால்களில் இருந்து மீண்டுள்ளது. இன்று என் வெற்றியை அல்ல ஜனநாயகத்தை கொண்டாடுவோம் என்று அவர் கூறினார்.

ஜனநாயம் எவ்வளவு விலைமதிப்பானது என்று நாம் மீண்டும் கற்றுக் கொண்டுள்ளோம். ஜனநாயகம் சற்று பலவீனமானது ஆனால். இன்று ஜனநா-யகம் வென்றிருக்கிறது என்று அவர் தெரிவித்தார்.

சில நாட்களுக்கு முன்பு இந்த இடத்தில் (கேப்பிட்டோல்) வன்முறை வெடித்தது. ஆனால் இங்கு நாம் ஒரே நாடாக கடவுளுக்கு கீழ் ஒன்றிணைந்து இருக்கிறோம். கடந்த இரண்டு தசாப்தங்களாக எப்படி நடந்ததோ அப்படி இன்றும் அமைதியான முறையில் இந்த பதவியேற்பு விழா நடைபெறுகிறது.

அதிபராக பதவியேற்ற பின் பேசிய முதல் உரையில் பெண் துணை அதிபரான கமலா ஹாரிஸ் குறித்தும் அதிபர் ஜோ பைடன் குறிப்பிட்டார்.

180 ஆண்டுகளுக்கு முன்பு பெண்கள் வாக்களிக்கும் உரிமை கேட்டு பேரணி நடத்தியபோது ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் அவர்களை தடுத்தனர். ஆனால் இன்று அமெரிக்க வரலாற்றில் முதல் பெண் துணை அதிபராக இங்கு கமலா ஹாரிஸ் பதவியேற்றுள்ளார். எதுவும் மாறாது என்று கிடையாது என்று அவர் தெரிவித்தார்.

எனக்கு வாக்களிக்காதவர்களையும் நான் பாதுகாப்பேன் என உறுதி கூறுகிறேன் என்று அவர் பேசினார்.

பர்புள் நிறம் அணிந்த முக்கிய பிரமுகர்கள் - என்ன காரணம்?

புதிய அதிபர் பதவியேற்பு விழாவில் துணை அதிபர் கமலா ஹாரிஸ் உள்ளிட்ட பல முக்கிய நபர்கள் பர்புள் நிற ஆடையை அணிந்திருந்தனர்.

இரு கட்சியும் ஒன்றிணைக்கும் வண்ணமாக பர்புள் நிறம் பார்க்கப்படுகிறது. குடியரசு மற்றும் ஜனநாயக கட்சிகளின் நிறமான முறையே சிவப்பு மற்றும் நீல நிறத்தை சேர்த்தால் பர்புள் நிறம் வெளிப்படும்.

இந்த பதவியேற்பு விழாவின் தீம் அமெரிக்கா யுனைட்டட் என்பதை குறிக்கும் விதமாகவே பலரும் பர்புள் நிற ஆடையை அணிந்து வந்துள்ளனர்.

# மனிதர் கடவுளாக முடியும் என மருத்துவர் வி. சாந்தா வாழ்ந்து காட்டியிருக்கிறார் என்றார் நடிகர் சூர்யா



கடவுள் மனிதராக அவதாரம் எடுப்பதாக இதிகாசங்கள் கூறுகின்றன. மனிதர் கடவுளாக முடியும் என்பதை மருத்துவர் அம்மா வி. சாந்தா அவர்கள் வாழ்ந்து காட்டியிருக்கிறார். அடையாறு புற்றுநோய் மருத்துவமனை அதற்கு காலத்தின் சாட்சி. மனம் உருகும் அஞ்சலி என டாக்டர் சாந்தாவின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து நடிகர் சூர்யா டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

புகழ்பெற்ற புற்றுநோய் மருத்துவ நிபுணரும் சென்னை அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தின் தலைவருமான டாக்டர் சாந்தா (93 வயது) அவர்கள் ஏழை எளிய மக்களுக்கு புற்றுநோய் சிகிச்சை எளிதில் கிடைக்க அரும்பணியாற்றியவர்.

இதய நோய் மற்றும் மூச்சுத்திணறல் காரணமாக அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த டாக்டர் சாந்தா நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது உடல் நேற்று அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# கனடா உதயன்

## வெள்ளி விழா ஆண்டு 2021

உலகளாவிய மாணவர்களுக்கான இணையவழி ஊடான

# பேச்சுப் போட்டி

POWERED BY

VIBRANT HOSPITALITY GROUP

OVER 25 YEARS IN THE HOSPITALITY INDUSTRY

OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES

Shankar Nallathamby, CHA
Director
shankar@vhgcanada.com

www.vibranthospitalitygroup.com

## நான் விரும்பும் அரசியல் தலைவர்

இங்கு காணப்படும் தமிழ்த் தலைவர்களிலிருந்து தங்களுக்கு பிடித்தமான ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரைப் பற்றி **5 நிமிடங்களுக்கு** மேற்படாமல் பேச வேண்டும். போட்டி **ZOOM** செயலியூடாக **பெப்ரவரி 27, 28 தினங்களில்** நடைபெறும். கனடா, இந்தியா, அமெரிக்கா, மற்றும் இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நடுவர்கள் வெற்றியாளர்களை தேர்ந்தெடுப்பார்கள். இவர்களோடு கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் சேர்ந்து எடுக்கும் இறுதி முடிவிற்கு ஏற்பவே பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.



### நிபந்தனைகள்

1. உலகின் எப்பாகத்திலும் வாழும் 20 வயதிற்கு உட்பட்ட தமிழ் பேசும் மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம் (வயதை உறுதிப்படுத்தும் பத்திரம் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்).

2. இங்கு காணப்படும் தலைவர்களில் தாம் விரும்பும் ஒருவரைப் பற்றி மட்டும் ஐந்து நிமிடத்திற்கு மேற்படாமல் பேசவேண்டும்

3. போட்டிக்கான உரையை அவர்களாகவோ அன்றி மற்றவர்களின் உதவியுடனோ தயாரிக்கலாம்.

4. இறுதிப் போட்டிக்கு முன்பதாக தேவையேற்படின் முதற்சுற்றுப் போட்டியில் பங்குபற்றவும் தயாராக இருக்க வேண்டும்.

5. போட்டி இடம்பெறும் இரண்டு நாட்களில் ஏதாவது ஒரு நாளில் போட்டியில் பங்கு பற்ற தயாராக இருக்க வேண்டும்.

6. பேச்சுப் போட்டியில் பங்கு பற்ற விரும்புவோர் பின்வரும் விபரங்களை uthayannews@yahoo.com என்னும் மின்னஞ்சலுக்கோ அன்றி 1 (416) 732 1608 / 1 (416) 587 0552 என்னும் இலக்கத்தில் WhatsApp இற்கோ அனுப்பி வைக்க வேண்டும்.
மாணவரின் முழுப் பெயர், மாணவரின் வயது, கல்வி கற்கும் பாடசாலை அல்லது பல்கலைக் கழகம், தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம், தொடர்பு கொள்ள வேண்டிய மின்னஞ்சல் விலாசம்:-
(பெற்றோர் அல்லது பாதுகாவலர் விபரங்களும் இணைக்கப்படலாம்)

7. விபரங்கள் எமக்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் பெப்ரவரி 12, 2021 வெள்ளிக்கிழமையாகும். அந்த திகதிக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

8. பரிசு பெறும் மாணவர்களுக்கு பணத்தொகையும் சான்றிதழ்களும் நேரிலோ, தபால் மூலமாகவோ அல்லது வங்கி கணக்கு ஊடாகவோ அனுப்பி வைக்கப்படும்.

### பரிசுகள்

| 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு | ஐந்து ஆறுதல் பரிசுகள் |
|---|---|---|---|
| 300 கனடிய டொலர்கள் | 200 கனடிய டொலர்கள் | 100 கனடிய டொலர்கள் | 50 கனடிய டொலர்கள் |

**ZOOM பெப்ரவரி 27, 2021 சனிக்கிழமை**

கனடா/அமெரிக்கா - காலை 9:00 | இலங்கை/இந்தியா - இரவு 7:30
ஐரோப்பா - மாலை 3:00 | அவுஸ்ரேலியா - அதிகாலை 1:00
**Meeting ID: 812 3636 6126 | Passcode: 962261**

**ZOOM பெப்ரவரி 28, 2021 ஞாயிற்றுக்கிழமை**

கனடா/அமெரிக்கா - காலை 9:00 | இலங்கை/இந்தியா - இரவு 7:30
ஐரோப்பா - மாலை 3:00 | அவுஸ்ரேலியா - அதிகாலை 1:00
**Meeting ID: 827 6566 9766 | Passcode: 892482**

### நடுவர்கள்:

பேராசிரியர் சங்கர நாராயணன் (தமிழ்நாடு) | வழக்கறிஞர் தி. இராமகிருஷ்ணன் (தமிழ்நாடு)
கலாநிதி நல்லையா குமரகுருபரன் (இலங்கை) | திரு. ஆர். சர்வேஸ்வரா (இலங்கை)
திரு. குயின்ரஸ் துரைசிங்கம் (கனடா) | திரு. நிமால் விநாயகமூர்த்தி (கனடா)
திரு. வீணைமைந்தன் சண்முகராஜா (ஊடகவியலாளர் - கனடா)

சமர்ப்பிக்க வேண்டிய இறுதி திகதி :
பெப்ரவரி 12, 2021
E-mail: uthayannews@yahoo.com
WhatsApp : +1 416 732 1608
+1 416 587 0552

Our Media Partners

அனலை எக்ஸ்பிரஸ் Analai Express HD | east FM 102.7 தமிழ் | உலகத்தமிழர் | ஈழநாடு | ஈழமுரசு | yugam radio | MONதமிழ் | Easy 24 News | Roobam FM Toronto Digital Radio | veet

SANTHA
FULL SERVICE FACILITIES OF GENERAL CONTRACTORS
Santha Electical, Plumbing and drainage service Residential Commercial and industrial All Repairs & Renovations



Santha Plumbing and drainage service
Tel : 416 200 5470
info@santha.ca
www.santha.ca
Santha Panchalingam

CAMSONICS SECURITY SYSTEMS.INC
NO.1 NORTH AMERICAN PROFESSIONAL SECURITY COMPANY
WE ONLY DO PROFESSIONAL INSTALLATIONS AND CONCEAL WIRES IN THE ATTIC OR BEHIND THE WALLS



FULL HD
PROTECT YOUR HOME AND BUSINESS ANY TIME ANY WHERE IN THE WORLD
Rajeev Sebarasha : 647 302 5748

FRUITS HABY
5925 Victoria Ave, Montreal, QC H3W 2R9

HOMELIFE TODAY REALTY LTD., BROKERAGE



VALLIKKANNAN MARUTHAPPAN
Direct: 416-880-6051 Bus: 416-298-3200
www.mvkhome.ca

வீடு விற்க! வாங்க
Award winning Agents will give you Professional, Reliable and Friendly Services
We can arrange Mortgage, Second Mortgage and Refinance
ROYALAN
" Our clients are our value"



Ragu Thillainathan 416-629-5800
Kailain Thillainathan 647-668-8276
kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com

FACEDRIVE FOODS

டொரன்ரொவில் தற்போது உணவுப்பொருட்கள் விநியோகத்திற்கான Food Delivery App பயன்பாட்டில் உள்ளது

Local
Eco-Friendly
Affordable

நீங்கள் டொரன்ரொவில் ஒரு உணவகத்தையோ அன்றி பலசரக்கு கடையையோ நடத்துகின்றீர்களா?

தற்போது எம்மோடு இணைந்துள்ள சுமார் 300 உணவகங்களோடு நீங்களும் ஒருவராக இணைந்து எமது வாடிக்கையாளர்களான 250000 இற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களை எமது Food Delivery App ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

Sign Up Today

இப்போதே எங்களோடு பதிவு செய்து மகிழ்வடையுங்கள்:

*குறைந்த கட்டணத்தில் விநியோகக் கட்டணங்கள்
*இலவசமாக உபகரணமும் பிறிண்டரும் கிடைக்கும்
*இலவசமான சந்தைப்படுத்தும் சேவைகள்

உங்களிடம் கேள்விகள் இருக்கின்றனவா?
அழையுங்கள்: 647 760 9272

Download on the App Store
Available on the Google Play

FACEDRIVE FOODS

டொரன்ரொவில் தற்போது உணவுப்பொருட்கள் விநியோகத்திற்கான Food Delivery App பயன்பாட்டில் உள்ளது

உங்களுக்கு மேலதிகமான வருமானம் தேவைப்படுகின்றதா?

ஒரு நாளைக்கு*
$200
சம்பாதிக்கலாம்

Become a driver

எமக்கு டெலிவரி சாரதிகள் தேவைப்படுகின்றார்கள்

உங்களிடம் கேள்விகள் இருக்கின்றனவா?
அழையுங்கள்: 647 760 9272

Download on the App Store
Available on the Google Play

Dream Design Build

Paramount Custom Homes Ltd.



416-268-5296

www.paramountcustomhomesltd.net

REGISTERED BUILDER TARION WARRANTY CORPORATION

Incredible Quality
Quick Turnaround
Competitive Prices

140-100 Cowdray Court, Scarborough, ON M1S 5C8
Paramountcustomhomesltd@gmail.com

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**



# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



# PRECONSTRUCTION HOUSES & TOWNHOUSES!

RE/MAX



Bala Logendralingam
REALTOR®

EXECUTIVE Award
100% Award

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222

647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9

# Amma Pawn Broker

## அம்மா தங்கநகை அடைவு மாடம்

கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்

Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்

1.0% முதல் 1.5% வரை

அதிரடி சிறப்பு வட்டி வீதம்

உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களிள் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்

அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com
416-757-0034
416-994-3861

# தமிழக மீனவர்களைப் படுகொலை செய்த இலங்கை கடற்படையினரைக் கைதுசெய்ய வேண்டும்

## - சீமான் வலியுறுத்தல்



தமிழக மீனவர்களைப் பச்சைப்படுகொலை செய்துள்ள இலங்கை கடற்படையினரைக் கைதுசெய்து இந்தியாவுக்கு நாடு கடத்த வேண்டும். மீனவர்களின் குடும்பத்திற்கு தலா 5 கோடி ரூபாய் துயர்துடைப்பு நிதி வழங்க வேண்டும் என செந்தமிழன் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

கச்சத்தீவு அருகே நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த கோட்டைப்பட்டினத்தைச் சேர்ந்த தமிழக மீனவர்களின் விசைப்படகுகள் மீது கடந்த 18 ஆம் தேதி நள்ளிரவில் இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்தி அவர்களை விரட்டி அடித்ததோடு, மெசியா, நாகராஜ், சாம்சன், செந்தில்குமார் ஆகிய நான்கு மீனவர்களது விசைப்படகைச் சுற்றிவளைத்துத் தாக்கி, சேதப்படுத்தி நடுக்கடலில் மூழ்கடித்துக் கொலைவெறித் தாக்குதல் நடத்தியதில் அதிலிருந்த மீனவர்கள் நான்கு பேரும் இறந்துபோன செய்தி கடும் அதிர்ச்சியை அளிக்கிறது.

இது இனவெறிப்பிடித்த இலங்கைக்கடற்படை செய்த திட்டமிட்டப் பச்சைப்படுகொலையாகும். இந்திய நாட்டுக் குடிமக்களைப் படுகொலை செய்து கோரவெறியாட்டமிடும் சிங்களப்பேரினவாத அரசின் இப்படுபாதகச் செயல் வன்மையான கண்டனத்திற்குரியது.

கடந்த மூன்று நாட்களாக இலங்கைக் கடற்படையால் சுற்றிவளைக்கப்பட்ட நால்வரையும் மீட்டுத்தரக்கோரி கோட்டைப்பட்டினத்தைச் சேர்ந்த மீனவர்கள் வேலைநிறுத்தம் உள்ளிட்டப் போராட்டங்களில் ஈடுபட்டு வந்த நிலையில் மத்திய, மாநில அரசுகள் அவர்களது கோரிக்கைகளைக் கண்டுகொள்ளாது அலட்சியம் செய்ததே, இன்று நான்கு தமிழக மீனவர்களது உயிர்கள் அநியாயமாகப் பறிபோ-கக் காரணமாக அமைந்திருக்கிறது.

இந்தியக் கடலோரக் காவற்படை எவ்விதத் தேடுதல் நடவடிக்கையும் எடுக்காத நிலையில் நான்கு மீனவர்களைத் தேடிச் செல்ல தமிழக மீனவர்களையும் அனுமதிக்காது கடந்த இரண்டு நாட்களாக எல்லையிலேயே தடுத்து நிறுத்தியது மட்டுமின்றி, நான்கு ரோந்துக்கப்பல்களையும் நிறுத்தியது இலங்கைக்கடற்படை. இத்தகைய நிலையில் அம்மீனவர்கள் நால்வரும் மரணித்துவிட்டதாக அறிவிக்கப்பட்டிருப்பது நாடெங்கிலும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

ஆசியாவின் மிகப்பெரும் வல்லாதிக்க நாடாக வளர்ந்து வரும் இந்திய நாட்டைச் சேர்ந்த மீனவர்களை மிகச்சிறிய நாடான இலங்கையின் கடற்படைப் படு-கொலை செய்து வருவது ஒட்டுமொத்த இந்தியப் பெருநாட்டிற்கே ஏற்பட்ட பெரும் அவமானம். மனித உயிர்கள் மலிவாக மதிப்பிடப்பட்டு உயிர்ச்சேதத்தைச் சர்வ சாதரணமாக ஏற்படுத்தும் இலங்கையைக் கண்டிக்காது இந்திய நாடு வாய்மூடி கள்ளமௌனம் சாதிப்பது வெட்கக்கேடானது. தமிழர்கள் தாக்கப்படும்போதெல்லாம் இந்திய நாடும், அதன் ஆட்சியாளர்களும் மௌனத்தையே மொழியாகக் கொண்டு எம்மினச்சாவை எளிதாகக் கடந்துசெல்வார்களென்றால், அது பெரும் வன்மத்தை நெஞ்சிலே உரமேற்றி இந்திய நாட்டின் மீதானப் பற்றே மொத்தமாகப் பட்டுப்போகுமளவுக்குப் பெரும் எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை ஆட்சியாளர்கள் மறக்க வேண்டாம். எம்மினச் சொந்தங்கள் பச்சைப்படுகொலை செய்யப்படும்போது இந்தியா அதனைத் தட்டிக்கேட்காது இலங்கையோடு கள்ள உறவு கொள்ளுமென்றால், அது தமிழர்களின் இன உணர்வையும், மான உணர்வையும் சீண்டிப்பார்ப்பதாகவே உள்ளது. இலங்கை மீது பொருளாதாரத்தடை விதிக்கப்பட வேண்டும் என தமிழகச் சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ள நிலையில், அந்த இலங்கையோடு இணக்கத்தையும், நட்புறவையும் இந்தியா பேணுமென்றால், “தமி-ழகம் வேண்டுமா? இலங்கை வேண்டுமா? நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள்” எனும் பெருங்கோபமும், அறச்சீற்றமும் தமிழ் இளந்தலைமுறையினர் நெஞ்சில் பற்றியெரிவதை உணராதுவிட்டால், அது வரலாற்றுப்பெருந்தவறாகிப் போகும் என இந்நாட்டின் மேன்மைமிகு ஆட்சியாளர்களுக்கு மீண்டும் மீண்டும் எச்சரிக்கிறேன். இந்நாடு நாடாவதற்கு முன்பிருந்தே நீடித்து நிலைத்து வாழக்கூடிய இம்மண்ணின் பூர்வக்குடி மக்கள் தமிழர்கள் நாங்கள். இந்நாட்டின் விடுதலைக்காக வேறு எந்த இனத்தைவிடவும் அளவுக்கு அதிகமாக இரத்தம் சிந்தி, உயிரை விலை-யாகக் கொடுத்து, நினைத்துப் பார்க்க முடியாத அளப்பெரும் ஈகங்களைச் செய்த தமிழினத்தை அலட்சியப்போக்கோடு அணுகும் இத்தகைய அணுகுமுறை-கள் மாறாவிட்டால் வருங்காலம் இலங்கை ஆட்சியாளர்களுக்கு மட்டுமல்லாது, இந்தியாவின் ஆட்சியாளர்களுக்கும் பெரும் பாடம் புகட்டும். தமிழக மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டதை இந்தியாவின் இறையாண்மை மீதான தாக்குதலாகக் கருதி, இந்நாட்டின் ஆட்சியாளர்கள் கடும் எதிர்வினையாற்ற முன்வர வேண்டும்.

தமிழர்களுக்குச் சொந்தமான கச்சத்தீவை அன்றைய மத்தியில் ஆண்ட காங்கிரசு அரசு தாரைவார்த்து, அதனை மாநிலத்தில் ஆண்ட திமுக அரசு வேடிக்கைப்பார்த்ததன் விளைவாக கடந்த 50 ஆண்டுகளாகத் தமிழக மீனவர்கள் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாகி வருகின்றனர். இதனால், 800க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டதுடன், பல்லாயிரக்கணக்கான த-மிழக மீனவர்கள் உடல் நலிவுக்கு ஆட்பட்டு முடமாக்கப்பட்டுள்ளனர். பல கோடிக்கணக்கான பொருளாதார இழப்புகள் ஏற்பட்டுள்ளன. இனப்படுகொலை செய்திட்டப் போர்க்குற்றவாளிகளான மகிந்தா ராஜபக்சேவும், கோத்தபய ராஜபக்சேவும் அதிகாரத்துக்கு வந்தவுடன் மீண்டும் தமிழக மீனவர்கள் மீதானத் தாக்குதல்கள் பலமடங்கு அதிகரித்துள்ளன. ஒரு பாரிய இனப்படுகொலையை நடத்தி முடித்து, இரண்டு இலட்சம் தமிழர்களைக் கொன்றொழித்த பிறகும், கொ-டும் வன்மமும், இனவெறியும் துளியும் அடங்காது இலங்கை அரசு நிகழ்த்தி வரும் இப்படுகொலைகளுக்கெல்லாம் பழிதீர்க்கிற நாள் வெகுதொலைவில் இல்லை.

# தமிழகத்தில் 6.26 கோடி வாக்காளர்கள் சிறிய தொகுதி; துறைமுகம் பெரிய தொகுதி; சாழிங்கநல்லூர்

**த**மிழ்நாடு, கேரளம், புதுச்சேரி, மேற்கு வங்காளம், அசாம் ஆகிய 5 மாநில சட்டமன்றத் தேர்தல்களை. வருகிற ஏப்ரல் அல்லது மே மாதம் நடத்தப்பட உள்ளன. இதை முன்னிட்டும், வழக்கமான நடைமுறைப்படியும் திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல்களை, தேர்தல் ஆணையம் அந்தந்த மாநிலங்களில் இன்று வெளியிட்டது.

தமிழகத்தில் திருத்தப்பட்ட வாக்காளர்கள் பட்டியலை, தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரதாசாகு இன்று வெளியிட்டார். அதன் விவரம் வருமாறு:

“ஜனவரி முதல் தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 2021-ன் இறுதி வாக்காளர் பட்டியல்கள் இன்று (ஜன.20) வெளியிடப்பட்டுள்ளன”.

அதன்படி தமிழ்நாட்டில் 6,26,74,446 வாக்காளர்கள் உள்ளனர்.
ஆண் வாக்காளர்கள் 3,08,38,473 பேர்.
பெண் வாக்காளர்கள் 3,18,28,727 பேர்.
மூன்றாம் பாலினத்தவர் 7,246 பேர்.

இறுதி வாக்காளர் பட்டியல்படி, செங்கல்பட்டு மாவட்டத்திற்குட்பட்ட சோழிங்கநல்லூர் சட்டப்பேரவைத் தொகுதி தமிழ்நாட்டிலேயே அதிக வாக்காளர்களைக் கொண்டுள்ளது. இத்தொகுதியில் மொத்தம் 6,94,845 வாக்காளர்கள் உள்ளனர். (ஆண்கள் 3,48,262 பெண்கள் 3,46,476 மூன்றாம் பாலினத்தவர் 107).



தமிழ்நாட்டிலேயே குறைந்த அளவு வாக்காளர்கள் கொண்ட தொகுதியாக சென்னை மாவட்டத்திற்குட்பட்ட துறைமுகம் சட்டப்பேரவைத் தொகுதி உள்ளது. இத்தொகுதியின் மொத்த வாக்காளர்கள் 1,76,272 ஆவர். (ஆண்கள் 91,936 பெண்கள் 84,281 மூன்றாம் பாலினத்தவர் 55).

### இனிமேலும் பெயர் சேர்க்கலாம்

வாக்காளர் பட்டியல்களை, தலைமைத் தேர்தல் அதிகாரியின் வலைத்தளமான http://elections.tn.gov.in என்ற வலைத்தளத்தில் காணலாம். அதில் தங்கள் பெயரைச் சரிபார்த்துக் கொள்ளலாம்.

இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்காதவர்கள் தங்கள் பெயரைச் சேர்க்கலாம் அதற்கு, வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகத்தில் படிவம் 6-ஐச் சமர்ப்பித்து விண்ணப்பிக்கலாம். அல்லது இணையம் மூலமாக www.nvsp.in என்ற வலைத்தளத்தில் விண்ணப்பிக்கலாம்.



கூகுள் பிளே ஸ்டோரிலிருந்து “ஓட்டர் ஹெல்ப்லைன் ஆப்” (Voter Helpline App) என்ற செயலியைத் தரவிறக்கம் செய்து அதன்மூலமும் விண்ணப்பிக்கலாம்.

இவ்வாறு தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

**- மணிராஜ், திருநெல்வேலி**


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# இலங்கைக் கடற்படை தாக்குதலில் உயிரிழந்த தமிழக மீனவர்கள் உடலைக் கொண்டுவரக் கோரி சாலை மறியல்



இலங்கைக் கடற்படை தாக்கி உயிரிழந்த திருப்புல்லாணி மீனவரின் உடலை இந்தியா கொண்டு வந்து உடற்கூறு ஆய்வு செய்து, குடும்பத்தினரிடம் ஒப்படைக்க வேண்டும் என அவரது கிராம மக்கள் கோரிக்கை விடுத்து கிழக்கு கடற்கரைச் சாலையில் மறியலில் ஈடுபட்டனர்.

ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த ஆரோக்கிய சேசு என்பவருக்குச் சொந்தமான விசைப்படகில் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த மெசியா(30), உச்சிப்புளி வட்டவளத்தைச் சேர்ந்த நாகராஜ்(52), மண்டபத்தைச் சேர்ந்த சாம்சன்(28), திருப்புல்லாணி அருகே தாதனேந்தல் கிராமத்தைச் சேர்ந்த செந்தில்குமார்(32) ஆகிய 4 மீனவர்கள், புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்தில் இருந்து கடந்த 18ம் தேதி மீன்பிடிக்கச் சென்றனர்.

இம்மீனவர்கள் 19ம் தேதி கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கைக் கடற்படையினர் இவர்களது படகை மோதி மூழ்கடித்து, மீனவர்களையும் தாக்கிக் கொன்றதாகக் கூறப்படுகிறது.இந்நிலையில் நேற்று மீனவர்கள் செந்தில்குமார் மற்றும் சாம்சன் உடல்கள் இலங்கை காங்கேசன் துறை கடற்கரையில் ஒதுங்கியதாகவும், அதை மீட்டு உடற்கூறு ஆய்விற்காக யாழ்ப்பானம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

இந்நிலையில் மீனவர் செந்தில்குமாரின் உடல் ஒதுங்கி 2 நாட்கள் ஆகியும், மத்திய,மாநில அரசுகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாவட்ட நிர்வாகத்திலிருந்து மீனவரின் குடும்பத்திற்கு ஆறுதல் கூட கூறவில்லை எனக்கூறி தாதனேந்தல் கிராமத்தைச் சேர்ந்த நூறுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கிராமத் தலைவர் நாகசாமி, திருப்புல்லாணி ஒன்றிய மதிமுக செயலாளர் ரெத்தினகுமார் தலைமையில் இன்று பகல் 12.20 மணியளவில் ராமநாதபுரம் தூத்துக்குடி கிழக்கு கடற்கரைச் சாலையில் மறியலில் ஈடுபட்டனர்.மேலும் அவரது உடலை இந்தியா கொண்டு வந்து உடற்கூறு ஆய்வு செய்து குடும்பத்தினரிடம் ஒப்படைக்க வேண்டும். அவரது குடும்பத்திற்கு அரசு உரிய நிவாரணமும், அவரது மனைவிக்கு அரசு வேலையும் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

அதனையடுத்து கீழக்கரை வட்டாட்சியர் வீரராஜ், ராமநாதபுரம் மீன்வள உதவி இயக்குநர்(தெற்கு) கோபிநாத், கீழக்கரை காவல் ஆய்வாளர் விஸ்வநாதன் ஆகியோர் பொதுமக்களிடம் பேசி உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தனர்.அதனையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. இதனால் 45 நிமிடம் போக்குவரத்து பாதிக்கப்பட்டு இருபுறமும் 1 கி.மீட்டருக்கு மேல் வாகனங்கள் நெரிசலில் சிக்கின.

சோகத்தில் மூழ்கிய கிராமம்:மீனவர் செந்தில்குமார் இலங்கை கடற்படையினர் தாக்கி உயிரிழந்ததால் தாதனேந்தல் கிராமமே சோகத்தில் மூழ்கியது. செந்தில்குமாரின் தந்தை செல்லம் (72), தாயார், இந்திராணி (69), மனைவி அபினேஷ்வரி (30), மகன் உலகேஸ்வரன் (7) ஆகியோர் வீட்டில் கதறி அழுத வண்ணம் உள்ளனர்.கார் ஓட்டுநராக இருந்த செந்தில்குமார், கரோனா தொற்று தொடங்கியதும் தொழில் இல்லாததால் கடந்த 10 மாதங்களாக மீன்பிடித் தொழில் செய்யச் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# புற்றுநோய் சிகிச்சைக்காக வாழ்வை அர்ப்பணித்தவர் மருத்துவர் வி.சாந்தா



சென்னை மயிலாப்பூரில் 1927 ஜனவரி 11ம் தேதி பிறந்த வி.சாந்தா, புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தை பூர்வீகமாக கொண்டவர். உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானிகள் சர் சி.வி.ராமன், எஸ்.சந்திரசேகர் குடும்பத்தில் பிறந்த இவரும், அறிவியல் துறையில் சாதிக்க வேண்டும் என்று குடும்பத்தினர் விரும்பினர். இவருக்கோ ஏழை, எளிய மக்களுக்கு மருத்துவ சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணமே இருந்ததால், மருத்துவத் துறையை தேர்வு செய்தார். சென்னை மருத்துவக் கல்லூரியில் 1949ல்எம்பிபிஎஸ் பட்டம் பெற்றார். மருத்துவ சேவையில் ஈடுபட்டுக் கொண்டே 1952ல் மகளிர், மகப்பேறு மருத்துவத்தில் டிப்ளமாவும், 1955ல் அத்துறையில் முதுநிலை மருத்துவப் படிப்பையும் முடித்தார். புற்றுநோய் சிகிச்சையில் ஏற்பட்ட ஆர்வத்தால் அத்துறையில் பணியாற்றினார்.

12 படுக்கையுடன் ஆரம்பித்த மருத்துவமனைஇந்தியாவின் முதல் பெண் மருத்துவர் முத்துலட்சுமி ரெட்டி தனது தங்கை புற்றுநோயால் இறந்த பிறகு, பல கட்ட இன்னல்கள், சவால்களைகடந்து, தீவிர முயற்சிக்கு பின்னர் இந்திய பெண்கள் சங்கம் மூலம் திரட்டப்பட்ட ரூ.1 லட்சம் நிதியைக் கொண்டு தென்னிந்தியாவில் முதன்முதலாக அடையாறு காந்தி நகரில் 1954ல்புற்றுநோய் மருத்துவமனை தொடங்கினார். முத்துலட்சுமி ரெட்டியின் அழைப்பை ஏற்று,12 படுக்கைகள் கொண்ட அந்த சிறிய மருத்துவமனையில் பணியாற்றத் தொடங்கினார் சாந்தா. அங்கு மருத்துவராகப் பணியாற்றி வந்த முத்துலட்சுமி ரெட்டியின் மகன் கிருஷ்ணமூர்த்தியை தனது குருவாக ஏற்று பணியாற்றியபடியே, வெளிநாடுகளில் புற்றுநோய் சிகிச்சை தொடர்பான பல்வேறு படிப்புகளை படித்தார்.

அவர்களுடன் செவிலியர்கள் சம்பூரணம், தைலம்மா ஆகியோரும் அந்த மருத்துவமனையில் பணியாற்றி வந்தனர். சாந்தா, கிருஷ்ணமூர்த்தியின் விடாமுயற்சியாலும், அயராத உழைப்பாலும் மருத்துவமனை மெல்ல வளர்ச்சி அடையத் தொடங்கியது. அங்கு இடப் பற்றாக்குறை இருந்ததால், அடையாறு சர்தார் பட்டேல் சாலையில் ஒரு மருத்துவமனை (அடையாறு கேன்சர் இன்ஸ்டிடியூட்) தொடங்கப்பட்டது. அங்கு குழந்தைகளுக்காக புற்றுநோய் சிகிச்சை மையமும் தொடங்கப்பட்டது. மருத்துவமனை அறைதான் வாழ்விடம் திருமணம் செய்துகொள்ளாமல் புற்றுநோய் சிகிச்சைக்காகவே தனது வாழ்நாளை அர்ப்பணித்த மருத்துவர் சாந்தா, இந்த மருத்துவமனையை உலகத்தரம் வாய்ந்த புற்றுநோய் சிகிச்சை மையமாக உருவாக்குவதில் பெரும் பங்காற்றினார்.

அடையாறு காந்தி நகரில் உள்ள பழைய புற்றுநோய் மருத்துவமனையின் மாடியில் இருக்கும் சிறிய அறையில்தான் கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக தங்கியிருந்தார். எளிமையான வாழ்க்கை வாழ்ந்த அவர் லட்சக்கணக்கான புற்றுநோயாளிகளுக்கு குறைந்த கட்டணத்தில் தரமான சிகிச்சைகிடைக்க வழிவகை செய்தார். புற்றுநோய்க்கான நவீன சிகிச்சை முறைகளையும் கொண்டுவந்தார். புற்றுநோய் குறித்த ஆராய்ச்சியிலும் ஈடுபட்டுவந்தார். சர்வதேச அளவில் புற்றுநோய் குறித்து பல ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார். உலக சுகாதார நிறுவனத்தில் புற்றுநோய் தொடர்பான ஆலோசனைக் குழு உறுப்பினர், புற்றுநோய் மாநில ஆலோசனைக் குழு உறுப்பினர் என்பது உட்பட பல்வேறு குழுக்களில் பணியாற்றியுள்ளார். பல மருத்துவர்களுக்கு வழிகாட்டியாகவும் திகழ்ந்தார்.

மத்திய அரசு சார்பில் பத்ம, பத்மபூஷண், பத்மவிபூஷண், தமிழக அரசு சார்பில் அவ்வையார் விருது, வாழ்நாள் சாதனையாளர் விருது என பல்வேறு விருதுகளை பெற்றுள்ளார். விருதுகள் மூலம் கிடைக்கும் தொகையையும் மருத்துவமனையின் வளர்ச்சிக்கே பயன்படுத்தினார்.

புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டு பிடித்தால் முழுமையாக குணப்படுத்திவிடலாம் என்ற நம்பிக்கையை பொதுமக்களிடம், குறிப்பாக ஏழை மக்களிடம் ஏற்படுத்திய மருத்துவர் வி.சாந்தாவின் மறைவு மருத்துவ உலகுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாக அமைந்துள்ளது.

# கிரிக்கெட் வீரர் நடராஜனுக்கு சொந்த கிராமத்தில் செண்டை மேளம் முழங்க மக்கள் வரவேற்பு




சேலம், தாரமங்கலம் அருகே உள்ள சின்னப்பம்பட்டியைச் சேர்ந்த இந்திய கிரிக்கெட் அணி வீரர் நடராஜன் இன்று, ஆஸ்திரேலியாவில் இருந்து சொந்த கிராமத்துக்குத் திரும்பினார். அவருக்குப் பொதுமக்கள் செண்டை மேளம் முழங்க, குதிரை பூட்டிய சாரட் வண்டியில் ஊர்வலமாக அழைத்துச் சென்று சிறப்பான வரவேற்பு அளித்தனர்.இந்திய கிரிக்கெட் அணியில் வேகப்பந்து வீரராக சேலம், தாரமங்கலம் அருகே உள்ள சின்னப்பம்பட்டியை சேர்ந்த நடராஜன் இடம் பெற்றிருந்தார்.

இவர் ஆஸ்திரேலியாவில் நடந்த டெஸ்ட் போட்டியில் பங்கேற்று, சிறப்பான பந்து வீச்சு மூலமாக இந்திய அணியின் வெற்றிக்குப் பக்கபலமாகத் திகழ்ந்தார். சிறிய கிராமத்தில் இருந்து இந்திய கிரிக்கெட் அணியில் இடம்பிடித்து, சிறப்பான பந்து வீச்சு மூலமாக உலகளாவிய புகழைப் பெற்ற நடராஜனுக்கு அரசியல் தலைவர்கள், கிரிக்கெட் ஜாம்பவான்கள் பலரும் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளனர்.இந்நிலையில், கிரிக்கெட் வீரர் நடராஜன் ஆஸ்திரேலிய சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு, இந்தியா திரும்பினார்.

பெங்களூருவுக்கு விமானம் மூலம் வந்தடைந்த கிரிக்கெட் வீரர் நடராஜன், சொந்த ஊரான சின்னப்பம்பட்டிக்கு கார் மூலம் வந்தடைந்தார். சின்னப்பம்பட்டி பிரிவு சாலையில் இருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ள அவர் வீட்டுக்கு, குதிரைகள் பூட்டிய சாரட் வண்டியில் பொதுமக்கள் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். வழிநெடுகிலும் கிரிக்கெட் வீரர் நடராஜனுக்கு, சாலையின் இருபுறம் பொதுமக்கள் நின்று, மலர் தூவி சிறப்பான வரவேற்பு அளித்தனர். மேலும், செண்டை மேளம் முழங்க நடராஜனை ஊர்வலமாக மக்கள் அழைத்துச் சென்றனர். அவருக்குப் பாராட்டுத் தெரிவிக்க அலங்கார மேடைகள் போடப்பட்டிருந்தன.

கரோனா தொற்றுப் பரவல் விதிமுறை அமலில் உள்ளதால், சுகாதாரத்துறை அதிகாரிகள் போலீஸாருடன் கிரிக்கெட் வீரர் நடராஜன் வீட்டுக்கு வந்து, பாராட்டு நிகழ்ச்சி நடத்த அனுமதி மறுக்கப்பட்டுள்ளதைத் தெரிவித்தனர்.மேலும், அவர் ஆஸ்திரேலியாவில் இருந்து வந்துள்ளதால், 14 நாட்கள் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் கூறினர். இதனையடுத்து, கிரிக்கெட் வீரர் நடராஜனுக்கு தேசியக் கொடியைப் போர்த்தி, மாலை அணிவித்து ஊர் மக்கள் பாராட்டுதல்களைத் தெரிவித்தனர். தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டிய காரணத்தால் கிரிக்கெட் வீரர் நடராஜன், பத்திரிக்கையாளர்கள் சந்திப்பு, பாராட்டு நிகழ்ச்சிகளில் பங்கேற்கவில்லை.

# கமலா ஹாரிஸின் பூர்வீக கிராமமான துளசேந்திரபுரத்தில் மக்கள் கொண்டாட்டம்



அமெரிக்காவின் புதிய துணை அதிபராக பொறுப்பேற்று உள்ள ஜனநாயக கட்சியைச் சேர்ந்த கமலா ஹாரிஸ், திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருகேயுள்ள துளசேந்திரபுரம் கிராமத்தை பூர்வீகமாகக் கொண்டவர். இவரது தாய் வழி தாத்தா கோபாலன், பாட்டி ராஜம் ஆகியோர் துளசேந்திரபுரத்தைச் சேர்ந்தவர்கள். முன்னதாக, கமலா ஹாரிஸ் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட போதும், அவர் வெற்றி பெற்றபோதும் இந்தக் கிராம மக்கள் பெரும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். இந்நிலையில், இந்திய நேரப்படி நேற்று இரவு அமெரிக்க துணை அதிபராக கமலா ஹாரிஸ் பதவியேற்ற நிலையில், துளசேந்திரபுரத்தில் உள்ள அவரது மூதாதையர் வழிபட்ட அவரது குலதெய்வக் கோயிலான தர்மசாஸ்தா கோயிலில் பொதுமக்கள் நேற்று வழிபாடு செய்து, அனைவருக்கும் இனிப்பு வழங்கி பட்டாசு வெடித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

# கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் நடத்திய "ஞானகானம்" பாடல்கள் வெளியீட்டு விழா




நீண்ட காலமாக கனடாவில் தமிழ்க் கவிதை மற்றும் கவிதை இலக்கணம், கவிதை வகுப்புக்கள் ஆகியவற்றை நடத்தி இலக்கியச் சேவையாற்றும் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம், இணையவழி ஊடாக நடத்திய "ஞானகானம்" பாடல்கள் வெளியீட்டு விழா கடந்த 17-01-2021 அன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மேற்படி நிகழ்விற்கு கழகத்தின் தலைவர் கவிஞர் கந்தஸ்ரீ பஞ்சநாதன் அவர்கள் தலைமை வகித்தார்.

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் நீண்ட கால உறுப்பினரும் கவிஞருமான அருட்கவி தம்பிஐயா ஞானகணேசன் அவர்களது ஐந்து பாடல்களே "ஞானகானம்" என்னும் பெயரில் வெளியிடப்பெற்றன.




ஸ்காபுறோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்கள், ஆசியுரை வழங்கினார். கவிநாயகர் வி. கந்தவனம் அவர்கள் குரு ஆசியுரை வழங்கினார்.

வெளியிடப்பெற்ற ஐந்து பாடல்களில் பக்திப் பாடலை வைத்திய கலாநிதி இராமநாதன் லம்போதரன் அவர்கள், மாவீரருக்கான பாடலை கவிஞர் மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா அவர்கள், குருவிற்கான பாடலை கவிஞர் அகணி சுரேஸ் அவர்கள், வன்னி மண் புகழ்பாடும் பாடலை கலாநிதி கௌசல்யா சுப்பிரமணியன், தமிழ் மொழியின் பெருமையினைப் பாடும் பாடலை உதயன் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்கள் ஆகியோர் வெளியீட்டு வைத்து கருத்தாளமிக்க உரைகளை ஆற்றினார்கள்.



இந்த ஐவரின் உரைகளும் பாடல்களுக்கு ஏற்பவும், கவிதை மற்றும் இசை சார்ந்த பல அம்சங்களை உள்ளடக்கியதாகவும் இருந்ததாக கலந்து கொண்ட பலர் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட போது மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்கள். அத்துடன் பாடலாசிரியர் அருட்கவி தம்பிஐயா ஞானகணேசன் அவர்களது கவிதை புனையும் ஆற்றல், யாப்பிலக்கணத்தில் அவர் அடைந்துள்ள இடம், அயராத உழைப்பு, நட்பு பாராட்டும் உள்ளம் ஆகியவை தொடர்பாக ஒவ்வொரு பேச்சாளரும் குறிப்பிட்டுச் சென்றமை அவருக்கான புகழாரங்களை எடுத்துக்காட்டின.



பாடல்களைப் பற்றிய தொகுப்புரையை வழங்கிய கலாநிதி சுப்பிரமணியன் அவர்கள் தனது உரையில் பல விடயங்களை எடுத்துத் கூறினார். கனடாவில் கலை இலக்கியவாதிகள் எழுத்தாளர்கள் பத்திரிகையாளர்கள் ஆகியோர் தொடர்ச்சியாக ஓய்வின்றி ஆற்றி வரும் பணிகளை எடுத்துக் கூறிய அவர், இவ்வாறான விழாக்கள், பணிகள், படைப்பிலக்கியங்களின் வெளியீடுகள் ஆகியவை இன்னும் 15 ஆண்டுகளுக்குப் பின்னர் இவ்வாறான விடயங்களும் படைப்பிலக்கிய முயற்சிகள் இடம்பெறுமா என்று கேள்வியையும் எழுப்பினார். நெடுங்காலமாக தமிழ் இலக்கியப் பரப்பிலும் கல்வித் தளத்திலும் சிறந்த ஒரு விமர்சகராக பிரகாசிக்கும் அவரது கருத்துக்கள், அங்கு கலந்து கொண்ட அனைவரையும் மகிழ்ச்சிக்குள்ளாக்கின என்றால் அது மிகையாகாது.





தொடர்ந்து பாடலாசிரியர் அருட்கவி தம்பிஐயா ஞானகணேசன் அவர்களது பதிலுரை இடம்பெற்றது. அதன்போது அவர்கள்கனடாவின் தன்னை தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்த கவிநாயர் கந்தவனம் மற்றும் பண்டிதர்- அமரர் - அலெக்ஸ ாண்டர் ஆகியோர்க்கு நன்றி கூறி, தன்னுடைய இலக்கிய மற்றும் சமூகப் பங்களிப்பை எப்போது உற்சாகப்படுத்தி ஊக்கமளிக்கும் நண்பர்கள், குறிப்பாக கனடா தமிழ்க் கவிஞர் கழகத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்.



தொடர்ந்து கவிஞர் கழகத்தின் முக்கிய உறுப்பினர் கவிதாயினி பவானி தர்மகுலசிங்கம் நன்றி கூறினார்.

தொடர்ந்து உலகின் பல நாடுகளிலிருந்தும் கலந்து கொண்ட பல ஆரவலர்கள் அருட்கவி தம்பிஐயா ஞானகணேசன் அவர்களைப் பாராட்டி தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்கள்.

---

*- மொன்றியல் வீணைமைந்தன் எழுதுகின்றார்*

# #31 சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

பாரதக் கதையை வியாச முனிவர் சொல்லச்சொல்ல விநாயகர் பெருமான் எழுதியதாக கர்ண பரம்பரைக் கதையொன்றுண்டு! விநாயகர் தனது தந்தத்தை உடைத்து அதனையே எழுத்தாணியாகக் கொண்டு எழுதினாராம். விநாயகப் பெருமான் திருக்கரங்களுள் ஒன்றில் உடைந்த கொம்பு ஒன்று இருப்பதால் அது எழுதுகோல் கருவியாகவிருக்கலாம்! எனவே விநாயகப் பெருமான் தன்னை வருத்தி ஒரு தர்ம சரிதத்தை எழுதி முடித்தார் என்றே கொள்ள வேண்டும். அதே போல் தான் நமது நடிகர் திலகம் ஏற்றுக்கொண்ட பல பாத்திரங்கள் நேற்றும், இன்றும், நாளையும் பேசப்படுகிறதென்றால் அதை வரலாறாக்க சிவாஜி அவர்கள் எத்துணை தூரம் தன்னை வருத்தி இருப்பார் என்பது பலருக்கு தெரியாத விடயம். சுமார் இரு தசாப்தங்களுக்கு முன் எனது இனிய நண்பர் கலைமாமணி டாக்டர் சீர்காழி சிவசிதம்பரம் அவர்கள் கனடா டொரன்டோ நகர் வந்திருந்தபோது அவரை வழியனுப்ப விமான நிலையம் சென்றிருந்தேன் விமான நிலையத்தில் கூட இருவரும் சிவாஜி ஐயா பற்றியே உரையாடினோம்!

தனது தந்தையார் அமரர் சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள், சிவாஜி இடத்தில் நெருக்கமாக இருந்த காலங்களை நினைவு படுத்தினார். "ராஜராஜசோழன்" திரைப்படத்தில் ஒரு காட்சியில் கண்கள் சிவந்திருக்க வேண்டுமாம். என்னவெல்லாமோ செய்து பார்த்தார் சிவாஜி. விழிகள் சிவக்கவில்லையாம். உடனே ஒரு உதவியாளரைக் கூப்பிட்டு ஒரு துவாயைக் கொண்டுவரச் செய்தாராம். அத்துவாயின் விளிம்புகள் கொண்டு இரு விழிகளையும் நன்றாக கசக்கினார். இப்போது எனது விழிகள் சிவந்து இருக்கின்றனவா? என்று சீர்காழியை பார்த்து கேட்டாராம்! தந்தையார் பிரம்மித்துப் போய் விட்டாராம்! இப்படியும் ஒரு கலைஞனா! நடிப்பதற்காக கண்களையே கூட புண்ணாக்கத் துணிந்து விட்டாரே என்று தந்தையார் கூறியதை நினைவு படுத்தினார் டாக்டர் சிவசிதம்பரம் அவர்கள்.



அப்படித்தான் "பாசமலர்" இறுதிக் காட்சி மிகவும் உணர்வுபூர்வமாக அமைய வேண்டும் என்று சிவாஜி நினைத்தார். முதல் நாள் இரவு முழுவதும் அவர் தூங்கவில்லை. தயாரிப்பாளர் "மோகன் ஆர்ட்ஸ்" மோகன் வீட்டுக்கு கூட்டிச் சென்று விடியவிடிய தனது வீட்டிலுள்ள மினி தியேட்டரில் தொடர்ச்சியாக ஆங்கிலப் படங்களைப் போட்டுப் பார்த்து நித்திரை முழித்தார்.

. படம் ஓட்டிய ஆப்பரேட்டர் களைப்படைந்து இனி முடியாது என்று வீடு திரும்பி விட்டாராம். மோகனும் வீடு திரும்பி விட்டார். ஆனால் சிவாஜி தூங்கவில்லை, தூங்கக் கூடாது என்பதற்காக உடற்பயிற்சி செய்வது போல் வீட்டைச்சுற்றி ஓடத்தொடங்கியுள்ளார். தாயாருக்கும், மனைவி கமலா அம்மாவிற்கும் ஒன்றுமே புரியவில்லை! இவருக்கு இன்று என்ன நடந்தது என எல்லோருக்கும் ஆச்சரியம்! அவர் தன்னை வருத்திக் கொண்டிருந்தார்! ஏன்? அதுதான் சிவாஜியின் தொழில் பக்தி! எடுத்துக்கொண்ட பாத்திரம் நிலைக்க வேண்டும் என்ற லட்சிய வெறி! காலை-யில் குளித்துவிட்டு படப்பிடிப்பு நிலையம் செல்கிறார் ஒப்பனை ரெடியாகிவிட்டது. இயக்குனர் பீம்சிங் வந்து சிவாஜியின் முகத்தைப் பார்க்கிறார். மிகவும் பரிதாபப்படுகிறார். உடல்நிலை சரியில்லையா... படப்பிடிப்பு ஒத்தி வைப்போமா என சிந்திக்கிறார். சிவாஜியோ படப்பிடிப்பிற்குரிய தனது வசனங்களைச் சரிபார்க்க வேண்டுமென்கிறார்.

இறுதிக்காட்சி 7 பக்க வசனங்கள். சாவித்திரி உடன் தனக்குள்ள வசனங்களை சரி பார்த்துக் கொள்கிறார். முதல் நாள் இரவு ஆங்கிலப் படங்களைப் பார்த்துக் கொண்டிருந்தது பொழுதுபோக்கிற்காக அல்ல... மனதில் அவர் சாவித்திரி உடன் ஒத்திகை பார்த்து தயாராகவிருந்தார். இந்தக் காட்சி இப்படித்தான் அமைய வேண்டும் என்று தனக்குள் ஒரு தீர்மானத்தை எடுத்திருந்தார். கிளைமாக்ஸ் காட்சி ரெடி. அன்றைய நெப்டியூன் (பின்னாளில் சத்யா) ஸ்டூடியோவில் அப்படி ஒரு நிசப்தம் நிலவவில்லையாம். அப்படியொரு சோகக் காட்சி எந்தப் படங்களிலும் இதுவரை எவராலும் நடிக்கப் பெறவில்லை என்பது திரையுலக வரலாறு. கதைப்படி... தீபாவளிப்பட்டாசுகளுக்கு நடுவே சாவித்திரியின் சின்னஞ்சிறு வயது மகள் சிக்கிக் கொள்வதை கண்டு அவளை சிவாஜி காப்பாற்றப் போய் தன் கண்கள் இரண்டையும் (பார்வை) இழந்துவிடுகிறார். தான் காப்பாற்றியது தன் தங்கை மகள் என்று அவருக்குத் தெரியாது. பட்டாசு வெடி காயங்களால் பார்வை போய்விட்டது. தங்கையைப் பிரிந்து ஊர் ஊராக அலைந்து உடலும் உள்ளமும் சோர்ந்து உயிர் பிரியும் வேளையிலும்.... "ராதா வருவாளா... (தங்கை) என் ராதா வருவாளா... அவள் வரமாட்டா.." என முனங்கிக் கொண்டிருக்கும் போது... மகளையும் அழைத்துக்கொண்டு சாவித்திரி "அண்ணா..." என கதறிக்கொண்டு வருகிறார். பார்க்க முடியாவிட்டாலும் தன் தங்கையின் குரல் கேட்டு ஆர்வத்தோடும்... சகோதர பாசத்தோடும்... படபடப்போடும்.. "அம்மாடி..! வந்துட்டாயாம்மா தங்கச்சி"... (இக்காட்சியை எழுதும்போது பல வருடங்களுக்குப்பின் என் விழிகள் பனிக்கின்றன)



...எங்கே நீ வராமலேயே நான் போய் விடுவானோன்னு பயந்துட்டேனம்மா.." என்பார்.

"அண்ணா என்னை விட்டுட்டு எங்கேண்ணா போயிட்டே.."

"எங்கேயும் போகலம்மா... நீ போட்ட அன்பு வட்டத்தையும் தாண்டி என்னால எங்கேயும் போக முடியலைம்மா..." என்பார்.

"அப்போது அங்கே வரும் சாவித்திரியின் மகள், "அம்மா" இந்த மாமா தான் பட்டாசு வெடிச்சப்போ என்னை காப்பாற்றினாரு"

"மாமா.. ராதா.. இந்த வீணையின் நாதம் எங்கிருந்து வருது..." மழலை கொஞ்சும் மருமகள் குழந்தையை அப்படியே வாரி அணைத்துக்கொண்டு... "உன் பேரென்னம்மா...?"

"சாந்தி". "என் வாழ்க்கையில் எனக்கு கிடைக்காத ஒன்னை உங்கம்மா உனக்கு பேரா வச்சிருக்காளா.." என்று சோகம் பொங்க கேட்பார். தொடர்ந்து "அம்மா.. ராதா! நானோ ஏழை நீ பணக்காரி எனக்கொரு உதவி செய்வாயாம்மா?"

"சொல்லுங்கண்ணா..." "என் மகனுக்கு உன் பெண்ணை கட்டி கொடுப்பியாம்மா"

அதை எதிர்பாராத சாவித்திரி மனம் பதறி துக்கம் மேலிட "இதை என்னிடம் கேட்கணுமான்னா?" ."உன்கிட்ட கேட்காம நான் எதுவும் செய்யலியேம்மா.." தங்கச்சி! நீ சின்னப்பிள்ளையாயிருந்தப்ப.. நான் ஜடை பின்னி விடுவேன். நீ அடம் பிடிப்பே.. அப்ப கூட உன் மேல எனக்குப் பாசம் தான் அதிகமாச்சே தவிர கோபம் வரலேம்மா... (ஆரூர்தாஸ் வசனம் உயிரைப் பிழிந்தெடுக்கிறது)

உனக்கு நினைவிருக்காம்மா...?

நீயும் நானும் அப்ப சின்ன பிள்ளையாயிருந்தப்ப எதுக்கெடுத்தாலும் நீ அழுவே.. உன்னை சமாதானப் படுத்துவதற்காக நான் கைவீசம்மா.. கைவீசு.. கடைக்குப் போகலாம் கைவீசு.. மிட்டாய் வாங்கலாம் கைவீசு.."

துக்கம் மேலிட கண்ணீர் சிந்தி நா தழுதழுக்க.. அதற்கு மேல் பேசமுடியாமல் அழுவதும்... தன் மகனையும் தங்கச்சி குழந்தையையும் தூக்கிக்கொண்டு

*(தொடர்ச்சி 21ம் பக்கம்)*

# இந்துக் கோயில்களை இடித்துவிட்டு பவுத்த விகாரைகளைக் கட்டும் பணியில் சனாதிபதி கோட்டபாய!

கனடா - நக்கீரன்

முப்பது ஆண்டு காலக் கொடிய போரினால் தங்கள் வாழ்வாதாரங்களை இழந்து அல்லல்படும் எமது மக்கள் மீது சிறிலங்காவின் ஆட்சியாளர்கள் சமயப் போர் ஒன்றையும் அண்மைக் காலமாக கட்டழ்த்து வருகிறார்கள். தொல்பொருள் ஆராய்ச்சி என்ற போர்வையில் தொல்பொருள் திணைக்களம் தமிழர்களது வாழ்விடங்களையும் வழிபாட்டிடங்களையும் ஆக்கிரமித்து வருகிறது. இந்தப் பணியில் அரசயந்திரம் முழு அளவில் முடுக்குவிக்கப்பட்டு வருகிறது.



சென்ற வாரம் முல்லைத்தீவு குருந்தூர்மலை ஆதி ஐயனார் ஆலயத்தில் சூலம் வைத்து வழிபாடு செய்த இடம் திடீரென்று சிறிலங்கா இராணுவத்தின் உதவியுடன் அகற்றப்பட்டு அந்த இடத்தில் வெளியில் இருந்து கொண்டு வரப்பட்ட புத்தரின் சிலை வைக்கப்பட்டுள்ளது. பின்னர் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தலைமையில் வழிபாடு நடத்தப்பட்டு தொல்லியல் ஆய்வுகள் தொடங்கப்பட்டுள்ளன.



குருந்தூர்மலை ஆதி ஐயனார் ஆலயப் பகுதி முழுதும் பவுத்த மதக் கொடிகளாலும் இராணுவத்தின் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. சிறிலங்கா இராணுவம் ஒரு தேசிய இராணுவம் போல் இல்லாமல் ஒரு இன - மதவாத இராணுவமாக செயற்பட்டுகிறது என்பது தெரிந்ததே. இந்தச் செய்தி தமிழ்மக்களுக்குப் பொதுவாகவும் சைவத் தமிழ்மக்களுக்கு பேரதிர்ச்சியையும் கவலையையும் அளித்துள்ளது. இது தமிழர் தாயகப் பிரதேசத்தை திட்டமிட்டு பவுத்தமயமாக்கும் முயற்சி என தமிழ்த் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தமிழரின் தாயகப் பிரதேசத்தில் உள்ள குருந்தூர்மலைப் பகுதியை ஆக்கிரமிப்பதில் பவுத்த பிக்குகள் கடந்த சில ஆண்டுகளாக முனைப்போடு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். தொல்லியல் ஆய்வு என்ற போர்வையில் அப்பகுதியை ஆக்கிரமித்து பவுத்த விகாரை அமைப்பதற்கு பிக்குகள் தீவிரம் காட்டி வந்தனர். இதனைத் தமிழர்கள் சட்டப் பூர்வமான நடவடிக்கைகளால் தடுத்து வந்துள்ளனர்.

வட கிழக்கில், குறிப்பாக கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் மூலம் நில ஆக்கிரமிப்பு நடத்தப்பட்ட காரணத்தால் இன்று தமிழர்கள் அம்பாறை, திரு-கோணமலை மாவட்டங்களில் சிறுபான்மை ஆக்கப்பட்டுள்ளனர். வடக்கிலும் 18 கிராமங்களை கொண்ட வெலி ஓயா பிரதேச செயலாளர் பிரிவில் 11,189 பேர்களைக் கொண்ட 3,336 கும் அதிகமான சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன.

குருந்தூர்மலை ஆதி ஐயனார் ஆலயம் மட்டுமல்ல, 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தொல்லியல் ஆராய்ச்சி என்ற போர்வையில் தமிழர்களின் பூர்வீக வாழ்விடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு திடீரென பவுத்த விகாரைகளும் புத்தர் சிலைகளும் முளைத்துள்ளன.

இலங்கை அரசாங்கத்தின் பல்வேறு நிறுவனங்கள் நில அபகரிப்புக்கு நாடாளுமன்றச் சட்டங்களைப் பயன்படுத்துகின்றன, அவற்றில் பெரும்பாலானவை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் இயற்றப்பட்டவை. அதில் தொல்பொருள் ஆராய்ச்சி பற்றிய சட்டம் முக்கியமானதாகும். இந்தச் சட்டத்தின் கீழ் அரசாங்கம் தாம் விரும்பிய காணிகளை வர்த்தமானி அறிவித்தல் மூலம் கையகப்படுத்தலாம். கிழக்கில், முக்கியமாக திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி, திரியாய், கும்புறுப்பிட்டி, தென்னமரவாடி போன்ற கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தொல்பொருள் இடங்கள் என வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டு முள்வேலிகள் போடப்பட்டுள்ளன. அவற்றைப் பாதுகாக்க இராணுவம் நிறுத்தப்பட்டுள்ளது.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபைக்குச் சொந்தமானதும் இந்துக்களுக்குப் புனிதமான கன்னியா சுடுநீர்க் கிணறுகள் ஒரே நாளில் பவுத்த புராதனச் தொல்பொருள் சின்னங்கள் என மாவட்ட அரசாங்க அதிபரால் அறிவிக்கப்பட்டு தொல்பொருள் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இது நடந்தபோது (ஒக்தோபர் 05, 2010) மகிந்தா இராசபக்ச சனாதிபதியாக இருந்தார். அங்குள்ள சேதமடைந்த பிள்ளையார் கோவிலை புனரமைக்க அனுமதி மறுக்கப்பட்டது. அதே நேரம் ஒரு புதிய புத்த கோவில் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. அங்கு ஒரு பவுத்த தேரர் நிரந்தரமாக குடியேறியுள்ளார். இந்தப் பிரச்சினை இப்போது நீதிமன்றத்தில் இருக்கிறது.

வவுனியா வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவான நெடுங்கேணி, ஒலுமடு பாலமோட்டை கிராமத்தில் இருந்து கிட்டத்தட்ட 3 கிமீ தொலைவில் உள்ள வெடுக்குநாறி மலை அமைந்துள்ளது. சுமார் 3000 ஆம் ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த மலையானது பல வரலாற்றுச் சிறப்புக்களைக் கொண்டு காணப்படுகின்றது. பண்டய காலத்தில் நாகர்கள் இங்கு வாழ்ந்ததற்கான தடயங்கள் காணப்படுகின்றன. முந்நூறு மீற்றர் உயரமான வெடுக்குநாறி மலை அடிவாரத்தின் கீழ் தமிழ்ப் பிராமிய கல்வெட்டுக்கள் மற்றும் வட்டெழுத்துக்கள் போன்றவற்றைக் காணமு-டியும். மலையின் உச்சியில் ஆதி லிங்கேஸ்வரர் எனும் சிவனுடைய இலிங்கம் அமைந்துள்ளது. கிட்டத்தட்ட ஐந்து தலைமுறையினருக்கு மேலாக இப்பிரதேச மக்கள் இந்த ஆலயத்தை தொல்பொருள் திணைக்களம் சொந்தம் கொண்டாடி வருகிறது. தமிழர்களின் வட, கிழக்கு எல்லையோர கிராமங்கள் திட்டமிட்டு ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றன. அதேபோன்று இவ்வாலயமும் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டுவிடும் என்ற அச்சம் தமிழ்மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. இந்த ஆலயம் தொடர்பான வழக்கு எதிர்வரும் சனவரி 29, 2021 ஆம் திகதி முல்லைத்தீவு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகிறது.

திருக்கேதீஸ்வரம், சிவனொளிபாத மலை, இரணைமடு கனகாம்பிகை ஆலய வளாகம் போன்ற இடங்களில் இராணுவத்தின் உதவியுடன் விகாரைகள் கட்டும் முயற்சியில் பொதுபல சேனா, இராவண பலய, சிங்கள இராவய, சிங்கலே போன்ற தீவிர சிங்கள - பவுத்த அமைப்புக்கள் ஆட்சியாளரின் ஆசியுடன் இயங்கி வருகின்றன. ஏற்கனவே வடக்கில் முக்கிய ஊர்களில் நாற்பதுக்கும் மேலான பவுத்த விகாரைகள் இராணுவத்தால் கட்டப்பட்டுள்ளன. புத்தர் சிலைகளும் நாட்டப்பட்டுள்ளன.

சனாதிபதி கோட்டபாய இராசபக்ச ஆட்சிக்கு வந்ததும் கிழக்கில் பவுத்த சின்னங்களை அடையாளப்படுத்தப் பெரும்பான்மை பவுத்த தேரர்களைக் கொண்ட செயலணி கடந்த யூன் மாதம் உருவாக்கப்பட்டது. அதன் கடமைகள் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளன.

(1) கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை அடையாளம் காணல்.

(2) அத்தகைய அடையாளம் காணப்பட்ட இடங்கள் மற்றும் தொல்பொருட்களைப் பாதுகாத்து மீட்டெடுப்பதன் மூலம் தொல்பொருள் பாரம்பரியத்தை நிர்வகிப்பதற்கான பொருத்தமான திட்டத்தை அடையாளம் கண்டு செயல்படுத்தல்.

(3) தொல்பொருள் இடங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய நிலத்தின் அளவைக் கண்டறிந்து அவற்றை முறையாகவும் சட்டரீதியாகவும் ஒதுக்கத் தே-வையான நடவடிக்கைகளை எடுத்தல்.

(4) தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் கலாச்சார மதிப்பைப் பாதுகாத்தல் மற்றும் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் சிறிலங்காவின் தனித்துவத்தை ஊக்குவித்தல் மற்றும் அத்தகைய மரபுகளை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளைச் செய்தல்.

இந்தச் செயலணியில் இடம்பெற்றுள்ள எல்லாவல மேத்தானந்த தேரர், திருகோணமலையில் கோகண்ண வி-காரை அமைந்துள்ள இடத்திலேயே திருக்கோணேஸ்வரம் கோயில் அமைக்கப்பட்டுள்ளதாக பிபிசி தமிழ் ஊடகத்துக்கு அளித்த நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார். மேலும் இலங்கையிலுள்ள பழைமை வாய்ந்த பல பவுத்த விகாரைகள் இல்லாது செய்யப்பட்டு, இந்துக் கோயில்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு கிழக்கு மாகாண தொல்பொருள் தொடர்பில் ஆராயும் சனாதிபதி செலயணியின் உறுப்பினர் ஒருவர் இலங்கை மக்களிடையே ஆட்சியாளரின் ஆசியுடன் வெறுப்பையும் வேற்றுமையையும் பூசல்களையும் விதைத்து அமைதியைக் குலைத்து வருகிறார். இவர் மட்டுமல்ல இன்னும் பல பவுத்த பிக்குகள் சிங்கள - பவுத்த தீவிரவாதக் கருத்துக்களை பொதுவெளியில் கூறிவருகிறார்கள்.

முன்னர் தமிழர் வாழும் பாரம்பரிய நிலத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் சிங்கள மயப்படுத்தியது போல சனாதிபதி கோட்டபாய இரசபக்ச திட்டமிட்டு இந்து ஆலயங்களை பவுத்த விகாரைகளாக அடையாளப்படுத்தி பவுத்த மயப்படுத்தி வருகிறார்.

தமிழ்மக்கள் பவுத்த மதத்தை மதிப்பவர்கள். புத்தர் ஒரு இந்துக் குடும்பத்தில் பிறந்தவர். அவரை திருமாலின் 9 ஆவது அவதாரம் என இந்துமதம் போற்றுகிறது. அவர் போதித்த தசசீலங்கள் இந்துமதத்திலும் காணப்படுகின்றன. புத்தரது வினைக் கோட்பாடு, நிலையாமைக் கோட்பாடு, அறநெறிக் கோட்பாடு இந்து சமயத்திலும் உள்ளன. ஒருவர் செய்யும் நல்வினை - தீவினை காரணமாக மறுபிறப்பு நிகழ்கிறது என்பது பவுத்த கோட்பாடு. புத்தர் வானுலகம், தேவர்கள் பற்றியெல்லாம் நிறை-யவே கூறியுள்ளார். புத்த சமயம் இந்திரன், பிரம்மா, காமவேள், மணிமேகலாதேவி, தாராதேவி, அவலோகிதேஸ்வரர் போன்ற தெய்வங்களை மிக உயரிய நிலையில் வைத்துப் போற்றுகிறது. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை மகா-யான பவுத்த நூலாகும்.

சனபதி கோட்டபாய இராசபக்ச ஆட்சியில் இந்து ஆலயங்களை இடித்துவிட்டு பவுத்த விகாரைகளைக் கட்டும் திருப்பணி நடை பெறுகிறது. இந்த ஏதேச்சதிகாரத்துக்கு எதிராகவும் தமிழ்மக்களது பண்பாடு, பாரம்பரியம், வாழ்விடங்களைப் பாதுகாக்கவும் தமிழர்கள் ஒன்று சேர்ந்து ஒரே குரலில் போராட வேண்டும். இல்லையேல் சிங்கள மயப்படுத்தல் போல பவுத்த மயமாக்கலும் நிதர்சனமாகிவிடும்.

# ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சே நேவல்னிக்கு மீண்டும் நெருக்கடி கொடுக்கும் ஜனாதிபதி புட்டின்



ரஷ்ய நாட்டின் ஜனாதிபதி புட்டின் அங்கு மறைமுகமாக பல அதிகார துஸ்பிரயோகங்களைச் செய்து வருகின்றார் என்ற செய்திகள் கடந்த பல வருடங்களாகவே வெளியாகி வரும் நிலையில் தான் இறக்கும் வரை தானே ஜனாதிபதியாக இருக்க வேண்டும் என்றே அவரம் பிடிவாதமாக செயற்பட்டு வருகின்றார். இதற்காக அங்கு எதிர்க்கட்சிகளை இயங்கவிடமாமல் தடுப்பதில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றார்.

மக்கள் அறியாத வண்ணம் இராணுவத்தின் உதவியோடு இவற்றை செய்து வருகின்றார். இந்த வகையில் ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சே நேவல்னி, நேற்று முன்தினம் மொஸ்கோ விமான நிலையத்துக்குச் சென்றுசேர்ந்த சில நிமிடங்களில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவமானது, ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சே நேவல்னிக்கு ஜனாதிபதி புட்டின் மீண்டும் நெருக்கடி கொடுக்கும் கொடிய செயலுக்கு உதாரணமாக விளங்குகின்றது என் உலக நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. இந்த நிலையில் நஞ்சூட்டப்பட்டதால் சுமார் 5 மாதங்களாக நினைவிழந்த நிலையிலிருந்த அவர், பெர்லின் நகரில் மருத்துவ சிகிச்சை பெற்ற பின்னர் ரஷ்யா திரும்பினார். கையாடல் தொடர்பில் நேவல்னிக்கு விதிக்கப்பட்ட சிறைத்தண்டனை தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பான பிணை நிபந்தனைகளை மீறிய குற்றச்சாட்டின்பேரில் அவர் தற்போது தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக மொஸ்கோ சிறைச்சாலைத் துறை குறிப்பிட்டது.

இரசாயன - ஆயுத நிபுணர்கள் மேற்கொண்ட பரிசோதனைகளில் நேவல்னிக்கு நரம்புகளை பாதிக்கும் நஞ்சு, அவர் அறியாமல் ஊட்டப்பட்டிருக்கலாம் என கூறப்பட்டது. தாம் நஞ்சூட்டப்பட்டதற்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினே காரணம் என நேவல்னி கூறிவருகிறார். இருப்பினும் ரஷ்ய அரசாங்கம் அதை மறுத்துவருகிறது. அவர் நஞ்சூட்டப்பட்டதற்கு எந்த ஆதாரமும் இல்லை என அது குறிப்பிட்டது. நேவல்னி கைது செய்யப்பட்டதற்கு உலக அளவ-ில் கண்டனம் வெளியாகியுள்ளது. அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜோ பைடனின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் கூட ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சே நேவல்னிக்கு உடனடியாக விடுவிக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ளார். அவரை விடுவிக்கும்படி ஐரோப்பிய ஒன்றியமும் அழுத்தம் கொடுத்துள்ளது. இந்தக் கைது நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் சார்ல்ஸ் மைக்கல் கூறியுள்ளார். நேவல்னியை உடனடியாக விடுவிக்கத் தவறினால், ரஷ்யா பல வர்த்தகத் தடைகளை எதிர்கொள்ள நேரிடும் எனச் சில ஒன்றிய நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளன. அடுத்த அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்கவுள்ள ஜோ பை-டனின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகரும் ரஷ்யாவின் அதிரடி நடவடிக்கையைச் சாடினார். அது மனித உரிமை மீறல் மட்டுமல்ல என்று கூறிய ஜேக் சலிவன், ரஷ்ய மக்களின் குரலைக் கேட்கவிடாமல் செய்யும் முறையற்ற செயல் என்றும் குறிப்பிட்டார். ஆனால் இந்த கண்டனங்களை பற்றி கவலைப்படாமல் ஜனாதிபதி புட்டின் தொடர்ந்தும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

# இவ்வார ராசிபலன்

**22-01-2021 வெள்ளி தொடக்கம் 28-01-2021 வியாழன் வரையும்**

**மேஷம்:** கனத்த இதயத்தில் வலுத்த பலன் கிடைக்கக்கூடிய நல்ல வாரம். சோதனைகள் நீங்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உடல் நலம் திருப்தி தரும். மன அமைதி குறையும். திருமண வாய்ப்பு கூடும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். பொறியியல் துறை லாபம் தரும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. பேச்சு திறமை அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. வீண் செலவுகள் அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அக்னிலிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 5,7,9,0
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,U

**ரிஷபம்:** இறைவனின் கருணை இல்லத்தில் நிரம்பக் கூடிய அற்புதமான வாரம். சுய விடு வாங்க முயற்சி செய்யலாம். மங்களமான நாள். அரசு வாய்ப்பு தடைப்படும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். பயணம் அனுகூலம் தரும். திருமண முயற்சி வெற்றி தரும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். நல்லவர் நட்பு கிட்டும். எதிரிகள் பலம் குறையும்.பிரார்த்தனையால் பலன் உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: பட்டத்தரசியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,Z

**மிதுனம்:** ஆலய தரிசனத்தால் ஆத்ம பலம் பெருகக்கூடிய அற்புதமான வாரம். வெளிநாட்டுப் பயணம் உண்டு, கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். முன் கோபம் தவிர்க்கவும். பயணம் பலன் தரும். புதிய முயற்சியில் கவனம் தேவை. மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். வர்த்தக தொழில் லாபம் தரும். பதவி உயர்வு தடைப்படும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். சிரமங்கள் அதிகரிக்கும். பெற்றோர்களால் பாராட்டு பெறுவீர்கள்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஹேரம்ப கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,8,2,9
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,X

**கடகம்:** மேலான ஆசியும், மேதைகளின் நட்பும் கிடைக்கக் கூடிய அற்புதமான வாரம். தொழில் லாபம் கூடும். புதிய எண்ணங்கள் உருவாகும். வெகுமதி கூடும் நாள். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவி கிட்டும். ஆடை அணிகலன் சேரும். மருத்துவச் செலவு உண்டு. பெண்களுக்கு கவனம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: வீர அண்ணாமலையார், அதிர்ஷ்ட எண்: 5,2,6,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,G

**சிம்மம்:** புதிய பாதையில் அடியெடுத்து வைக்கக்கூடிய அற்புதமான வாரம். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெருமைகள் சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பணத் தேவை அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். புகழ் கூடும். அந்தஸ்து உயரும். உறவினர் ஒற்றுமை ஏற்படும். பொறுப்புகள் சிறப்பு சேர்க்கும். தனவரவு உண்டு. மனகசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஜலகண்டேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 8,2,5,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,D

**கன்னி:** சினமும், குணமும் சீராக அமையக்கூடிய சிறப்பான வாரம். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். சொத்து சேர்க்கை உண்டு. உழைப்பில் கவனம் தேவை. கோரிக்கை நிறைவேறும். மனை வாங்கும் யோகம் உண்டு. பொருளாதார வளம் மேம்படும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: தேவி செல்வநாயகி, அதிர்ஷ்ட எண்: 1,8,2,5
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,A

**துலாம்:** தடைகளுக்கு விடை கிடைக்கக் கூடிய நல்ல வாரம். காதல் பிரிவை ஏற்படுத்தும். வீண் குழப்பங்கள் வந்து போகும். உடல் நலம் மேம்படும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும்.புதிய முயற்சிகள் கை கூடும். நண்பர்கள் உதவி கிட்டும். குடும்பத்தில் அமைதி உண்டு. அயல் நாட்டுப் பயணம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு அற்புதமான நாள். பித்ருக்கள் சாபம் நீங்கும். மங்களச் செய்தி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மாங்கல்யேஷ்வரர், அதிர்ஷ்ட எண்: 1,4,9,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,V

**விருச்சிகம்:** பெருமையான நிகழ்வுகளை அருமையாகச் சந்திக்கக்கூடிய அற்புதமான வாரம். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். வீண் செலவுகளை தவிர்ப்பது நல்லது. புதிய சிந்தனை உருவாகும். கண்ணாடிப் பொருட்கள் சேதமாகும். எதிர்ப்புகள் தவிடுப் பொடியாகும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். வெளி வட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வேண்டாத நபர்கள் விலகுவர்.
வழிபட வேண்டிய தெய்வம்: அன்னமாரி சுவாமி, அதிர்ஷ்ட எண்: 4,2,7,0
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,Q

**தனுசு:** நுண்ணறிவைப் பயன்படுத்தி மென்மேலும் உயரக்கூடிய உன்னதமான வாரம். மனதில் மகிழ்ச்சி கூடும். நட்பு வட்டம் விரிவடையும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். பூர்வீக சொத்துக்கள் கிடைக்கும். உறவினர் வருகை உண்டு. பொறாமைகள் விலகும் நாள். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகள் தாமதமாகும். நீண்ட நாளைய நோய் விலகும். தொழில் முயற்சி வெற்றி தரும். நண்பர்கள் உதவி கிட்டும். சுபக்காரியங்கள் நடந்தேறும். இல்லத்தில் அமைதி பெருகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: படைவீட்டம்மன், அதிர்ஷ்ட எண்: 0,9,3,6
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,F

**மகரம்:** கிள்ளிக் கிடைக்கும் யோகத்தால் துள்ளிக் குதிக்கக்கூடிய அற்புதமான வாரம். புது முயற்சிகள் பலன் அளிக்கும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பாலிய நண்பர் சந்திப்பு கிட்டும். பொருளாதாரம் மேம்படும். பேச்சில் கவனம் தேவை. கடன் பாக்கிகள் வசூலாகும். வாகன யோகமுண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். சகோதர வழியில் கவனம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: வேம்புலியம்மன், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S

**கும்பம்:** பொறுமையுள்ள பெண்களுக்கு பெருமை சேரக்கூடிய அருமையான வாரம். கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். அணிமணிகள் சேரும். பெண்களுக்கு யோகம் கூடும். பணப்புழக்கம் சரளமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஓம்கார சுயம்புலிங்கம், அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K

**மீனம்:** வேண்டாத நபர்களை விலக்கி வைக்க வேண்டிய விவேகமான வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். ஜீவராசிகளுக்கு உணவு அளித்தால் யோக பலன் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பிரம்ம சக்தி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377



# அன்பின் தொனி - 596

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம் - ஜெபத்தின் வல்லமை.**

**கிறிஸ்து இயேசுவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே!**

இன்று கொரொனா வைரஸ் (COVID-19) தாக்கதினால் பாதிக்கப்பட்டு முழு உலகமே கலங்கிப் போய், என்ன செய்வோம் என்ற கேள்வியோடு திகைத்துப் போய் இருக்கக்கூடிய காலத்திற்குள் கடந்து போயக் கொண்டு இருக்கிறோம். மேலும் அதன் தாக்கத்தினால் மரித்துப்போன மக்கள் பல்லாயிரம், ஆயிரம். குறிப்பாக எமது தமிழ் மக்களும் அநேகர் மரித்திருக்கிறார்கள், அவர்கள் அனைவரினதும் குடும்பங்களை ஆற்றித், தேற்றி ஆறுதல் படுத்த எமது ஆண்டவரும் இரட்சகருமான இயேசுவிடம் வேண்டி நிற்கிறோம். உறவு-களை இழந்த குடும்ப அங்கத்தவர்கள் யாவருக்காகவும் நாம் ஜெபிக்கக் கடைமப்பட்ட வர்களாய் இருக்கிறோம், தேவாதி தேவனிடத்தில் ஜெபங்களை ஏறெடுப்போம், அவருடைய பெரிதான இரக்கத்தின்படி பதில் கொடுத்து அம் மக்களை ஆறுதல் படுத்துவாராக.

மேலும் கவலையோடும் கண்ணீரோடும் இருக்கும் ஒவ்வொருவரையும் ஆறுதல் படுத்தக்கூடிய சில தேவ வார்த்தைகளை பரிசுத்த வேதாகமத்திலிருந்து (Bible) எடுத்துக் கொடுத்துள்ளேன். விசுவாசத்தோடு வாசித்துத் திடன் கொள்ளுங்கள். ஆண்டவராகிய இயோசு கிறிஸ்துதாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே!

நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். - **மத்தேயு 11: 28**

நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன். - **யோவான் 14: 13-14**

நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன். - **யோவான் 14: 18**

நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வ தெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். - **யோவான் 15: 7**

கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது. கர்த்தரால் சத்துருவின் கைக்கு நீங்கலாக்கி மீட்கப்பட்டு, கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலுமுள்ள பல தேசங்களிலுமிருந்து சேர்க்கப்பட்டவர்கள், அப்படிச் சொல்லக்கடவர்கள். - **சங்கீதம் 107: 1-3**

தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள், அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்க லாக்கி இரட்சிக்கிறார். அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக் குத் தப்புவிக்கிறார். - **சங்கீதம் 107: 19-20**

என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன். - **எரேமியா 33:3**

நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. - **புலம்பல் 3: 22**

இந்தத் தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன், மரணபரியந்தம் நம்மை நடத்துவார். - **சங்கீதம் 48: 14**

இயேசுவே வழி இன்றய உலகிற்கு
அவர்மேலக ஒருவரில்லை இயேசுவே வழி
Jesus is the answer for the World today
above Him there is no other Jesus is the way

**மேலதிக ஜெப தேவைகளுக்குத் தொடர்பு: (647) 271-7645**

Redeemer Christ Assembly, Brampton

--------------------------------

## வீணாவின் கவிக்கணை

முன்னின்று மோதுபவன் எதிரி,
அவனை முழுதாக நம்பிடலாம்!
கடைசி வரை துணை நின்று
புத்தி கூறுபவன் தோழன்,
அவனுக்காக உயிரையும்
கொடுத்திடலாம்!
கூடவே இருந்து நீ எதிர்பாரா
நேரம் உன் முதுகில் குத்துபவன்
துரோகி, அவனை மட்டும்
எப்பொழுதுமே நம்பிவிடாதே,
ஆனால் உனக்கு வாழ்க்கையை
கற்றுக்கொடுப்பவனும் அவனே!!!

# "பிக்பாக்ஸ்" மூலம் நடிகர் கமலுக்கு தற்போது அரசியலில் செல்வாக்கு அதிகரித்துள்ளதாம்



தமிழகத்தில் தற்போது தேர்தல் பிரச்சாரம் நன்கு "சூடு" பிடித்துள்ளது. பல கட்சிகளின் தலைவர்கள் பிரச்சாரத்தில் முழுமையாக ஈடுபட்டு வருகின்றார்கள். ஆனால் தமிழகத்தில் எந்தவொரு அரசியல் தலைவருக்கும் கிடைக்காத தனித்துவம் பிக்பாக்ஸ் என்னும் தொலைக்காட்சி நிகழ்ச்சி மூலம் நடிகரும் தற்போது அரசி-யலில் குதித்துள்ளவருமான கமலுக்கு கிடைத்திருக்கிறது என்று கூறப்படுகின்றது. இது பற்றி கருத்து வெளியிட்டுள்ள பிரபல பத்திரிகையாளர் ஒருவர் தனது பதிவில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கமல் அவர்களின் செல்வாக்கு உயர்வு பற்றி தெரிவித்தமைக்கு முக்கிய காரணம் எதுவென்றால், பிக் பொஸ் நிகழ்ச்சிதான். பொதுவாக, பிக் பொஸ் நிகழ்ச்சியின் மேடையை, தன்னுடைய அரசியல் மேடையாகவே பயன்படுத்தி வருகிறார் கமல்ஹாசன் என்று ஒரு அபிப்பிராயம் உள்ளது.


ஆரம்பத்தில் இருந்தே முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு இதுவென்றாலும், கமல் எதையுமே கண்டு கொள்வது கிடையாது. இன்னும் சொல்லப் போனால், இப்போதுதான் அரசியல் வாடையை அதிகம் பரப்பி விட்டார் கமல். சமூகத்தில் நடக்கும் பிரச்சினைகள், குறைகள், அவலங்களை பிக் பொஸ் மேடையிலேயே அப்பட்டமாக சொல்லக் கூடியவர் கமல். ஆனால் அதை நேரடியாக சொல்லாமல் நக்கலாகவும், குத்தலாகவும், நகைச்சுவையாகவும், இடித்துரைத்தும் சொல்வது இவரது திறமை.

சட்டமன்றத் தேர்தலுக்கான வியூகங்களை ஒவ்வொரு கட்சியும் கையில் எடுக்கும் நேரத்தில்தான் இந்த பிக் பொஸ் நிகழ்ச்சியும் தொடங்கியது. இது கமலுக்கு கிடைத்த வாய்ப்பு ஆகும். ஒவ்வொரு நிகழ்விலும் கமல் என்ன பேச போகிறார் என்ற ஆர்வம் மேலிடும். அதற்குக் காரணம், போட்டியாளர்களை தனது கைப்பொருளாக வைத்து கமல் சொல்லும் வரிகள்தான். இந்த முறை, ஒரு படி மேலே போய், தன்னுடைய உடையிலும் கமல் மய்யத்தை கொண்டு வந்தது திகைப்பாகவே இருந்தது. ஒரு கறுப்பு ஊதா நிறத்தில் கோட் சூட் ஒன்றை அணிந்து கொண்டு, அந்த சூட்டின் "ஹாண்ட் ஸ்லீவில்" மக்கள் நீதி மய்ய கட்சியின் கொடியின் சின்னத்தை வைத்திருந்தார். எதற்காக இப்படி சின்னத்துடன் வந்தார் என்று தெரியவில்லை.

ஆனால் அவர் அன்றைய நாள் முழுவதும் தனது கையை நீட்டி நீட்டி, ஆட்டி ஆட்டி பேசிய போதுதான் விஷயம் புரிந்தது. உடனே கமல் ரசிகர்களும் சமூகவலைத்தளங்களில் இந்த ஆடை வீடியோக்களை பதிவிட்டதுடன் "எங்கள் வாக்கு கமலுக்கு" என்று பதிவிட்டனர். கமல் இப்போது செய்தது போலவேதான், மறைந்த ஜெயலலிதாவும் செய்தார். மக்கள் ஆழ்மனதில் ஒரு பொருளை பதிய செய்து விட்டு, அதன் மூலம் அவர்களின் வாக்குகளை பெறுவதுதான் அந்த தந்திரம். அப்படித்தான் எங்கும் எதிலும் இரட்டை இலையை திணித்தார். இது ஒரு தந்திரம். ஒரு வேடிக்கை நிகழ்ச்சியில் இது தேவையா என்பதுதான் பலரது கேள்வியாக இருந்தது. கொரோனா தொற்று காரணமாக, கட்சித் தலைவர்கள் யாருமே பிரசாரம் செய்யவோ, கூட்டம் போடவோ அனுமதி இல்லாத நிலையில், கமலுக்கு இந்த நிகழ்ச்சி இன்னொரு வாய்ப்பாக அமைந்தது. எகமல் என்னென்னவெல்லாம் நினைத்தாரோ, அத்தனையையும் வெளியே கொண்டு வந்தார். உலகம் முழுக்க தன் கருத்துகளை கொண்டு போய் சேர்த்தார். அதேசமயம், மற்றொரு பக்கம் தன்னுடைய கட்சியையும் மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தி விட்டார் என்றே கூறவேண்டும்". இவ்வாறு அந்த திரைப்பட இயக்குனர் தெரிவித்துள்ளார்.

# இவ்வாண்டு நம்மாழ்வார் விருது நடிகர் சிவகார்த்திகேயனுக்கு வழங்கப்படுகின்றது

தமிழ்த் திரை-யுலகில் மிகவும் குறுகிய காலத்தில் முன்னேறி பல வெற்றிப்படங்களைத் தந்தவர் நடிகர் சிவா கார்த்திகேயன். அவர் நடிப்பில் மட்டும் உயர்ந்து நிற்கவில்லை. உதவிகள் தேவையானோர்களை தேடிச் சென்று உதவி-களை வழங்கி அவர்களின் துயரங்களை துடைத்தெறிந்து இறுதியி-ல் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திய பெருமைக்குரியவர்கள். ஆனால் நடிகர் ரஜனிகாந்த், நடிகர் விஜய் போன்றவர்கள் இவ்வாறு உதவிக்கரம் நீட்டுவது மிகக் குறைவு என்றே தமிழ்நாட்டு மக்கள் கருதுகின்றார்கள்.



இவ்வாறான நிலையில், தமிழ்நாட்டின் பாரம்பரிய வேளாண் திருவிழாவில் வழங்கப்படும் நம்மாழ்வார் விருதுக்கு நடிகர் சிவகார்த்திகேயன் தேர்வு செய்யப்பட்டுள்ளார் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ் சினிமாவில் முன்னணி நடி-கராக வலம் வருபவர் சிவகார்த்திகேயன். இவரது நடிப்பில் அயலான், டாக்டர் திரைப்படம் உருவாகி உள்ளது.

சிவகார்த்திகேயன் அவ்வப்போது நலிந்த கலைஞர்கள், கஷ்டப்படும் வி-வசாயிகள், ஏழை மாணவர்களின் படிப்பு ஆகியவற்றுக்கு தன்னால் முடிந்த உதவி-யை செய்து வருகிறார். அந்த வகையில் ஏழை மாணவியின் மருத்துவ கனவை நினைவாகியது, நெல் ஜெயராமன் மகனின் படிப்பு செலவை ஏற்றுக்கொண்டது, நடிகர் தவசியின் மருத்துவ செலவிற்கு உதவி செய்தது என பல உதவிகளை செய்து வருகிறார்.

இந்நிலையில் தமிழக பாரம்பரிய விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் மற்றும் ஐந்திணை வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளை இணைந்து நடத்தும் பாரம்பரிய வேளாண் திருவிழாவில் வழங்கப்படும் நம்மாழ்வார் விருதுக்கு நடிகர் சிவகார்த்திகேயன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இந்த கௌரவத்தைப் பெறும் நடிகர் சிவா கார்த்திகேயனை பாராட்டி அவரது ரசிகர்கள் சமூக வலைத்தளத்தில் வாழ்த்துக்களை தெரிவித்து வருகிறார்கள்.

# உங்கள் சிவமே உங்கள் சக்தியின் இயக்கத்தை முடிவுசெய்கிறது



1) அடையப்பட வேண்டியதும், அடைய விரும்புவதும் நிஜமாகும்
"அடையப்பட வேண்டியது" - "அடைய "விரும்பியது" என்றவுடன்...
உடலால் இதுவரை அடையப்பட்டது, உடலால் அடைய விரும்பியது
மனதால் இதுவரை அடையப்பட்டது, மனதால் அடைய விரும்பியது
இதைப்பற்றிய எண்ணங்கள், ஆசைகள், நினைவுகள்தான் பொதுவாக முதலில் வரும். நாம் இங்கு பார்க்க இருப்பது...ஒவ்வொருவராலும் புரிந்து கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். இது உயிரால் "அடையப்பட வேண்டியதும் - அடைய விரும்புவதும்" பற்றியதாகும்.

ஆழ்ந்து புரிந்து கொள்ளுங்கள், உங்கள் "உயிரால் நீங்கள் அடையப்பட" வேண்டியதை "அடைந்தால்தான்" , அது நிகழ்ந்தால்தான்...நீங்கள் உங்கள் உடலாலும், மனத்தாலும் அடையப்பட வேண்டியதும், அடைய விரும்புவதும் நிறைவு பெறும், பூரணத்துவம் நிகழும். மீண்டும் உரைக்கின்றேன்...உடலாலோ அல்லது மனத்தாலோ - இவ்விரண்டால் "அடையப்பட வேண்டியது - அடைய விரும்புவது" என்பதைப்பற்றி நாம் இங்கு விவாதிக்கவில்லை, விவரிக்கவில்லை.

சத்தியம் 1 : உயிரால் எது அடையப்பட வேண்டும்??
ஒரு ஜீவனின் உயிர் ( Consciousness ) எந்த நிலையில் இருந்தாலும்...அது... வாழ்க்கையை நோக்கிய மிகுந்த உற்சாகத்தோடும், உத்வேகத்தோடும், வேகத்தோடும் இயங்குகின்ற நிலையில் இருந்தாலும், அல்லது தளர்ந்து சோர்ந்து படுக்கையைவிட்டே அசையமுடியாத நிலையில் இருந்தாலும், அல்லது மாயை என்ற மன உளைச்சலில் மூழ்கி தன்னை மறந்து வீழ்ந்து கிடந்தாலும், ஒரு ஜீவன் எந்த நிலையில் இருக்குமானாலும் அது அடையப்பட வேண்டியது "பரமசிவ பரம்பொருளோடு ஒன்றிய நிலை - சாயுஜ்யநிலை".

சத்தியம் 2: உயிரால் எது விரும்பப்படுகிறது?
ஒரு ஜீவன் தன்னை எதுவாக காண்கின்றதோ, தன்னை எதுவாக அடையாளப்படுத்தி பார்க்கின்றதோ,
தன்னை எதனோடு ஒன்றுப்படுத்திக்கொண்டு உணர்கின்றதோ,அதை சார்ந்தே அதன் உயிர் அடைய விரும்புவது அமைகின்றது, அதை சார்ந்தே அதன் உயிர் அடைய விரும்புவது நிர்ணயிக்கப்படுகிறது.

சத்தியம் 3: உங்கள் சிவத்தை சார்ந்து சக்தி இயங்கியே தீரும்
நீங்கள் எந்த கருத்தை ஆழ்ந்து உங்களுக்குள் உணர்கின்றீர்களோ, "சத்தியம்" என்று எதை நம்புகின்றீர்களோ - அது உங்கள் இருப்பாக ( Existence, Being ) மாறுகிறது, அதுவே உங்கள் சிவமாகிறது. உங்களின் சிவத்தை சார்ந்து சக்தி இயங்கியே தீரும். ஆழ்ந்து புரிந்து கொள்ளுங்கள்...எதுவாக உங்கள் இருப்பை நீங்கள் உணர்கின்றீர்களோ - அது "சிவம்". எதை நோக்கி நீங்கள் செயல்படுகின்றீர்களோ - அது "சக்தி". உங்கள் "சிவமே" உங்கள் சக்தியின் இயக்கத்தை, "சக்தி"யின் வெளிப்பாட்டை முடிவு செய்கின்றது.

சத்தியம் 4: ஜீவனின் உயிர்ப்பு குணம்
தன்னிடம் இல்லாத ஒன்றை தேடி ஓடுவது, தன்னிடம் ஒன்று இல்லை என்று நினைத்து அதை நோக்கி இயங்குவதுதான் ஜீவனின் உயிர்ப்புக் குணம், உயிர்ப்பு உணர்வு.
இனி இந்த சத்தியங்களை ஓர் உதாரணத்துடன் விரிவாக விளக்குகின்றேன்...
ஓர் ஜீவன் தன்னை "ஏழை" என்று ஒரு கருத்தோடு, "ஏழை" என்ற உணர்வோடு ஒன்றுபடுத்திக் கொள்ளுமானால்...
அதன் உயிரானது (Consciousness) பரம்பொருளை ( Super Consciousness ) அல்ல, பருப்பொருளைத் ( Matter ) தேடித்தான் ஓடும். தன்னை "ஏழை" என்று நம்பும் ஜீவன், தன் இருப்பை "ஏழ்மையாக" உணரும் ஜீவன்...தன் மொத்த சக்தியையும், உயிருரணர்வையும் பணத்தை தேடி இயக்கும், பொருட்களை தேடி ஓடும். தன்னிடம் " பணம் இல்லை" என்று ஓர் ஜீவன் நினைப்பதால், பணத்தை நோக்கி செல்வது ஜீவனின் உயிர்ப்புத்தன்மையாகிறது, உயிர்ப்பு குணமாகிறது.

ஆழ்ந்து புரிந்துகொள்ளுங்கள், எவரொருவர் தன்னை "ஏழை" என்று நினைக்கின்றாரோ, அவர் பணம் தேடி ஓடுகின்றார், பொருள் தேடி ஓடுகின்றார். எவரொருவர் தன்னை அறிவில்லாதவன் என்று நினைக்கின்றாரோ அவர் அறிவைத் தேடி ஓடுகின்றார். எவரொருவர் தன்னை பலமில்லாதவன் என்று நினைக்கின்றாரோ, அவர் பலத்தை தேடி ஓடுகின்றார். எவரொருவர் தன்னை அதிகாரமில்லதவன் என்று நினைக்கின்றனோ, அவர் அதிகாரத்தைத தேடி ஓடுகின்றார்.
இங்கு உயிரால் அடையப்பட வேண்டியதற்கும், உயிர் அடைய விரும்புவதற்கும் உள்ள இடைவெளியை ஆழ்ந்து நோக்குங்கள். உயிர் அடையவிரும்புவது, உயிர் அடைய வேண்டியது - இந்த இடைவெளிக்கு உணர்வில் கலந்து விட்ட மோகமே (யுவவயஉாஅநவெ) காரணம்.உங்களுக்குள் இருக்கும் மோகம் கரைந்தால், உங்கள் உயிரின் காரணம் புரியும், காமியம் சித்திக்கும்.
நன்றாக புரிந்து கொள்ளுங்கள், எவ்வளவு நாள்வரை நீங்கள் "ஏழை" என்ற முடிவில் நிலையாக இருக்கின்றீர்களோ, "ஏழை" என்ற முடிவுடன் ஒன்றுபட்டு இருக்கின்றீர்களோ, "ஏழை" என்ற கருத்துடன் மோகம் கொண்டு இருக்கின்றீர்களோ, அதுவரை உங்கள் உயிரணர்வு பணத்தை நோக்கித்தான் செயல்படும், பணத்தை தேடியே ஓடுவீர்கள். இங்கு நாம் "ஏழை" என்று எடுக்கப்பட்ட முடிவு "சரியா - தவறா" என்பதை பற்றிய ஆராய்ச்சிக்குள் செல்லவில்லை, அதைப்பற்றிய விவாதங்கள் செய்ய விரும்பவில்லை.நாம் இங்கு புரிய வைக்க முயற்சிப்பது....உங்களால் எடுக்கப்படும் ஓர் முடிவு, உங்கள் இருப்பாக இருந்து உங்கள் சக்தி செயல்பாட்டை, இயக்கத்தை நிர்ணயம் செய்கிறது என்பதை நீங்கள் உணர வேண்டும் என்பதே ஆகும். நீங்கள் ஏன், எதற்காக, எவ்வாறு இயக்கப்படுகின்றீர்கள் என்பதற்காக அறிவியலை அறிந்து கொள்ளுங்கள்.
உங்களை ஏழையாக உணர்வீர்களானால், நீங்கள் உங்களை ஏழை என்ற முடிவோடு அடையாளப்படுத்தி பார்த்தால், ஒன்றுப்படுத்தி பார்த்தால்... நேரடியாகவோ மறைமுகமாகவோ சமூகத்தின் விதிகளின்படியோ, விதிகளுக்கு அப்பாற்பட்டோ, நாட்டின் சட்டத்திற்கு உட்பட்டு அல்லது சட்டத்திற்கு அப்பாற்பட்டோ பொருளை தேடிக்கொண்டுதான் இருப்பீர்கள். ஏனென்றால் உங்கள் இதயத்தில் உங்களுக்குள் ஏழ்மை எனும் இந்த வெறுமையை உணர்வதால், அந்த வெறுமையை நிரப்புவதற்கு இயங்கியே தீருவீர்கள். எவ்வளவு நாள் உங்களை நீங்கள்"ஏழை" என்ற முடிவோடு காண்பீர்களோ, அந்த வெறுமையால், அந்த குறையுணர்வால் - அவ்வளவு நாள் வரை பணம் மட்டுமே உங்களால் தேடப்படும், பொருள் மட்டுமே தேடப்படும்.
நீங்கள் எந்த கருத்தை, சத்தியத்தை ஏற்கின்றீர்களோ...உங்கள் சிவமாக உணர்கின்றீர்களோ, உங்கள் இருப்பாக உணர்கின்றீர்களோ, அது சார்ந்து உங்கள் சக்தி இயங்கியே தீரும். இறைவனில்கூட பொருளை அளிப்பதற்காக அவர் வெளாப்படுத்துகின்ற பரிணாமத்தை மட்டுமே நினைந்து வழிபடுவீர்கள். நீங்கள் வழிபடுவது "இறை"யை அல்ல, வெறும் "இரை"யை அல்லது "இரை" கொடுக்கும் "இறை"யை! அடையப்பட வேண்டியதும் அடைய விரும்புவதும் ஒன்றாகும் அறிவியல்: அடையப்பட வேண்டியதற்கும் - அடைய விரும்புவதற்கும் - இரண்டிற்கும் நடுவில் இடைவெளாயோ அல்லது படைவெளாயோ இல்லாமல் இருக்கும் நிலையே பரமசிவஞானம் மலர்ந்த நிலை. இந்நிலையில் உங்களுக்குள் இருக்கும் சிவத்தன்மைக்கும் உங்கள் உயிருக்கும் இனிமையான உறவு மலரும்.
உங்களின் ஒரே ஒரு முடிவு போதும்: உங்கள் உயிருக்கும் - உங்கள் சிவத்தன்மைக்கும் இடையில் இருக்கும் இடைவெளா உங்களின் ஒரே ஒரு முடிவால் மாற்றம் பெற இயலும். ஆழ்ந்து புரிந்துகொள்ளுங்கள்...ஏற்கனவே பலமுறை உங்களை நீங்கள் "ஏழை" என்று முடிவு செய்ததால், அந்த முடிவை பலமுறை எடுத்ததனால் - இனி எப்போதும் உங்களை ஏழை, வறியவன் என்கின்ற இருப்பாகத்தான் உணர்ந்து வாழ வேண்டும் என்ற அவசியமில்லை. இதற்கு மேல் இதுபோன்ற ஒரு முடிவை எடுக்கமாட்டேன் என்றும், அம்முடிவிலிருந்து இயங்க மாட்டேன் என்றும் தீர்மானித்தது இயங்கினால் போதும்... செழுமை நோக்கி நகருவீர்கள், மாற்றம் தானாக நிகழும்.
எந்த இருப்பை உங்கள் இருப்பாக நீங்கள் மாற்றிக்கொள்ள முடிவெடுக்கின்றீர்களோ அதை நீங்கள் "வழிப்படுகின்றீர்கள்". அதன் "வழி"ப்படுகின்றீர்கள். அதை நோக்கி நீங்கள் "நெறிப்"படுகின்றீர்கள். அதை நோக்கி நீங்கள் முன்னேறிச் சென்று கொண்டு இருக்கின்றீர்கள்.
இது இறை அறிவியல்ா "இதற்குமேல் இந்த தவறான நினைக்கும் இருப்பில் இருந்து ஒதுங்கி, தவறான தன்மையை என்னுடைய சிவமாக உணர்வதை மாற்றி, உண்மையான பரமசிவத்தன்மையோடு என் இருப்புத்தன்மையை ஒன்ற வைத்துக் கொள்வேன்" என்று நீங்கள் முடிவுவெடுத்தால் உங்கள் ஜீவன் பரமசிவமயமாகும். பரமசிவனின் சக்தியை வெளிப்படுத்துவீர்கள். இந்த ஒரே ஒரு முடிவை தீர்க்கமாக, ஸ்திரமாக, உயிரின் ஆழத்தில் இருந்து சங்கல்பமாக எடுங்கள். இந்த ஒரே ஒரு முடிவால் உங்கள் வாழ்வு மேம்படத்துவங்கும். சைவத்தை வாழ்வோம் - உலகையே வாழ வைப்போம்: பரமசிவத்தன்மையை உங்கள் இருப்பு தன்மையாக மாற்றிக் கொள்வது என்ற முடிவு எடுத்து அதை நோக்கி செயல்பட துவங்குவது பரமசிவபக்தி. அதை நோக்கி உங்கள் எண்ணங்களை நெறிப்படுத்திக் கொள்வது பரமசிவநெறி. அதை நோக்கி உங்கள் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வது பரமசிவ வாழ்க்கை. இந்த முடிவை எடுத்தால் நீங்கள் "சிவபக்தன்".
ஆழ்ந்து புரிந்து கொள்ளுங்கள்.
நீரும் ருத்ராக்'மும், நினைவில் பாஞ்சாச்சரமும், ஊரும் ஆனந்தமும், சிவ உன்மத்த சுக போதமும், தேரும் திருவிழாவும் பரம்பொருள் பேரும் பெருநன்மையும் உணர்வில் பரமசிவத்தன்மை ஊறும் அன்பர்க்கே உடமை. யார் தன்னுடைய உணர்வு நிலையை, இருப்புநிலையை இதுவரை எதுவாக வேண்டுமானலும் இருந்து விட்டு போகட்டும்... இதற்கு மேல் அதை பரமசிவத் தன்மையாக மாற்றிக் கொள்வேன், அதற்காக எல்லா முயற்சியை எடுப்பேன் என்று முடிவெடுக்கின்றானோ...அவனுக்கு இந்த நீரும் ருட்ராக்'மும், நெஞ்சில் ஊறும் பாஞ்சாச்சரமும், தேரும் திருவிழாவும், உன்மத்த ஆனந்த சிவபோத ஞான களிப்பும் உடமையாகின்றது. உலகிற்கெல்லாம் அதை கொண்டு சேர்க்க வேண்டிய அந்த பரமசிவபக்தனின் கடமையாகின்றது, நம்முடைய கடமையாகின்றது. ஆழ்ந்து உள்வாங்கி கொள்ளுங்கள்... அடைய வேண்டியதும் - அடையப்பட வேண்டியதும் இந்த ஒன்றே ஒன்றுதான். இந்த ஒன்றே ஒன்றுபோதும், அனைத்து உலகிலும் எதுவெல்லாம் அடையப்பட வேண்டுமோ, அவை அனைத்தும் அடையப்பட்டுவிடும். மோகத்தால் தன்னை தன் சுய நிலையான, ஸ்வா அனுபவ சொரூப அனுபவ நிலையான பரமசிவ நிலையை உணராது...வறியவனாய், மூடனாய் திரிந்து, திரிபுபட்ட நிலையில் துரோபாவ நிலையில் இதுவரை வாழ்ந்தது போதும். பரமசிவனின் அருளால், பரமசிவனின் கருணையால் இந்த பரமசிவ ஞானத்தை பெற்று...பரமசிவ பரம்பொருளோடு ஒன்றிய நிலை - சாயுஜ்யநிலை பெற்று ஆனந்தமாக வாழ ஆசிர்வதிக்கின்றேன்.
நித்யானந்தம்.

# சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

*(17ம் பக்கத் தொடர்ச்சி)*

எங்களுக்கும் காலம் வரும்.. காலம் வந்தால் வாழ்வு வரும்.. வாழ்வு வந்தால் அனைவரையும் வாழ வைப்போமே!" என உணர்ச்சியும் துக்கமும் மேலிட இரு குழந்தைகளையும் மார்போடு அணைத்துக்கொண்டு பாடியவாறு அண்ணன் உயிர் பிரிவதும் நடிகையர்
திலகம் கதறி அழுது அண்ணன் மீது விழுந்து தன் உயிர் துறப்பதும்.. இன்றும் இக்காட்சியை பார்த்தாலே கூட விழிகள் குருதி சிந்தும்!
தொழில் பக்தி என்பது சிவாஜி அவர்களது ஊதியத்திற்கென்றில்லை. அதற்கும் அப்பாற்பட்டது. தமிழ் திரை உலகின் மிகச் சிறந்த நடிகர்களுள் ஒருவரான திரு சிவகுமார் அவர்கள் எழுதிய "இது ராஜபாட்டை அல்ல", என்ற நூலிலிருந்து ஒரு சம்பவத்தை சிவாஜி அவர்களின் தொழில் பக்திக்கு உதாரணமாக கூறலாம் என எண்ணுகிறேன்.
"...திருமங்கை மன்னன் பற்றிய காட்சி அது. தன் வாழ்நாளில் வி'ணு பகவானுக்கு ஒரு ஆலயம் கட்டியே தீருவேன் என்ற இலட்சிய வேட்கையுடன் கோயில் திருப்பணியைத் தொடங்குகிறான் மன்னன். கையில் செலவழிக்க பணம் குறைந்துவிட்ட நிலையில் வழிப்பறிக் கொள்ளை அடித்து கோயிலை கட்டி முடிக்க எண்ணுகிறான் மன்னன்.
ஒரு நாள் அதிகாலை திருமண கோ'டியொன்றை காட்டுப்பாதையில் மடக்கி நிறுத்துகிறான். கொள்ளைக்கார மன்னன் வந்திருந்தவர்களின் அத்தனை ஆபரணங்களையும் கழட்டிய பின்பு மணமகளின் காலில் மெட்டி என்று சொல்லப்படும் ஆழி ஒன்று மட்டும் கழட்டப்படாமல் இருக்கிறது. அது கொள்ளை தலைவன் கண்ணில் படுகிறது. "காலில் ஆழி மின்னுகிறது... கழட்ட மனம் வரவில்லையா" என்று கேட்க.. "அதை மட்டும் என்னால் கழட்ட முடியவில்லை நீயே கழட்டி எடுத்துக்கொள்", என மணமகன் பதில் சொல்கிறான். கொள்ளைக்காரன் மண்டியிட்டு குனிந்து கை விரல்களால் ஆழியை கழற்றிட முயன்று முடியாமல் பற்களின் துணையை நாடுகிறான். கால்விரல்களை வாய்க்குள் விட்டு ஆழியை பற்களால் கடித்து இழுத்து கழற்றிய போது, "திருமங்கை மன்னா என்னை உனக்குத் தெரியவில்லையா"" என்று மணமகன் உருவில் இருந்தவர் மகாவி'ணுவாக காட்சியளிக்கும் நிகழ்வினை படமாக்க வேண்டும். திருமங்கை மன்னனாக நடித்தவர் தமிழகத்தின் மிகப்பெரும் நடிகர். அவருக்கிருந்த செல்வாக்கிற்கு வானத்தையே வில்லாக வளைக்க முடியும். மகாவி'ணுவாக வேடமிட்டவர் திரையுலகிற்கு புதுமுகம். நடிப்பு வாசனை தெரியாத பிரபலமாகாத இளைஞன் காலைத் தான் தூக்கி வாயில் விரலை வைத்து கடிக்க வேண்டுமா? என கௌரவம் என்னாவது? புராணத்தை எத்தனை பேர் ஒழுங்காக படித்திருக்கப்போகிறார்கள்... கால் விரலுக்குப் பதிலாக கை விரலில் மோதிரம் இருப்பதுபோல் காட்சியை மாற்றி படமாக்கி விடுங்கள்..", என்று அன்று அவர் கூறியிருக்க முடியும். அவர் அப்படிச் சொல்லவில்லை! அந்த காட்சியை படமாக்குவதற்கு திருவடி சூலம் என்கிற கிராமத்தில் அதிகாலையிலேயே அனைவரும் கூடி விட்டோம். அங்கு வாழும் கிராமவாசிகள் காலைக் கடன்களை ஊரை அடுத்த திறந்தவெளியில் கழிப்பதே வழக்கம். படப்பிடிப்பிற்கு தீர்மானிக்கப்பட்ட இடமும் அந்தப் புல்வெளியேயாகும். ஒவ்வொரு காலடியையும் நன்றாக பார்த்து வைக்க வேண்டும். இல்லாவிடில் பாதம் அசிங்கப்பட்டு விடும். பலர் தங்கள் கால்களை அசிங்கப்படுத்திவிட்டு அசடு வழிந்தார்கள்.
காமிரா ஓடியது. வசனங்கள் பேசப்பட்ட உடன் கொள்ளைக்காரன் வேடத்திலிருந்த அந்தப் பெரிய நடிகர் மடாரென்று மண்டியிட்டு "அந்த புதுமுக நடிகரின் காலைத்தூக்கி தன் முழங்கால் மீது வைத்து கைகளால் ஆழியை கழட்ட முயன்றான் முடியவில்லை. மின்னல் வேகத்தில் பாதத்தை மேலே தூக்கி கால் விரலை வாய்க்குள் விட்டுக் கடித்து ஆழியை கழற்றி விட்டார்!
செய்யும் தொழிலை தெய்வமாக மதித்து, அந்தஸ்த்து பேதம் பாராமல், காட்சிக்கு ஏற்ப, அப்படி நடித்தவர் எங்கள் நடிகர் திலகம்.
தனது கால் விரலை சிவாஜியின் வாய்க்குள் கடிக்க வைத்தவர், அன்றைய புது முக நடிகர் இன்றைய சூரியா, கார்த்திக் ஆ கியோரின் தந்தையார் சிவகுமார் ஆவார். *காட்சிகள் விரியும்... வீணைமைந்தன்..!*



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 930



## ஆலடி விநாயகர் ஆலயம் திருகோணமலை

சூரபத்மனை அழித்து அவனுடைய கர்வத்தை அடக்கி அருள்புரிந்த பின்னர், வானவர்கோன் மகள் தெய்வயானையையும், மலைக்குறமன்னன்மகள் வள்ளிநாயகியையும் உலகியல்முறைப்படி, கற்பும் களவுங் காட்டித் திருமணம் செய்யும் திருவிளையாடலில் வைத்து, ஞானமும் தொழிலும் என்னும் அருட்பெருங்குணங்களோடு எழுந்தருளினார்.

அருட்பெருங் குணங்களோடு எழுந்தருளிய முருகப்பெருமான், தேவியர் இருவரோடும் திருப்பரங்குன்றம், திருக்கந்த வெற்பு ஆகிய அற்புதத் தலங்களிலே தன்னுடைய திருக்கோலத்தைக் காட்டி, அடியார்க்கருளி கோயில் கொண்டருளினார். பின்பு உலகத்திலுள்ள உயிர்களெல்லாம் பயனடைய எண்ணங்கொண்டு, அடியார்கள் பரவிய இடங்களிலெல்லாம் தமது திருக்கோலத்தைக் காட்டி, அவர்களுக்கும் அருள்பாலித்து வருகின்றார். இலங்கைத்தீவின் வடபால் யாழ்ப்பாணத்திலும் வேறும் பற்பல இடங்களிலும் முருகப்பெருமானின் அருள்வெளிப்பட, அடியவர்கள் ஆங்காங்கே திருக்கோயில் அமைத்து வழிபட்டு வரலாயினர்.

இவ்வாறு வழிபாடியற்றப்பட்ட அற்புதத் தலங்களுள், கந்தவனம் என்னும் திருத்தலம் மிகப்பழமைபெற்று விளங்குகின்றது. இத்திருப்பதி அமைந்துள்ள ஊர், "விரிதலைத்தெங்கும் பொரியரை யிருப்பையும் முடந்தாட் பலவும் நெடுந்தாட் பெண்ணையும் கண்ணுடைக் கரும்பும் விண்ணுயர் புகமும் தீம்பழக் கதலியும் மாம்பழ மரங்களும் வானுயர் வன்னியும் தேனவர் படைப்பையும் புடைசூழ, மாதவர் மடங்களும் ஓதனச்சாலையும் நறுநீர்க் கூவமும் மறுவின்றி விளங்க" அருட்பொலிவோடு சிறப்புடன் திகழ்கின்றது. முற்காலத்திலே திருமாலும், நான்முகனும், தேவர்களும் வழிபாடு செய்ய, அவர்களுக்கு நல்லருள் பாலித்த அற்புதத் தலம் என, தக்கணகைலாயமான்மியத்திலே கூறப்பட்டுள்ளது.

கந்தவனம் அருள்மிகு சுப்ரமணியசுவாமி கோயில் அமைந்துள்ள ஊரான பொலிகண்டி, பல்வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. பொலிகண்டி என்பது தூய தமிழ்ப் பெயராகக் காணப்படுகின்றது. களத்திலுள்ள மணியை பொலி என வழங்கும் வழக்கு காணப்படுகின்றது. பொலியினாற் சிறந்த பூமியை, பொலிகண்டி என அழைப்பது பொருத்தமுடையதாக அமைந்துள்ளது. இவ்வூரில் வேளாண்மைத் தொழிலும், மீன்பிடித்தொழிலும் முதன்மை பெற்றுக் காணப்படுகின்றது. இருவகைத் தொழிலாளர்களின் வழக்கிலுள்ள இரு சொற்களும் இணைந்து, பொலி - நெல், கண்டி - மீன்பிடிக்கருவி என்ற பொருளில், பொலிகண்டி என்ற பெயர் ஏற்பட்டதென்பது ஆய்வாளர் கருத்தாகக் காணப்படுகின்றது. அத்தோடு முருகன் எழுந்தருளியுள்ள இடங்களிலே சில, கண்டி என்ற ஈற்றுப்பெயரோடு காணப்படுகின்றது. பொலி என்றால் அழகு, பொலிவு என்ற கருத்தினைக் கொண்டு நோக்கும்போது, முருகன் எழுந்தருளியுள்ள எழிலான இடம், பொலிகண்டி எனவும் பொருள் கொள்ளலாம்.

ஆர்ப்பரித்தெழும் அலைகடலோடு இக்கோயிலின் சூழல் ஆதியில் மிக அழகான சூழ்நிலையிலே காணப்பட்டுள்ளது. பிரதானவீதியிலிருந்து கோயிலுக்குச் செல்லும் வீதியில் மிகப்பெரிய சுமைதாங்கியும், அதனை அடுத்து மிகப்பெரிய தங்கு மடமும் காணப்பட்டுள்ளது. அங்கிருந்து ஆலயத்தை நோக்கிச் செல்லும்பொழுது வைரவர்கோயிலும் திருக்குளமும் காணப்பட்டது. மடங்களை அடுத்து நன்னீர்க் கிணறுகளும் காணப்பட்டன. தற்காலத்திலே மடங்களும், குளமும், கிணறுகளும் அழிந்து தூர்ந்து காணப்படுகின்றன.

இக்கோயிலின் முன்வீதியிலுள்ள மடத்திலே, தினமும் அன்னதானம் நடைபெற்றுள்ளது. ஆனால் தற்காலத்திலே அடியவர்கள் தமது வேண்டுதல்களை நிறைவேற்ற, அவ்வப்போது அன்னதானம் வழங்கி வருகின்றனர். இவ்வாறான சிறப்புடைய இவ்வாலயத்திலே, 1997 ஆம் ஆண்டு, பாலஸ்தாபன கும்பாபி'கம் நடைபெற்று பல்வேறு திருப்பணிவேலைகள் ஆரம்பிக்கப்பட்டது. ஆலயதூபிகள், மண்டபங்கள், கூரைகள், நிலங்கள் முதலிய யாவும் புனரமைக்கப்பட்டு, ஆறுமுகசுவாமி மண்டபம், மகாமண்டபம், வசந்த மண்டபம், ஆகியவற்றின் சேதமுற்ற விமானங்கள் ஆகியனவும் புதுப்பிக்கப்பட்டது. விமானத்துடன் கூடிய யாகசாலை, வைரவர் ஆலயம், மணிக்கூட்டுக்கோபுரம், மடப்பள்ளி, களஞ்சியஅறைகள், முதலியவற்றை புதிதாக நிர்மாணிக்கவும், திருத்தேர், சப்பறம், தீர்த்தக்குளம் ஆகிய திருப்பணிகளை நிறைவேற்றவும் தேவஸ்தான திருப்பணிச்சபை செயலாற்றி வருகின்றது. இதன்பின்னரும் காலத்திற்குக் காலம் இவ்வாலய திருப்பணிகள் பலவும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கந்தவனம் திருப்பதியில் எழுந்தருளியுள்ள முருகனை அருணகிரிநாதர் திருப்புகழால் பாடி ஏற்றிப்போற்றியுள்ளார். உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் அவர்கள், நான்மணிமாலை பாடி கண்பார்வை பெற்ற அற்புதத் தலமாக இத்தலம் திகழ்கின்றது. நவாலியூர் தமிழ்த் தாத்தா சோமசுந்தரப் புலவர், கந்தவனத்திலே எழுந்தருளியுள்ள முருகனைப் போற்றி, நான்மணிமாலை, திருப்பள்ளி எழுச்சி ஆகியன பாடிப் போற்றியுள்ளார். தமிழ்நாட்டுப் பேராசிரியர் கா.கோ. வெங்கடராமன் "கந்தவனக் கலம்பகம்" பாடி முருகப்பெருமானுடைய திருவருளைப் பெற்றுள்ளார். கொழும்புத்துறை யோகர்சுவாமிகள், அனேககாலம் இங்கு எழுந்தருளியுள்ள பெருமானை வழிபாடு செய்துள்ளார். இவ்வாறான பல சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்ட திருக்கோயிலாக பொலிகண்டி கந்தவனம் அருள்மிகு சுப்ரமணியசுவாமி கோயில் காணப்படுகின்றது.

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனையசொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களதுவிருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# மரண அறிவித்தல்

பிறப்பு
11-04-1943



இறப்பு
18-01-2021

## திருமதி தேவகடாட்சம் ஜெகதாம்பாள்

**அரியாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவில் பிரம்டன் நகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகதாம்பாள் தேவகடாட்சம் அவர்கள் கடந்த 18-01-2021, திங்கட்கிழமையன்று காலமானார்.**

அன்னார்,அரியாலை, காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு-செல்லம்மா தம்பதியின் புதல்வியும் அரியாலை, காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை கனகம்மா தம்பதியின் மருமகளும், காலஞ்சென்ற தேவகடாட்சம் (இலங்கை போக்குவரத்துச் சபை) அவர்களின் அன்பு மனைவியும்,

சுதர்சன்(கனடா), ஜெயந்தி (கனடா) ரேவதி (இலங்கை), ரேணுகா(கனடா), தனுகா (கனடா), சுரேந்திரன் (கனடா), ஆகியோரின் அன்புத் தாயாரும்,

கல்யாணி( (கனடா) புலேந்திரன் (கனடா),ஜெகசோதிநாதன் (இலங்கை), உதயகுமார் (இலங்கை), யோகநாதன் (கனடா) ,மீராதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும்,

காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்( விதானையார்), கமலாம்பிகை, மற்றும் கிருஸ்ணசாமி (மொ-ன்றியால்- கனடா) ஆகியோரின் பாசமுள்ள சகோரியும், காலஞ்சென்ற, ஐயாத்துரை மற்றும் தங்க-லெட்சுமி (இங்கிலாந்து), கமலினி (மொன்றியால்- கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், துர்க்கா, தீபிகா, ஹேமலா, லக்சலா, சசிணா,திவாகரன், கீர்த்தனா, ஜசீக்கா, லவிணா, அபினா, சாயினி, அஸ்வினி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21-01-2021 வியாழக்கிழமையன்று நடைபெற்று பின்னர் தகனக்கிரியைகள் நடைபெற்றது.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

தகவல்: குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:-
சுதர்சன்- 905 927 9171
ஜெயந்தி- 905 230 8780
ரேவதி (இலங்கை)- +94212229065
தனுகா- 905 799 8809










25 வெள்ளி விழா 2021 UTHAYAN உதயன்

உதயம் 1294 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 22, 2021

# ரொரன்ரோ நகரசபை வட்டாரம் 22 இற்கு புதிய கவுன்சிலராக தேர்ந்தெடுக்கட்டுள்ள Nick Mantas



கடந்த சில மாதங்களாக வெற்றிடமாகவிருந்த கனடாவின் ரொரன்ரோ நகரசபைக்கான வட்டாரம் 22 இற்கு புதிய கவுன்சிலரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் கடந்த வெள்ளிக்கிழமை காலை தொடக்கம் மாலை வரை நடைபெற்றது. இந்த தேர்தல் முடிவுகளின்படி 24 மொத்த வேட்பாளர்களில் Nick Mantas என்பவர் 3021 வாக்குகளைபெற்று கவுன்சிலராகத் தேர்ந்தெடுக்கட்டுள்ளார் என ரொரன்ரொ நகர சபை வட்டாரங்களிலிருந்து வெளியான செய்திகள் தெரிவிக்கின்றன. எவ்வாறாயினும் அடுத்து வரும் கிழமை நாட்களில நகர சபையின் பிரதம எழுதுனரின் மேற்பார்வைக்குப் பின்னரே இந்த வெற்றி உறுதி செய்யப்ப்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெற்றுள்ள திரு மென்டாஸ், முன்னாள் கவுன்சிலரும் தமிழர்களின் நண்பருமான ஜிம் கரிஜியானிஸ் அவர்களின் முன்னாள் தலைமை அதிகாரியாக கடமையாற்றியவர் என்பதும், அதனால் தற்போதைய மேயர் ஜோன ரோரி அவர்கள் திரு மென்டாஸின் வெற்றியை வரவேற்றுள்ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த வாரத்தில் எமது கனடா உதயன் பத்திரிகையும் வெற்றியீட்டியுள்ள திரு மென்டாஸிற்கு வாழ்த்துக்களை தெரிவித்திருந்த அதேவேளை, அவருக்கு வாக்களிக்கும் வண்ணம் வேண்டுகோள் விடுததிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். தனது வெற்றி தொடர்பாக நேற்று திரு நிக் மென்டாஸ் உதயன் ஆசிரிய பீடத்தின் அங்கத்தவர்களோடு உரையாடுகையில் தமிழ் மக்களுக்கு தொடர்ந்து சேவையாற்ற தான் என்றும் தயாராக உள்ளதை பத்திரிகை மூலமாக எடுத்துச் சொல்லும்படியும் கேட்டுக்கொண்டார்.

## Canada''s Governor General Julie Payette steps down from her job

# கனடாவின் ஆளுனர் நாயகம் Julie Payette பதவி விலகுகின்றார்



கனடாவின் ஆளுனர் நாயகமாக சில ஆண்டுகள் பணியாற்றிய Julie Payette பதவி விலகவுள்ளதாக நேற்று ஒட்டாவா மாநகரில் அறிவித்துள்ளார். கின்றார். இந்த முடிவை எடுப்பதற்கு அவருக்கு காரணமாக அமைந்தது, ஆளுனர் நாயகம் அவர்களின் செயலாளராக பணியாற்றிய Assunta di Lorenzo என்னும் பெண்மணி ஒருவரோடு இணைந்து அவர்கள் அலுவலகத்தில் பணியாற்றிய ஊழியர்களுக்கு பணிகள் தொடர்பான அழுத்தங்கள் மற்றும் துன்புறுத்தல்கள் ஆகியவற்றை பிரயோகித்தமை தொடர்பானவை என்று அறியப்படுகின்றது.

மேற்படி ஊழியர்களுக்கு பணிகள் தொடர்பான அழுத்தங்கள் மற்றும் துன்புறுத்தல்கள் ஆகியவற்றை பிரயோகித்தமை தொடர்பான விசாரணைகளை நடத்திய சுதந்திரமான குழு ஒன்று மேற்படி குற்றச்சாட்டுகளுக்கு காரணமானவர் ஆளுனர் நாயகம் Julie Payette தான் என்ற முடிவை அரசாங்கத்திற்கு சமர்ப்பித்த நிலையில் இந்த பதவி விலகும் முடிவை ஆளுனர் நாயகம் எடுத்துள்ளதாக ஒட்டாவாவிலிருந்து எமக்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கெனவே பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான இவர் மீது தொடர்ச்சியாக விசாரணைகள் நடைபெற்று வந்ததாகவும், ஆனாலும் ஒரு ஆளுனர் நாயகம் என்ற வகையில் மேற்படி விசாரணைகள் தொடர்பான விபரங்கள் ஊடகங்களில் வெளியாகவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

2011 ஆண்டில் ஒரு கார் விபத்தில் ஒரு பெண்மணியின் இறப்பிற்கு காரணமாக இருந்தவர் தற்போதைய ஆளுனர் நாயகம் Julie Payette தான் என்பதை கடந்த 2017 செப்டம்பர் மாதம் 20ம் திகதி தான் நீதி மன்றத்தின் மூலம் வெளிப்படையாக அறிவிக்கப்பட்ட நிலையிலும் ஆளுனர் நாயகமாக பதவி வகித்த இவர் தனது முன்னைய குற்றங்களை மறைத்துள்ளார் என்ற குற்றச்சாட்டுகளும் இவர் மீது அப்போது வைக்கப்பட்டன.

இவ்வாறான குற்றச்சாட்டுக்களுக்கு இடையில் அவரது அலுவலகத்தில் ஊழியர் மீதான துன்புறுத்தல்கள் மற்றும் நெருக்குவாரங்கள் தவிர இவரது பணிகள் தொடர்பாகவும் சில குற்றச்சாட்டுக்கள் இருந்தாகவும் கூறப்படுகின்றது.

இதன் பிரகாரம், ஒரு ஆளுனர் நாயகம் அவசியம் விஜயம் செய்ய வேண்டிய மாகாணங்கள் மற்றும் பிராந்தியங்கள் ஆகியவற்றில் மனிற்றோபா, சஸ்க்கச்சவான், மற்று யூகோன் ஆகிய பிரதேசங்களுக்கு விஜயம் செய்யாமல் தவிர்த்தும் இவர் மீது விசாரணைகளை மேற்கொள்வதற்கு காரணமாக அமைந்தன என்று தற்போது தெரியவந்துள்ளது.



# புகழ்பெற்ற பிரான்ஸ் வாழ் எழுத்தாளர் வண்ணைத் தெய்வம் காலமானார்

இலங்கையிலிருந்து பல ஆண்டுகளுக்கு முன்னர் பிரான்ஸ் தேசத்திற்கு புலம்பெயர்ந்து அங்கிருந்து கலை இலக்கிய மற்றும் சமூகப்பணிகளில் ஈடுபட்டு வந்த புகழ்பெற்ற எழுத்தாளர் வண்ணைத் தெய்வம் தனது 71வது வயதில் காலமானார் என்ற சோகமான செய்தியை எமது வாசக அன்பர்களோடு ம் கலை இலக்கிய நெஞ்சங்களோடும் பகிர்ந்து கொள்கின்றோம். யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகத்திற்கு அருகில் உள்ள கலட்டி என்னும் இடத்தில் பிறந்த மறைந்த வண்ணைத் தெய்வம் அவர்கள் பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்தாலும் உலகெங்கும் பரந்து வாழும் கலை இலக்கிய நண்பர்களோடு நன்கு தொடர்புகளை பேணிய வண்ணம் நட்பையும் பேணி வந்தார் என்பதும், கனடாவிற்கு சில தடவைகள் பயணித்து புத்தக வெளியீட்டு விழாக்களை இங்குள்ள இலக்கிய நண்பர்களோடு இணைந்து நடத்தியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவர் தொகுத்த ஒரு அற்புதமான வெளியீட்டில் உலகெங்கும் வாழும் நூற்றுக்கணக்கான தமிழ் இலக்கியவாதிகளைப் பற்றிய விபரங்களை அழகிய முறையில் பிரசுரித்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

